

# குற்றவாளிக் கூண்டில்

## IMF & WORLD BANK

### சர்வதேச நிதி நிறுவனமும் உலக வங்கியும்

பகுதி 2

சூசன் ஜார்ஜ்

# A FATE WORSE THAN DEBT

Part II

# குற்றவாளிக் கூண்டில்

IMF & WORLD BANK

## சர்வதேச நிதி நிறுவனமும் உலக வங்கியும்

பகுதி II

# குற்றவாளிக் கூண்டில்
# IMF & WORLD BANK
## சர்வதேச நிதி நிறுவனமும் உலக வங்கியும்

பகுதி II

## சூசன் ஜார்ஜ்

---

'A Fate Worse Than Debt' — The World Financial Crisis and the Poor by Susan George 1990 என்ற புத்தகத்தின் இரண்டாம் பகுதியே இந்நூல். இந்நூலின் முதல் பகுதி 'மூன்றாம் உலகநாடுகளின் கடன் பிரச்னையும் அதற்கு காரணமானவர்களும்' என்கிற தலைப்பில் ஜூன் 1994 இல் வெளியானது.

---

SAB

சவுத் ஏசியன் புக்ஸ்

Other Books by Susan George

- How the other Half Dies : The Real Reasons for World Hunger.
- Feeding the Few : Corporate Control of Food
- Food for Beginners
- Ill Fares the Land : Essays on Food, Hunger and Power.

We thank the author Ms. Susan George
for getting the permission
to translate the book in Tamil.

குற்றவாளிக் கூண்டில் சர்வதேச நிதிநிறுவனமும்
உலக வங்கியும் — பகுதி II

சூசன் ஜார்ஜ்

தமிழில் : நெடுஞ்செழியன், குமாரசாமி,
புருஷோத்தம், பானுமதி, சசிதரன்

முதல் பதிப்பு : பிப்ரவரி 1995
அச்சு : சூர்யா அச்சகம், சென்னை-41
வெளியீடு : பப்ளிக் இண்ட்ரஸ்ட் ரிசர்ச் குருப்புடன்
சவுத் ஏசியன் புக்ஸ்
6/1 தாயார் சாகிப் 2ஆவது சந்து,
சென்னை-600 002.

ரூ

BOOK CENTRE
A.C.D.I.L.

## உள்ளே...


ஆசிரியர் அறிமுக உரை 7

1. மொராக்கோ—ஒரு இடைநிலை மாதிரி கசப்பான அறுவடை. 11

2. ஆப்பிரிக்க கடன்—கறுப்பு மனிதனின் துயரச்சுமை 28

3. சயர்—கோழிமுட்டை? 64

4. லத்தின் அமெரிக்கா—கடனும், அதளபாதளச் சரிவும் 84

5. லத்தின் அமெரிக்கா—துயரத்தின் எல்லையில் 116

6. கடனும் சுற்றுச்சூழலும்—சூழல் கொலைக்கு நிதி 138

# பதிப்புரை

இந்த புத்தகத்தின் முதல் பகுதி வெளிவந்து எட்டு மாதங்கள் ஆகிவிட்டன. இரண்டாம் பகுதியான இந்நூலை அலுவலகத்திலே சரி பிழை பார்த்துக் கொண்டிருந்த எமது பதிப்பக நண்பர் கேட்டார்: ''இவ்வளவு விரிவாக அந்நிய கடன் பற்றியும், அதை வாங்கிய நாடுகளின் கதியை பற்றியும் விவரிக்கப் பட்டுள்ளதே இதன் முதல் பகுதி எப்படிப்பட்ட வரவேற்பை பெற்றது'' என வினவினார். நான் சிரித்துக் கொண்டே ''அதான் பார்க்கிறீங்களே உங்க தலைமேல இருக்கிற பறன்மேலே'' என்று கூறினேன். வருந்துதற் கான விஷயங்களையும் சில சந்தர்பங்களில் சற்று சிரிப் புடன் எடுத்துக் கொண்டால்தான் நமது செயல்பாட்டு திறன் வற்றிவிடாமல் இயங்கும்.

முதல் பகுதியின் பதிப்புரைக்குப் பின் புதுசா சொல்ல ஏதுமில்லை என்றே தோன்றுகிறது. இதன் மூன்றாம் பகுதியும் நிச்சயம் வந்தே தீரும்.

**எம். பாலாஜி**

21-2-95

ஆசிரியர் அறிமுக உரை

# மக்களும் இக்கிரகமும்

உலக நிதி விளையாட்டு அரங்கில், மிகச் சமீபத்தில் குதித்த ஆட்டக்காரன் சர்வதேச நிதி நிறுவனமாகும். 1960 களிலும் 1970 களிலும் பெரும்பாலான நாடுகளின் மீது அதன் தாக்கம் அவ்வளவாக இருக்கவில்லை. இதற்கு முக்கிய காரணம், அவ்வளவு நிபந்தனைகள் இல்லாமல் பிறநாடுகள் கொடுத்த கடனை, அவை உபயோகித்து வந்தன. அச்சமயங்களில் உலக வங்கியின் கொடி வானளாவப் பறந்தது. இன்று நிதி நிறுவனம் விதித்துவரும் கட்டுப்பாடுகளை, அன்று உலக வங்கி விதித்து வந்தது.

உலக வங்கி பரிந்துரை செய்த வளர்ச்சிக் கொள்கைகளின் விளைவாக ஏற்பட்ட விபரீதங்கள் தென்துருவமெங்கும் சிதறிக் கிடந்தன. அக்கொள்கைகள், சமுதாயம் மொத்தத்தையும் முடமாக்கின.

இரண்டாம் பகுதியான இதில், அப்போது கோலோச்சி இருந்த வளர்ச்சி மாதிரியின் பின்வளைவுகள் மக்களையும், சுற்றுச்சூழலையும் எப்படிக் கடனாளியாக்கின என்பது விரிவாக விளக்கப்பட்டுள்ளது. இதில் முதலில் ஆப்பரிக்கா கவனத்தில் எடுத்துக்கொள்ளப் பட்டுள்ளது. இதற்கு காரணம், வேறு எந்த நிதி அமைப்புகளும், இந்த வறிய கண்டத்தின் நிலைமை குறித்து கவனம் செலுத்தாதது ஆகும். நிதி நிறுவனங்களின் கூட்டமைப்பின்படி இது புரிந்துகொள்ளத்தக்கது. உலக நிதியமைப்பு மீது சிறு சலனத்தைகூட ஏற்படுத்து

முடியாத ஒரு கண்டத்தின் கடன் குறித்து அவர்கள் ஏன் அலட்டிக் கொள்ள வேண்டும்? அவர்கள் அதைத் திருப்பிக் கட்ட எப்படி சிரமப்பட்டால் நமக்கு என்ன? எதை அடகு வைத்தால் நமக்கு என்ன? என்ற பரந்த மனப்பான்மைதான் காரணம்! பின்னர் வருகிறது லத்தீன் அமெரிக்கா. ஒரு காலத்தில் ஏகபோகச் செழிப்பில் இருந்த அந்நாடுகளில் இன்று வேலையில்லாத் திண்டாட்டம், பசி, பட்டிச் சாவுகள் போன்றவை தலைவிரித்து ஆடுகின்றன. மேலும் மேலும் லட்சக்கணக்கான மக்கள் சமுதாயத்தின் விளிம்பிற்கு தள்ளப்பட்டனர். சுற்றுச்சூழல் கடுமையான சீரழிவிற்கு ஆட்பட்டது.

மொராக்கோவில், சர்வதேச நிதிநிறுவன உலக வங்கி மாதிரி சடங்கு ரீதியாக மேற்கொள்ளப்பட்டன. இது படுபயங்கரமான விளைவுகளுக்கு இட்டுச் சென்றது. நிதி நிறுவனக் கலவரங்கள் என்றழைக்கப்பட்ட கலவரங்களில் ஏராளமானோர் கொல்லப்பட்டனர்.

ஆப்பரிக் கடன், கறுப்பு மனிதனின் சுமை என்ற அத்தியாயத்தில் ஜாம்பியா, கென்யா, தான்சானியா போன்ற கிழக்காப்பிரிக்கா நாடுகளின் கதி அலசப் படுகிறது. அங்கு பொருளாதார நடவடிக்கைகள் சுருங்கிக் கொண்டும், மனித அவலங்கள் அதிகரித்துக் கொண்டும் இருக்கின்றன. சயர்—கோழிமுட்டை என்ற அத்தியாயம், எப்படி அந்நாட்டில் ஊழல் தலைவிரித்து ஆடியது, அது எவ்வாறு மக்களின் கடுமையான பட்டிச் சாவுகளுக்கு இட்டுச் சென்றது என்பதையும், ஆனால் அதனால் எல்லாம் அசந்துவிடாமல், எப்படி நிதி நிறுவனங்கள் தொடர்ந்து அங்கு கடனை வாரி கொட்டிக் கொண்டு இருந்தன என்பதையும் விவரிக்கிறது.

லத்தீன் அமெரிக்கா—கடனும் அதளபாதள சரிவும் என்ற அத்தியாயத்தில், சிலி போன்ற சர்வாதிகார நாடுகளாக இருந்தாலும் சரி, சமீபத்தில், மக்களாட்சிக்கு வந்துள்ள பிரேசில், அர்ஜென்டீனா போன்ற நாடுகளாக இருந்தாலும் சரி, நிதி நெருக்கடிக்கு முதல் பலி வேலைதான் என்பது விளக்கப்படுகிறது. அடுத்து உணவு மாயமாய் மறைந்துவிடும்.

லத்தீன் அமெரிக்கா—துயரத்தின் எல்லையில் என்ற அத்தியாயத்தில், கடன் நெருக்கடியால் எவ்வாறு லத்தீன் அமெரிக்கச் சமுதாயங்களில் எப்படி மக்கள் எதிரும் புதிருமான நிலைக்கு தள்ளப்பட்டனர் என்பது விளக்கப் படுகிறது. ஒருபுறம் சிறுபான்மையினரான செல்வந்தர் கள், மறுபுறம் கோடிக்கணக்கில் ஏழை, எளிய மக்கள்—நடுவில் மாயமாய் மறைந்துகொண்டிருக்கும் மத்தியதரவர்க்கம். இதில் எதிர்கேள்வி கேட்போரை, வெறுமனே சுட்டுத்தள்ளும் டொமினிகன் குடியரசு போன்ற நாடுகளும் இடம்பெறுகிறது.

இறுதி அத்தியாயத்தில், எவ்வாறு கடன் நிதியால் உருவாக்கப்பட்ட திட்டங்கள், சூழல் பேரழிவுகளை தோற்றுவித்துள்ளன என்பது எடுத்துரைக்கப்படுகிறது. இன்று உண்மையில் இயற்கை வளங்கள் 'தள்ளுபடி விலையில்' விற்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

# பகுதி II

# II વિષય

# 1

# மொராக்கோ : ஒரு இடைநிலை மாதிரி-கசப்பான அறுவடை

காரல் மார்க்ஸால் சாதிக்கமுடியாததை சர்வதேச நிதி நிறுவனம் சாதித்து விடுமா? மேற்கில் அந்நாடுகள் பயந்துகொண்டு இருப்பதுபோல கம்யூனிச சித்தாந்தத்தின் மூலமாக புரட்சி வருகிறதோ இல்லையோ, நிதி நிறுவனத்தின் கடன் கொள்கைகள் மூலமாக புரட்சி வருவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம். புரட்சிக்கு முதற்படியான கலவரங்கள், நிதி நிறுவனத்தின் கடன் கொள்கைகளால் அதிகரித்து வருகின்றன. நிதி நிறுவனத்தால் முன் வைக்கப்பட்டு, உலக வங்கியாலும், மூன்றாம் உலக மேட்டுக் குடியினராலும் போற்றி பாதுகாக்கப்படுகிற வளர்ச்சிக் கொள்கைகள், சமுதாய ரீதியாக பேரழிவைக் கொண்டு வருவதை தவிர்க்க முடியாது என்ற நிலை நிலவுவது துரதிர்ஷ்டவசமானதோடு, முரண்பாடானதும் கூட. வளர்ச்சி மாதிரியில் கடன் என்பது ஒரு கட்டாயமான, தவிர்க்க முடியாத அம்சமாக விளங்குகிறது என்பது இப்போது தெளிவாகியுள்ளது.

உலக வங்கியாலும், சர்வதேச நிதி நிறுவனத்தாலும் பரிந்துரை செய்யப்படுகிற வளர்ச்சி திட்டங்கள்

வெளிப்பார்வை கொண்டவை. ஆகவே அவற்றால் உள்ளூர் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய இயலாது. அது அதன் நோக்கமுமல்ல. வர்த்தகம் பெருகி, மறைமுகமாக, வளமை மூலமாக ஏதாவது பயன் ஏற்பட்டால், போனால் போகிறது என்று விட்டுவிடப் படுவது உண்டு. உண்மையில் அதன் கவலையெல்லாம் சர்வதேச சந்தை மேல் மட்டும்தான். உலக வங்கியின் பேருரைகளை தங்கள் சிரம் மேல் தாங்கி செயல்படுத்தும் முயற்சியில் பத்து, பதினைந்து நாடுகள் குதித்துள்ளதால், அவைகளுக்கு இடையே ஒரு போட்டி தவிர்க்க இயலாத ஒன்றாக உருவெடுத்து உள்ளது. இந்நாடுகள் சர்வதேச வாடிக்கையாளர்களிடம் விற்பதற்காக, தங்களது பொருட்களின் விலையைக் குறைத்து வைத்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகியிருப்பதால், அவை தங்களது தொழிலாளர்களின் ஊதியத்தையும் ஒரு கட்டுக்குள் வைத்திருக்கின்றன. அதே போல, சிறிய விவசாயிகளின் விளைபொருள்களுக்கும் மிகக் குறைந்த விலையே அளிக்கப்படுகிறது.

இம்மாதிரியான வளர்ச்சி காலூன்றத் துவங்கியதும், முதலீடுகள், ஏற்றுமதித்துறை நோக்கி பாயத் துவங்கும். உள்நாட்டு மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் துறைகளுக்கு கிடைக்கும் நிதி குறையும். உள்ளூர் விவசாயிகள மற்றும் தொழிலாளர்கள் வயிற்றில் அடித்து, விலைகளை எவ்வளவு குறைத்தாலும், சர்வதேச போட்டி என்பது வெட்டு, குத்துதான். உலக வங்கியும், நிதி நிறுவனமும் ஆசை காட்டும் செழிப்பான சர்வதேச சந்தைகள், ஒரு சமயத்தில், வளர்ந்த நாடுகளின் தற்காப்பு சுவர்களால் அடைபட்டு போய்விடும். திடீரென்று எவருக்குமே மூன்றாம் உலக டி—ஷர்ட்கள் தேவைப்படாது; பருத்தித் துணிகளும், ஆரஞ்சுகளும், தக்காளிகளும் சீண்டுவாரற்று போய்விடும். சில சமயம், மூன்றாம் உலகின் ஒப்புதல் இல்லாமல், வடக்கு எடுக்கும்

தான்தோன்றித்தனமான முடிவுகள், மூன்றாம் உலகின் தலைவிதியையே மாற்றிவிடும். உதாரணமாக, அதிகமான எலுமிச்சை போன்ற பழங்களையும், பருவகாலமற்ற காய்கறிகளையும் உற்பத்தி செய்யும் ஸ்பெயினும், போர்ச்சுக்கலும், ஐரோப்பிய கூட்டுக் குடும்பத்தோடு, தங்களை இணைத்துகொண்டவுடன், வடஆப்பிரிக்காவின் ஏற்றுமதிக்கான பண்ணைப் பொருட்களால் ஐரோப்பிய கூட்டுக் குடும்பத்திற்குள் தடைகளை கடந்து நுழைய முடியவில்லை.

ஆனால், நிலைமை இப்படியிருக்க, இந்த ஏற்றுமதியை நம்பி, கடன் வாங்கிய பணத்தில் ஏகப்பட்ட கட்டுமானங்கள் வாங்கப்பட்டு விட்டன. அதற்கு வட்டி கட்டியாக வேண்டும். அந்நியக் கடனை அடைக்கத் தேவையான அடிப்படையான அந்நியச் செலாவணியை ஈட்ட, வெளிநாடுகளுக்கு அதிகப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்காக போக்குவரத்து, மின்சக்தி, நீர்ப்பாசனம் போன்றவற்றிற்கு தேவையான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் அதிகமாக உழைக்கின்றன. ஆனால், ஏற்றுமதிச் சந்தைகள் சுருங்கும் போது, இந்த விலைமதிப்புமிக்க கட்டுமானங்கள் மெதுவாக துருப்பிடித்து, அதன் உண்மையான திறனில் ஒரு சிறிய அளவிலேயே இயங்குகின்றன. இதற்கிடையே, உள்ளூர் சந்தைகள் வெகுகாலம் கவனிப்பாரற்று விடப்பட்டு விட்டதால், இந்தத் தளர்வை அதனால் ஈடுகட்டமுடிவதில்லை. லட்சக்கணக்கானோருக்கு வேலை கிடையாது; வேலை கிடைத்தவர்களின் ஊதியங்களோ கால்வயிறு கஞ்சி குடிக்கக்கூட போதாது; அப்படியிருக்க, ஏற்றுமதிக் கண்ணோட்டத்தில் தயாரித்த பொருட்களை வாங்க, மக்களுக்கு சக்தி எப்படி இருக்கும்?

வடஆப்பரிக்காவில் இருக்கும் ஓரளவு வசதியான நாடான மொராக்கோவின் கதை, நமக்கு இந்த

''வளர்ச்சி மாதிரி'' எப்படி இயங்குகிறது, அது எவ்வாறு ஒரு துயர முடிவிற்குச் சென்று விடுகிறது என்பதை விவரிக்கும். மொராக்கோவின் பொருளாதார வல்லுனரான நஜீப் அகஸ்பி, பின்வருபவற்றை முக்கிய விளைவுகளாக குறிப்பிடுகிறார்: ''இப்படியாக ஒரு நாடு, தான் நுகராத பொருட்களை உற்பத்தி செய்து குவிக்கிறது; தான் உற்பத்தி செய்யாத பொருட்களை நுகர்ந்து மாள்கிறது,'' மொராக்கோ உதாரணம் மிகவும் வருத்தமான ஒன்று. ஆனால் இம் 'மாதிரி'யான வளர்ச்சி எவ்வாறு, பெரும்பாலான மக்களுக்கு குறைவளர்ச்சியை சீதனமாகத் தரும் என்பதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு. நல்ல நிலையில் இருந்த ஒரு நாடு, எப்படி இருபதாண்டுகளுக்குள், உலகவங்கி மற்றும் நிதி நிறுவனத்தின் அறிவுரைகளை பின்பற்றி, ஏற்றுமதியில் கொழித்துக் கொண்டு இருந்த நிலையில் இருந்து, அதிகமான வேலையில்லாத் திண்டாட்டம், ஊட்டச்சத்துக் குறைவு மற்றும் பெரும்பாலான மக்களுக்கு முழுமையான வறுமை ஆகியவை ஆபத்தான ஒரு நிலைமைக்கு சென்றுள்ளது என்பதைத்தான் மொராக்கோவின் கதை விவரிக்கிறது. ரத்தக்களரியான சர்வதேச நிதி நிறுவனக் கலவரங்கள் இதில் மைல் கற்களாக விளங்குகின்றன.

வெளிப் பார்வையுடன் கூடிய வளர்ச்சி 'மாதிரி' முழுமையாக திவாலாகி விட்டதைத் தெளிவாக அறிவிக்கும் இக் கலவரங்கள், மொராக்கோவில் 1981 மத்தியில் முதலில் தலைதூக்கின. அடிப்படை உணவுப் பொருட்களின் விலைகள் திடீரென்று கடுமையாக உயர்ந்தது, மக்களை கொதித்தெழச் செய்தது. இவ்வுயர்வு, மிகக் கடுமையாக இருந்தது என்றாலும், 'பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்' என்ற வள்ளுவரின் குறளை நினைவுபடுத்தியது. மொராக்கோ நாட்டு ஒட்டகங்களை போல, அந்நாட்டு மக்கள் தங்கள்

முதுகில் சுமந்த சுமை, தாங்குமளவை தாண்டி விட்டதால் வந்த வினை.

மொராக்கோ நாட்டு மக்கட் தொகை இக்கதையின் ஒரு பகுதியை தெளிவாக விளக்கிவிடும். மொராக்கோவின் மொத்த மக்கட் தொகையான 2.1 கோடியில், 56 சதவிகிதத்தினர் 20 வயதிற்கு குறைவானவர்கள்; 46 சதவிகிதத்தினர் 15 வயதிற்கு குறைவானவர்கள். 15 வயதிற்கு குறைவானவர்களில் கால்வாசியினர் வீதி களில் திரிந்து கொண்டு இருந்தனர். ஏனெனில் அவர்கள் ஒன்று பள்ளிகளில் இருந்து விலகியவர்களாக இருந்தனர்; அல்லது அங்கிருந்து வெளியேற்றப்பட்டிருந்தனர். கலவரம் கடுமையாக இருந்த நகர்களில் ஒன்றான 'கசபிளாங்காவில்' மட்டும், 30 லட்சத்திற்கு அதிகமான, 15—20 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் வீதிகளில் திரிந்து கொண்டு இருந்தனர். அதில் 2 லட்சம் பேருக்கு எந்த வேலையும் கிடையாது. அப்படி பள்ளியில் படித்துக் கொண்டிருந்தவர்களின் நிலையும் பொறாமைப்படும் நிலையில் இருக்கவில்லை; அங்கு படித்து கொண்டிருந்த சுமார் ஒரு லட்சம் மாணவர்களில் 15% பேர் தேர்வு பெற்றால் பெரிய காரியம்.

இது ஒருபுறம் இருக்க, 20—24 வயதிற்கு உட்பட்ட வர்களில் பாதி பேர், வேலை வெட்டியில்லாமல் திரிந்து கொண்டு இருந்தனர். 1970களில் சுமார் 4 இலட்சம் பேர் ஐரோப்பாவிற்கு இடம்பெயர்ந்து சென்றதால், வேலையில்லாத் திண்டாட்டம் அவ்வளவாக பாதிப்பை ஏற்படுத்தவில்லை. ஆனால் 1979லிருந்து இக்கதவு இழுத்து மூடப்பட்டது. அதிகாரபூர்வமான கணிப்புபடி, நாட்டின் நகர்புற மக்களில் 15—64 வயதிற்கு இடைப் பட்டவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் மட்டுமே வேலை யில் உள்ளனர். முஸ்லிம் நாடான இதில் பெண்கள் வேலைக்குப் போவதும் குறைவு. மிஞ்சிப் போனால்,

மொத்தம் எண்பதாயிரம் பெண்கள் சம்பளம் வாங்கும் வேலைக்கு போனால் மிக அதிகம். மொராக்கோவில் வேலையில்லாமல் இருக்கும் ஆண்களில் மூன்றில் இரண்டு பேர், 35 வயதிற்கு குறைவானவர்கள்—அப்பொழுது தான் அவர்கள் தங்களுக்கென்று ஒரு குடும்பம் துவங்க மிகவும் முயன்று கொண்டு இருப்பார்கள்.

குமுறிக் கொண்டிருந்த இந்த சமுதாயக் குமுட்டி அடுப்பில், அரசாங்கம், நிதி நிறுவனத்தின் ஆட்டுவிப்பின் படி, உணவு விலை உயர்வு என்ற தீக்குச்சியை கொளுத்திப் போட்டது. ஏற்கனவே கால் வயிறு கஞ்சிக்கு போராடிக் கொண்டிருந்த மக்கள், கோதுமை மாவுக்கு 40%மும், உணவு எண்ணைக்கு 50%மும் அதிக மாக கொடுக்குமாறு திடீரென்று நிர்பந்திக்கப்பட்டனர். மறுபடியும் எட்டு மாதங்களுக்குள் அவசிய பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்தது. 1979 ஏப்ரலுக்கும் 1981 மேவுக்கும் இடையே, மெராக்கோவில் விலைவாசி புதிய சிகரத்தை எட்டியது; மாவு விலை 80 சதவிகிதமும், சர்க்கரை விலை 97 சதவிகிதமும், எண்ணை விலை 75 சதவிகிதமும், பால் விலை 100 சதவிகிதமும் கூடியது.

அதே இரண்டு வருடகாலகட்டத்தில், அதிர்ஷ்ட வசமாக வேலையில் இருந்தவர்களின் ஊதியம் 20%முதல் (கிராமப்புற கூலி)29% வரை (நகர்புறஊதியம்) மட்டுமே உயர்ந்தது. மொராக்கோ போன்ற, கடுமையான வேலையில்லாத் திண்டாட்ட நாடுகளில், 'குறைந்த பட்ச ஊதியம் என்பது உண்மையில் அதிகமான ஊதிய மாகும் என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். ஏதாவது ஒரு வேலையில் சேர்வது என்பது வசதியானவர்களின் வாடிக்கையாக இருந்தது. பயபக்தியான முஸ்லிம் என்று தன்னைக் கூறிக்கொள்ளும் மொராக்கோவின் அரசர் ஹாசன் போன்ற ஒருவர்— வன்முறை வெடித்துக்கிளம்பியது குறித்து அதிர்ச்சியடைந் திருக்க கூடாது. ஏனெனில், தீர்க்கதரிசி முகம்மதுவின்

தோழர் ஒருவர் "பசியோடு இருக்கும் ஒரு மனிதன் குற்றம் புரியாமல் இருந்தால்தான் நான் வியப் படைவேன்", என்று கூறியுள்ளார்.

ஆனால் 1981இல் படிப்பினை கற்ற அரசு சுலபமாக மறந்துவிட்டது. 1984 ஜனவரியில் சர்வதேச நிதி நிறுவனத்தின் பரிந்துரைகளின்படி, உணவுப் பொருட்களின் விலை மேலும் உயரும் என்று அரசு அறிவித்ததும், நாடெங்கும் கடுமையான கலவரங்கள் ஏற்பட்டன. நகரங்களில் இருந்த பாதிக்கப்பட்ட மக்கள், மாணவர்கள், வேலையில்லா இளைஞர்கள் ஆகியோருக்கு 'அறிவிக்கப்பட்டதே' போதுமாக இருந்தது. சாரை சாரையாக கிளம்பி தெருவிற்கு வந்துவிட்டனர்.

அரசாங்கம் ஆர்பாட்டங்களுக்கு "வெளிச்சதி" காரணம் என்று புலம்பி, அதை அடக்க ராணுவத்தை அழைத்தது. அரசு அதை கொடூரமாக அடக்கி முடித்ததும், அரசின் கணக்குபடி இறந்தவர்கள் 29 பேர்; காயமடைந்தவர்கள் 114 பேர். ஆனால் பத்திரிகைகள் குறைந்தது 100 பேராவது இறந்திருப்பர் என்று அறிவித்தது; பலர் 400க்கு மேற்பட்டவர்கள் இறந் திருப்பர் என்று கூறுகின்றனர். அரசர் ஹாசன், தொலைக்காட்சியில் தோன்றி; அடிப்படை பொருட்கள், அப்படியொன்றும் விலை ஏறிவிட வில்லை என்று மக்களுக்கு எடுத்துரைத்தார். இந்த அறிவிப்பும், அரசின் மிருகத்தனமான அடக்குமுறையும், நாட்டின் சட்ட, ஒழுங்கை சகஜ நிலைக்கு திருப்பியது.

நாட்டின் தீவிர பிரச்சனைகளை, அங்கு நிலவும் சட்ட ஒழுங்கு நிலையால் தீர்க்க முடியாது. ஒருசமயம், வட ஆப்பிரிக்காவின் தானியக் களஞ்சியமாகவும், பிரான்சின் முக்கிய தானிய விற்பனையாளராகவும் விளங்கிய மொராக்கோ, இன்று வருடத்திற்கு 30 லட்சம் டன் கோதுமையை இறக்குமதி செய்யும் நிலைக்கு

தள்ளப்பட்டு உள்ளது. அதே சமயம் மெராக்கோவின் சீண்டுவாரற்ற ஆரஞ்சுகளும், தக்காளிப்பழங்களும், துறைமுகங்களில் கிடந்து அழுகிக் கொண்டு இருந்தன. ஏற்றுமதி 'மாதிரி'க்கு நிதியுதவி செய்த, அந்நியக்கடன் இன்று வளர்ந்து 16 பில்லியன் டாலராக விஸ்வரூபம் எடுத்து நிற்கிறது. அக்கடன் தவணை கால அளவுகள் மாற்றியமைக்கப்படாவிட்டால், மொராக்கோ தனது மொத்த நடைமுறை செலவினத்தில், 47 சதவிகிதத்தை கடன் தவணைக்கும் வட்டிக்கும் செலுத்த வேண்டியிருக்கும். 1983இல் இருந்து நடைமுறையில் இருக்கும் நிதி நிறுவனத்தின் சிக்கன நடவடிக்கை திட்டம், நிதிச் செலவுகள் முதலில் ஏற்று செயல்பட வேண்டும் என்று நிர்பந்திக்கிறது. அதாவது நீ கடன் வாங்கி விட்டாய் அல்லவா? நீ சாப்பிட்டாயா, இல்லையா என்பது பற்றி எனக்கு கவலையில்லை; என் கடனை ஒழுங்காக கட்டிவிடு, வட்டியுடன்.

ஏற்றுமதியை முன்நிறுத்தி கட்டப்பட்ட 'மாதிரி', உளுத்துப்போன மரக்கட்டைகளால் கட்டப்பட்ட ஒன்றாக மாறிவிடுகிறது. பிற மூன்றாம் உலக நாடுகளைப் போல இல்லாமல், அபரிமிதமான வளங்களையும், போதுமான நிலத்தையும் கொண்டிருந்த ஒரு நாடு எப்படி இப்படி ஒரு சகதிக்குள் சிக்கிக் கொண்டது? நஜீப் அகஸ்பி இதற்கு பதில் அளிக்கிறார்.

கதை 1960களின் மத்தியில் துவங்குகிறது. 1956 இல் பிரான்சிடம் இருந்து விடுதலை அடைந்த மொராக்கோ, ஒருசில வருடங்களுக்குப் பிறகு கடுமையான நிதிச் சிக்கல்களில் சிக்கிக் கொண்டு விட்டது. அதிலிருந்து தன்னை மீட்க உலக வங்கி மற்றும் நிதிநிறுவன வல்லுனர்களிடம் அது ஆலோசனைக் கேட்டது. அந்த வல்லுனர்களின் பரிந்துரை, தேசிய வளர்ச்சிக் கொள்கையாக மாறி விட்டது. அவர்களின் அடிப்படை கருத்து, மொராக்கோவில் சாதகமான வேளாண்மைச் சூழல்

நிலவுவதால், அந்நாடு, தனது பண்ணை முறைகளை நவீனமயப்படுத்த வேண்டும்; அதோடு எலுமிச்சை மற்றும் பசுங் காய்கறிகள் போன்ற ஏற்றுமதி பயிர்களை நோக்கி அது பீடுநடை போட வேண்டும், என்ற ரீதியில் இருந்தது. நவீன மயப்படுத்தலுக்கு செலவிடப்படும் தொகை, ஏற்றுமதி வருவாயால் இட்டு நிரப்பப்பட்டு விடும். நடைமுறையில், நவீனப்படுத்தல்-அணைக்கட்டுதல் போன்ற பாசனத் திட்டங்களைக் குறித்தது.

அவர்கள் அதை 'அணைக் கொள்கை' என்றழைத்தனர். அதன்படி கி.பி 2000 வாக்கில், 10 லட்சம் ஹெக்டர் நிலங்கள் நீர்பாசனத் திட்டத்தின் கீழ் வந்து விடும். நவீன மயப்படுத்தல் திட்டங்கள் அனைத்து பொது முதலீட்டில் 7/12 பங்கை கபளீகரம் செய்து விட்டன. அதாவது அது மொத்த வேளாண்மை முதலீட்டில் மூன்றில் இரண்டுபங்காகும். அதோடு இப்படி வாரி இறைக்கப்பட்ட பணம், மொத்த நிலங்களில் 10 சதவிகிதத்தை மட்டுமே வளப்படுத்தின. இத்தனைக்கும் மொராக்கோவில் 80 சதவிகிதத்துக்கும் அதிகமான மக்கள் இப்படி வளர்ச்சியடையாமல் வைக்கப்பட்டு இருந்த நிலங்களையே சார்ந்து இருந்தனர். நீர்ப்பாசனத் திட்டங்களை அணுகுவதற்கு அதிர்ஷ்டம் கொண்டிருந்தவர்களுக்கு—அவர்கள் பெரும்பாலும் பெரு விவசாயிகள் என்று கூறத் தேவையில்லை—டிராக்டர் கள், செயற்கை உரங்கள், பசுமைப் புரட்சி விதைகள் போன்றவை 20 சதவிகிதம் முதல் 35 சதவிகிதம் வரை தள்ளுபடி விலையில் கிடைத்தன. நீர் கிட்டத்தட்ட இலவசமாக கிடைத்தது. வேளாண் கடன்களோ பெரு விவசாயிகளுக்கே போய்ச் சேர்ந்தன.

இப்படியாக நவீன மயப்படுத்துதலின் நிதிச்சுமையை அரசு சுமந்துக் கொண்டிருந்த போது, தனியார் நலன்கள் லாபத்தை சுருட்டிக் கொள்வதில் கண்ணும் கருத்துமாய் இருந்தன. ஏற்றுமதித் துறை உட்பட, வேளாண்மை

வரிகள் எப்பொழுதுமே அரசின் மொத்த வருவாயில் 1 சதவிகிதத்தை தாண்டவில்லை. அரசர் ஹாசன் அதோடு நிற்கவில்லை, 1984இல் நாட்டில் நிலவிய பஞ்சம் காரணமாக 2000 வரை வேளாண்மைக்கு வரி ஏதும் கிடையாது என்று அறிவித்து விட்டார்.

அரசின் திட்டங்கள் ஏற்றுமதிப் பயிர்களை வெளிப் படையாக ஆதரித்ததால், மொராக்கோ, மனமுவந்து உணவு இறக்குமதி செய்யும் நாடாகிவிட்டது. 1960 களில், உலக உணவின் விலை குறைவாகவும், ஒரே அளவிலும் இருந்ததால், இது ஒரு சிறந்த கருத்தாக தோன்றியது. ஊட்டச்சத்துமிக்க, சுவையான தேசிய கோதுமை உணவு வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் பட்டது; அவ்விடத்தை மென்மையான இறக்குமதி கோதுமை பிடித்துக்கொண்டது. அதே போல உள்ளூர் ஆலிவ் எண்ணெய் வெளியேறியது; அங்கு அமெரிக்க சோயா எண்ணெய் வழுக்கிக் கொண்டு வந்து உட்கார்ந்து கொண்டது.

1960 களின் மத்தியில், ஏற்றுமதிச் சார்பு நவீனத்துவம் துவங்கிய புதிதில், மொராக்கோ, தனது வேளாண்மைத் திட்டங்களுக்கு, தானே நிதியளித்துக் கொள்ளும் நிலையில் இருந்தது. ஆனால் விரைவிலேயே கதையில் எதிர்பாராத திருப்பங்கள் ஏற்பட்டன. 1970 களின் துவக்கத்தில் அந்நாடு, நாட்டின் மொத்த திட்டங் களில் 23 சதவிகிதத்துக்கு வெளிநாட்டுக் கடன் மூலாதாரங்களை நம்பி இருக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டது. 1970 களின் மத்தியில், உணவு மற்றும் வேளாண் இடுபொருட்களின் வெளிநாட்டுச் சார்பு அதிகரித்ததும், அவற்றின் விலை விண்ணளவு உயர்ந்தது. விளைவு? மொத்த நவீனத்துவச் செலவில், இவை பாதியை எடுத்துக் கொண்டன. 1980க்கும் 1984க்கும் இடையே இது 76 சதவிகிதமாக உயர்ந்தது. அதாவது 1980இல் தேசிய மொத்த உற்பத்தியில் 18 சதவிகிதமாக

இருந்த கடன், 1984இல் 110 சதவிகிதத்தை எட்டிப் பிடித்தது. இதற்கு முக்கிய காரணம், மொராக்கோவின் முக்கிய ஏற்றுமதியான பாஸ்பேட்டின் விலை, உலகச் சந்தையில் சரிந்தது ஆகும்.

மொத்தத்தில் இக்கொள்கையின் விளைவுகள் படுபயங்கரமாக இருந்தன. தானியங்கள் மற்றும் பருப்பு வகைகள் ஆகியவை இன்றும் சிறிய விவசாயிகளால் 80 சதவிகித நிலங்களில் விதைக்கப்பட்டு வந்தாலும் கூட, அவர்களுக்கு தொழில் நுட்ப மற்றும் நிதி உதவி எதுவும் அளிக்கப்படவில்லை. ஒருபுறம் மக்கட் தொகைப் பெருக்கம் அதிகரிக்க, மறுபுறம் உணவு உற்பத்தி கீழிறங்கு முகமாக போக, தனிநபர் கோதுமை உற்பத்தி 1984இல், 1955இல் இருந்ததில் பாதியாக குறைந்தது.

உள்ளூர் உணவு நிலைமையும் சொல்லிக் கொள்கிற மாதிரி இருக்க வில்லை. ஒரு காலத்தில் தானிய ஏற்றுமதி நாடாக இருந்த மொராக்கோ, இன்று தனது மக்களில் 20 சதவிகிதத்தினரின் தேவையைக்கூட நிறைவேற்றமுடியாத நிலையில் இருந்தது. 1970க்கும் 1983க்கும் இடையே உணவு இறக்குமதி வருடத்திற்கு 17சதவிகிதம் என்ற அளவில் அதிகரித்து, 220சதவிகிதத்தை எட்டியது. இது ஏதோ விபத்தல்ல, கடைபிடித்த கொள்கையின் விபரீத விளைவு. அரசின் செல்லப் பிள்ளையாக விளங்கிய ஏற்றுமதியும் உயர்ந்தது—ஆனால் வெறும் 8 சதவிகிதம் மட்டுமே. ஆகமொத்தத்தில், ஏற்றுமதிக்கும், இறக்குமதிக்கும், வடக்கைச் சார்ந்திருக்க வேண்டிய அவல நிலைக்கு மொராக்கோ தள்ளப்பட்டது. செல்வச் செழிப்பில் கொழிக்கும், பெரு விவசாயிகளுக்கு சாதகமான கொள்கை கடைபிடிக்கப்பட்டதால், சிறு நடுத்தர விவசாயிகள், மண்ணை இழந்து, பொன்னை இழந்து, மானமிழந்து. மரியாதை இழந்து, தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு நகர்புறங்கள் நோக்கி சாரி சாரியாக படை

யெடுக்கத் துவங்கினர். வேலை ஏதுமற்று நகரில் திரிந்த இவர்களும், இவர்களின் குழந்தைகளுமே சர்வதேச நிதிநிறுவம் பெருமையுடன் வழங்கிய 'உணவுச் சூறையாடல்'களின் கதாப்பாத்திரங்கள்!

நிலைமை இப்படி இருக்க, அந்நாடு தனது 16பில்லியன் டாலர் அந்நியக்கடனை எப்படி அடைக்கப் போகிறது? இன்று ஏற்றுமதிப் பயிர்களின் விலை குறித்து மொராக்கோவில் வாயைத் திறக்க முடியாது. இறக்குமதி உணவை சொல்கிற விலையில் கண்ணை மூடிக்கொண்டு வாங்கி விடவேண்டும். இந்நிலையில் மொராக்கோவிற்கு உள்ள ஒரே வழி, தொழிலாளர்களின் ஊதியம்தான். வெளிநாட்டுக்கடனை அடைக்க ஒரே வழி சர்வதேச நாணயத்தை சம்பாதிப்பதுதான். அதற்கு சிறந்த மார்க்கம் தொழிலாளர் வயிற்றில் அடிப்பதுதான். ஆனால் இந்த தொழிலாளர்களுக்கோ திமிர்; ஒரு வேளையாவது சாப்பிட்டாக வேண்டும் என்று அடம் பிடிக்கின்றனர்.

ஆனால் இங்கு ஒரு விநோதமான வட்டம் நடைமுறையில் நிலவுகிறது. விலைவாசிக் கொள்கை ஒன்றை சரியாக வரையறுக்காமல், ஊதியக் கொள்கையை மட்டும் அமலாக்க முடியாது. நல்ல விலை கொடுத்து இறக்குமதி செய்த கோதுமையை பெருகி வரும் மக்கள்தொகை அரைத்து நொறுக்கும் போது, அரசு கடினமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டி இருக்கிறது. இறக்குமதி கட்டுப்படியாக வேண்டுமானால், விலையை ஏற்ற வேண்டும்; விலையை ஏற்றினால், தொழிலாளர்கள் உடனடியாக ஊதிய உயர்வு கேட்பார்கள். ஊதிய உயர்வு, சர்வதேச அளவில், போட்டியை கடினமாக்கி, மொராக்கோவின் கதியை உன்பாடு, என்பாடு என்றாக்கிவிடும். உலக வங்கி, மற்றும் நிதி நிறுவனத்தை

நம்பி மொராக்கோவிற்கு வந்துள்ள பன்னாட்டு நிறுவனங்களுக்கு மலிவு உழைப்புதான் அடிப்படை ஊக்குவிப்பு. கதவடைப்புகள், வேலை நிறுத்தங்கள், சூறையாடல்கள் போன்றவை அவற்றிற்கு வேப்பங்காய்.

மொத்தத்தில், கைவசம் இருக்கும் ஒரே தீர்வு மக்களின் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு மானியம் அளிப்பதாகும். இதன் விளைவாக, தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்க வேண்டிய தேவை இருக்காது. ஆனால் கதையில் இங்கும் ஒரு சுவையான முடிச்சு விழுகிறது. அதாவது இப்படி ஒரு போக்கை கடைபிடிக்கும் ஒரு மூன்றாம் உலக நாடு, தனது சொந்த மக்களுக்கு மட்டும் மானியம் வழங்க வில்லை; இந்நாட்டின் ஏற்றுமதியைப் பெறும், செல்வச் செழிப்பில் புரளும் பணக்கார வாடிக்கையாளர்களுக்கும் அது போய்ச் சேருகிறது. தொழிலாளர்களுக்கு அதிக ஊதியம் வழங்குவதற்கு பதிலாக, பொருட்களுக்கு மானியம் வழங்கும் இச்செயல், 'இருப்பவன் அனுபவிக்கும்' நடைமுறை செழிக்கவே உதவும்.

உணவு மானியம், பணக்காரர்கள் மற்றும் முதலாளிகள் தங்களது ஆடம்பர வாழ்க்கையை மேலும் செழுமையாக்க உதவும் அதே தருணத்தில், ஏழைகள், தங்கள் முகத்தை மட்டும், மூச்சைப் பிடித்துக் கொண்டு நீருக்கு வெளியே நீட்டிக் கொண்டு தத்தளித்துக் கொண் டிருக்க வழிவகுக்கிறது. சர்வதேச நிதி நிறுவனம், அரசின் செலவினங்களை குறைக்கும் நோக்கத்தின் ஒருபகுதியாக, உணவு மானியங்களை நிறுத்த கோருகிறது. இது முன்னுக்குப் பின் முரணானது. நிதிநிறுவனத்திற்கு மிகவும் பிடித்த 'மாதிரி'—இத்தகைய ஏற்றுமதிச் சார்பு மாதிரி. ஆனால் இது எப்படியும் இத்தகைய மானியக் கொள்கை வழிவகுப்பில் கொண்டு போய் நிறுத்துவதை தவிர்க்க முடியாது. அது உண்மையிலேயே, ஒரு சுதந்திரப் பொருளாதாரச் சந்தையை ஆதரிக்கும் பட்சத்தில்,

மானியங்களை கட்டுப்படுத்தும் அதே சமயம், ஊதிய உயர்வையும் தடுக்கக் கூடாது. ஆனால் நிதி நிறுவனம் செய்வது நேர் எதிரானது. மானியமும் கூடாது, ஊதிய உயர்வும் கிடையாது. கூழுக்கும் ஆசை! மீசைக்கும் ஆசை! இதுதான் சர்வதேச நிதி நிறுவனம்.

மொராக்கோவிற்கு பரிந்துரைக்கப்பட்ட விலைவாசிக் கொள்கையில் இன்னும் பிற முரண்பாடுகள் ஏகப்பட்டவை உள்ளன. முதலில், உணவு மானியம் தேவைப்படும் மக்களை கணக்கில் எடுத்துக் கொண்டால், அது, அரசின் கையை அவ்வளவாக கடிக்காது. அதாவது உதாரணமாக 1980க்கும் 1985க்கும் இடையே மொராக்கோ அரசு தனது மொத்த உள்ளூர் உற்பத்தியில் **1.5** சதவிகிதம் மட்டுமே மானியங்களுக்காக செலவிட்டது. ஆனால், அது கடைசி நுகர்வோரின் கையை மட்டும் கடிக்கும் விதத்தில் உள்ளதுதான் இதில் நெருடல். நுகர்வோரைப் போல, உற்பத்தியாளர், தரகர், இறக்குமதியாளர், விநியோகிப்பாளர் ஆகியோரும் சுமையை பகிர்ந்து கொள்வதுதான் நியாயம்.

இக்கதை மொராக்கோவிற்கு மட்டுமே உரித்தான தனிக்கதையல்ல. மூன்றாம் உலகில் உள்ள நம்மில் பலரும், சமூக நீதியை உத்தேசித்து, வேளாண் உற்பத்தியாளர்களுக்கு அதிக விலை கொடுக்க குரல் கொடுத்து வருகிறோம். நாம் இதைக் கண்டிப்பாக மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று மொராக்கோ பொருளாதார வல்லுனர் நஜீப் அகஸ்பி கூறுகிறார். குறைந்தபட்சம் மொராக்கோவைப் பொறுத்தவரை, இன்று உற்பத்தி விலை நன்றாகவே ஏறியுள்ளது — உண்மையில் அது உலகச் சந்தை விலையைவிட மிக அதிகம். அதனால், இன்று மொராக்கோ அதிக விலையுள்ள உணவுப் பொருட்களை கையில் வைத்துக் கொண்டு தவிக்கிறது.

அனைத்து விவசாயிகளுக்கும் ஒரே அடக்க விலை ஏற்படுவதாகவும், அதனால் அதற்கு வழங்கப்படும் விலை

ஒரேமாதிரியாக இருப்பதாகவும் வைத்துக் கொண்டால், இந்த உயர்ந்த உத்திரவாத விலையால் அதிகப் பயன் அடைவது கண்டிப்பாக அதிக நிலங்களை வைத்திருக்கும் பெரு விவசாயிகள்தான். அதாவது உத்திரவாத விலை இருந்தும், சிறிய விவசாயியால் கௌரவமாக குடும்பம் நடத்த இயலாது; ஆனால் 500 ஏக்கர் வைத்திருக்கும் பெரு விவசாயிக்கோ மேலும் கொண்டாட்டமாக இருக்கும். நாட்டில் ஒருவரிடம் அதிக நிலமும், வேறொருவரிடம் மிகக் குறைவான நிலமும் என்ற ரீதியில் நிலவுடைமை இருக்கும்போது, அதிகபட்ச கொள்முதல் வரையறை இல்லாதபோது, கொள்ளளவை கணக்கில் எடுத்துக் கொள்ளாது, உற்பத்தி விலை எல்லோருக்கும் சமமாக நிர்ணயிக்கும் போது, இத்தகைய உததிரவாத விலைக் கொள்கை, மேலும் அதிகமான சமூக சமத்துவமின்மைக்கே இட்டுச் செல்லும்.

இதில் மேலும் துயரமான விஷயம் என்னவென்றால் அதிகாரபூர்வமான தானிய அமைப்புகள், சிறுவிவசாயி களை சென்றடைய சுண்டுவிரலைக்கூட அசைப்பதில்லை. இந்நிலை மொராக்கோவில் மட்டும் இல்லை. கடன்பட்டு, பணத்தை கண்ணால் காண ஏங்கிக் கொண்டிருக்கும் ஏழை விவசாயி, வந்த விலைக்கு வியாபாரிக்கு உடனடி யாக உற்பத்தியை விற்று விடுவான். இது உத்திரவாத விலையைவிட மிகக் குறைவாக இருக்கும் என்று கூறத் தேவையில்லை. அரசு நேரடியாக, சரியான சமயத்தில் தலையிட்டு இப்பிரச்சினையை களையாத வரை, இக் கேலிக்கூத்து ஏட்டளவில்தான் இருக்கும். இது சமூக சமத்துவமின்மையை அதிகரிக்கச் செய்வது ஒருபுறம் இருக்க; மறுபுறம் இது தானிய உற்பத்தி உயர்வுக்கு எள்ளளவும் வகை செய்யவில்லை. நடைமுறைக் கதை நேர் எதிராக உள்ளது. விலை அதிகம் கிடைக்கும்போது

மகசூலை அதிகரிக்க, விவசாயி அதிகம் அலட்டிக் கொள்வதில்லை. விளைவு, தரமின்மையும், மட்டமான விளைச்சலும் தலைவிரித்து ஆடியதுதான் மிச்சம்.

அரசு வடித்துக் கொட்டியதில், அதிகப் பங்கை விழுங்கியது தனியார் வேளாண் வியாபாரிகளே. அமெரிக்காவில் உள்ளது போல மொராக்கோவிலும், வேளாண் வர்த்தகத்தில் விரல்விட்டு எண்ணக் கூடியவர்களே ஈடுபட்டுள்ளனர். ஏகபோக அதிகாரம் நிலவுவதால், சுதந்திரச் சந்தைப் போட்டி அங்கு இல்லை. மொராக்கோவில் அரசும் இதற்கு உடந்தை. ஏனெனில், இவற்றின் லாப வரம்பை நிர்ணயிப்பது அங்கு அரசு தான். இப்படி வரம்பு நிர்ணயிக்கப்படுவதால், நொண்டிக் கழுதைகளும், மட்டக் குதிரைகளும் மைதானத்தை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளன.

மொத்தத்தில், அரசு நுகர்வோருக்கு இடது கையால் கொடுப்பதை, வலது கையால் பிடுங்கிக் கொள்கிறது. மானியக் கொள்கை நாணயத்தின் மறுபக்கம் இருப்பது வரிகள்தான்—மொராக்கோவின் மொத்த வரி வருவாயில் நான்கில் மூன்று பகுதி நுகர் பொருள்களில் இருந்து வருகிறது. அதாவது நடைமுறையில் சாதாரண மக்கள், தாங்கள் வாங்கும் சாதாரண பொருட்களுக்கு அதிக வரி செலுத்தி வருகின்றனர். ஆடம்பர பொருட்கள் மீது விதிக்கப்படும் விற்பனை வரியோ வெறும் 5 சதவிகிதம் தான். 1975க்கும் 1984க்கும் இடையே, மாவு, எண்ணை, சர்க்கரை, வெண்ணெய் மற்றும் பால் (இன்று பாலுக்கு மானியம் கிடையாது) ஆகிய முக்கிய பொருட்களுக்கு வழங்கப்பட்ட மானியத்தை போல ஏழு மடங்கு வரி அதன் மீது விதிக்கப்பட்டுள்ளது. ஆக கடைசியில் நிலவும் உண்மை என்ன தெரியுமா? மானியம், வரி ஆகியவற்றை ஒரே பாத்திரத்தில் போட்டு கலக்கிப் பார்த்தால் நுகர்வோர்தான் அரசிற்கு மானியம் அளிக்கின்றனர் என்ற திடுக்கிடும் உண்மை தெரியும்.

பொருளாதார திறமையூட்டல் என்ற பெயரில் இயங்குவதாக முழங்கிக் கொள்ளும் நிதி நிறுவனத்தின் கொள்கைகள், யதார்த்தத்தில் சமூக ரீதியாக அபாயகர மாகவும், பொருளாதார ரீதியாக பொருத்தமற்றும் விளங்குகின்றன. ஏன் எப்பொழுதும் இறுதியில் நுகர் வோரே எல்லாச் சுமையும் சுமக்க வேண்டும்? உண்மையில் கொள்ளை லாபம் அடிப்பவர்களை அரசோ, நிதி நிறுவனமோ கண்டு கொள்ளாமல் விட்டுவிட்டால், கடைசியில் சுதந்திரச் சந்தை என்ற பெயரில், மேலும் மேலும் அடிவாங்கப்போவது நுகர்வோர்தான்.

தேவை குறைப்பு (அதாவது வயிற்றைச் சுருக்கி அவதிப்படு என்பதை மென்மையாகக் கூறுவது), என்ற மருந்தை தவிர்த்து வேறு எதை, நிதி நிறுவனம், மொராக்கோவின் கடன் பிரச்சனையை தீர்க்க பரிந்துரை செய்யப் போகிறது? நிதிநிறுவனம் வேறு என்ன செய்யும்? அதே பாழாய்ப் போன கொள்கைகள்தான்! ஏற்றுமதி உற்பத்தியில் அதிக முதலீடு, உலகச்சந்தையுடன் இன்றும் இழைசல், போன்றவைதான். இக்கொள்கைகள்தான் நல்ல செழிப்பான அந்நாட்டை, இன்று நிலவும் பொருளாதார புதைக்குழிக்குள் தள்ளிவிட்டு உள்ளன. இதற்கிடையே, சுத்தமாக ஒன்றுமே இல்லாத ஏழைகளின் எண்ணிக்கை 1980இல் 70 லட்சமாக இருந்தது, இன்று 87 லட்சமாக உயர்ந்துள்ளது. இதில் 30 லட்சம் பேர் நகரங்களில் வசிக்கின்றனர். அதில் பெரும்பாலோர் இளைஞர்கள். ஒன்று மட்டும் தெளிவு. இனியும் கலவரங்கள் வெடித்தால், அதற்கு வெளிநாட்டையும், கம்யூனிச சதியையும் காரணம் காட்ட முடியாது.

# 2

# ஆப்பிரிக்கக் கடன்; கறுப்பு மனிதனின் துயரச் சுமை

ஆப்பிரிக்கா தன் சொந்தக் காலில் நிற்கத் துவங்கி விட்டது. இப்படித்தான், 1986 மே மாதம் ஐ. நா. சபையின் ஆப்பிரிக்கச் சிறப்புக் கூட்டத்தில் முழங்கப்பட்டது. இத் தீர்மானத்தைக் கொண்டு வர உழைத்தவர்கள், அதற்காக பல கோவில்களுக்கு காவடி எடுத்தவர்கள் ஆகியோரின் தற்போதைய கவலையெல்லாம், அக் கண்டத்தை இன்னும் எப்படி பிழிந்தெடுப்பது என்பது தான்!

‘பசி’, ‘பட்டினி’ என்று சொல்லிய கையோடு, ஆப்பிரிக்கா என்று அழைத்துப் பாருங்கள்—உடனடியாக அதற்கு எதிரொலி கிடைக்கும். அதேபோல ஆப்பிரிக்கக் கடன் என்று அழைத்துப் பாருங்கள்—ஒரு முறைப்புதான் பதிலாகக் கிடைக்கும். ஆனால் இன்று அங்கு நிலவும் உணவுப் பற்றாக்குறைக்கு, கடன்தான் முக்கிய காரணம். கடன் நிவாரணம் முடக்கப்பட்டால், ஆப்பிரிக்காவில் பட்டினி தலைவிரித்து ஆடும் என்பது நிச்சயம். தற்போதைய சிக்கலில் இருந்து ஆப்பிரிக்கா மீண்டு வந்து விட்டால், அதன் முழுப் பெருமையும் ஆப்பிரிக்கர்களையே சாரும். தற்போது அதற்கு வெளியில் இருந்து கிடைக்கும் உதவி மிகவும் சொற்பமாகவே உள்ளது.

ஏற்கனவே, ஆப்பிரிக்கா வாங்கும் கடன்களில் பெரும் பகுதி தவணை கட்டவே சரியாக இருக்கிறது.

ஆப்பிரிக்க அரசுகள், அங்குள்ள ஆளும் வர்க்கம் மற்றும் நிர்வாகிகள் ஏகப்பட்ட தவறிழைத்துள்ளனர் என்பதில் எள்ளளவும் சந்தேகம் கிடையாது. ஆனால் அவர்களைக் கூண்டில் ஏற்றி விசாரிக்கும் முன்பு, ஆப்பிரிக்க நாடுகள் இருந்த நிலைமையையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். உதாரணமாக, 25 வருடங்களுக்கு முன்பு, 50 லட்சம் மக்கள் தொகையைக் கொண்டிருந்த ஜாம்பியாவில் இருந்த மொத்த பட்டதாரிகள் வெறும் 100 பேர் மாத்திரமே. அதேபோல, 1970களில் அப்பொழுதுதான் போர்ச்சுக்கல்லின் காலனியாதிக்கத்தில் இருந்து விடுபட்டிருந்த மொசாம்பிக்கின் கல்வி அமைச்சகத்தில் பணியில் இருந்த நபர்கள்—மொத்தம் 5 பேர் மட்டுமே. கல்வி அமைச்சரின் வயது 23!

ஆப்பிரிக்கா திடீரென்று உலக வரைபடத்தில் இருந்து மறைந்து விட்டால், அதை சர்வதேச வர்த்தக சமுதாயம் கண்டு கொள்ளவே செய்யாது என்பதுதான் கசப்பான உண்மை. ஏனெனில் உலக வர்த்தகத்தில் ஆப்பிரிக்காவின் பங்கு வெறும் 4 சதவிகிதம் மட்டும்தான். ஆப்பிரிக்காவில்தான் கனிவளம் மிகுந்து காணப்படுகிறதே என்று கேட்கலாம்! ஆனால் அதே வளங்கள் வேறு இடங்களில் (உதாரணமாக ஆஸ்திரேலியாவில் யுரேனியம்) இன்னும் குறைவான அரசியல் ஆபத்துகளோடு (உதாரணம் தென்னாப்பிரிக்க இனவெறி) கிடைப்பதால், யாரும் அந்த இருண்ட கண்டத்தை சட்டை செய்வதில்லை. வடக்குச் சீமான்களின் மென்மையான இதயத்தை நம்பி, ஆப்பிரிக்கர்கள் இருந்தார்களேயானால், அவர்களுக்கு வெறும் ஏமாற்றம் மட்டும் ஏற்படாது; அவர்கள் நிச்சயமாக பிணமாகியே போவார்கள்.

எந்த வளங்கள், காலனியாதிக்கவாதிகளை ஆப்பிரிக்காவிற்குள் கவர்ந்து இழுத்ததோ—வைரம், செம்பு, தங்கம், உணவு, பானங்கள் போன்றவை—அவற்றையே இன்றைய நவீன ஆப்பிரிக்காவும் சார்ந்து இருக்கிறது. சர்வதேசச் சந்தையில் தனது கனிவள மற்றும் வேளாண்மை கச்சாப் பொருட்களுக்கு, தான் கூறிய விலையை நிர்ணயித்த காலத்தில் இருந்து இன்று ஆப்பிரிக்கா வெகுதூரம் வந்து விட்டது. தொழில் நுட்பத்தின் வளர்ச்சி ஏதேதோ உயரங்களை தொட்டுக் கொண்டிருக்கும் போது, இருண்ட கண்டமென அழைக்கப்பட்ட இப்பூமி, இன்னும் அதே காலகட்டத்திற்கு தேவையான பொருட்களையே உற்பத்தி செய்து கொண்டு இருக்கிறது. தொலைபேசி மற்றும் நவீன தகவல் தொடர்பு துறை இன்று கண்ணாடி இழை சகாப்தத்தில் உள்ளது. செம்புக் கம்பிகள் செல்லாக் காசாகிவிட்டன. அனைத்துப் பொருட்களுமே நாளுக்கு நாள் சுருங்கிக் கொண்டு வருவதால், உலோகங்களுக்கான தேவை குறைந்து கொண்டே வருகிறது.

சணலையும் பிற பொருட்களையும், பிளாஸ்டிக் அப்புறப்படுத்திவிட்டது. பருத்தி வேண்டுமானால், பெரு, எகிப்து அல்லது சீனாவிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். அல்லது இருக்கவே இருக்கிறது செயற்கை இழை! வெப்பமண்டல எண்ணெயான கடலை எண்ணை போன்றவற்றை விட அமெரிக்க சோயா எண்ணையும், மலேசிய பாமாயிலும் மலிவு. விலை கடுமையாக உயர்ந்தால், அதை விட்டுவிட்டு வேறு ஒன்றிற்கு தாவி விடுவது நுகர்வோரின் வழக்கம். உடல்நலம் மீதான அக்கறை, சர்க்கரை என்ற பேச்சை எடுப்பதையே புருவம் உயர்த்தி பார்க்க வைத்துள்ளது. இவ்வாறு அடுக்கிக் கொண்டே போகலாம். வெகு வேகமாக மாறிக் கொண்டிருக்கும் சந்தைக்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொள்ளும் நிலையில் இல்லை ஆப்பிரிக்கா.

வெப்ப மண்டல வேளாண்மைப் பொருட்களும், உலோகத் தாது பொருட்களும், வருங்காலத்திற்கான வாசல் கதவை திறந்து வைக்கப் போவதில்லை, என்பதை அனைவரும் அறிவர். ஆனால் சர்வதேச நிதி நிறுவனம், முன் எப்போதைக் காட்டிலும் அதிகமாக இன்று வறட்டுப் பிடிவாதம் பிடிக்கிறது. ஏற்றுமதி இல்லையேல் புதுக்கடன் கிடையாது என்று மிரட்டுகிறது. எதை ஏற்றுமதி செய்வது? வேறு எதுவும் கைவசம் இல்லாததால், மீண்டும் பழைய பொருட்களையேவா? உற்பத்திப் பரவலாக்கத்திற்கான கடன் கைக்கு வந்தபாடில்லை. நிதி நிறுவனத்தின் இக்கொள்கை சொல்லவொண்ணா துயரங்களை உருவாக்கியுள்ளது. சர்வதேச நிதி நிறுவனத்தின் பிடிவாதம், ஒரு கண்டம் முழுவதையுமே அழிவிற்கு இட்டுச் சென்றுவிடும்.

கருப்பு ஆப்பிரிக்காவில் உள்ள பெரிய கடனாளி நாடுகளாக நைஜீரியா, சூடான் மற்றும் ஐவரிகோஸ்ட் ஆகியவை திகழ்கின்றன. ஆப்பிரிக்க நாடுகளின் பிரச்சனைகள் ஏறக்குறைய ஒரே மாதிரியானவைதான். ஆகவே நாம் இங்கு மூன்று கிழக்காப்பிரிக்க நாடுகளை உற்றுக் கவனிப்போம். இவை மூன்றும் ஒரே மாதிரியான பிரச்சனைகளைக் கொண்டிருந்தாலும், வெவ்வேறு அரசியல் தத்துவங்களை கடைபிடித்து வந்தன.

இவற்றின் பிரச்சனைகளை அதிகரித்ததில் முக்கிய பங்கு வகித்த பெருமை கடனையே சாரும். இந்த முந்தைய பிரிட்டிஷ் காலனியாதிக்க நாடுகளின் பொருளாதாரச் சீரழிவில் சர்வதேச நிதி நிறுவனத்திற்கும், உலக வங்கிக்கும் மிகமிக முக்கியமான பங்கு உண்டு.

## பரிதாபத்திற்குரிய ஜாம்பியா

ஜாம்பியாவை ஒரு வினோதமான உதாரணமாக கூறலாம். ஏனெனில், அது செம்பு என்ற உலோகத்தின்

ஏற்றுமதி வசம் அடைக்கலமாகி விட்டது. இத்தகைய ஒட்டுமொத்த சார்பு எப்படிப் பார்த்தாலும் மூடத்தனமான ஒன்றுதான். ஒருநாள் செம்பின் விலை அதலபாதாளத்தை தொடும் போது விளைவுகள் விபரீதமாக இருக்கும் என்று நினைத்தது இன்று உண்மையாகி விட்டது. ஒருசமயம் நாட்டின் மொத்த அன்னியச் செலாவணியில் 90—95 சதவிகிதம் வரை இதுதான் ஈட்டித் தந்தது. இன்றுள்ள நிலையை ஒரு குறும்புக்காரர் இப்படி விவரிக்கிறார்: ''சோகமான செய்தி என்னவென்றால், செம்பின் விலை சரிந்து விட்டது; சந்தோசமான செய்தி என்னவென்றால், ஜாம்பியாவின் செம்புச் சுரங்கங்கள் வற்றிவிட்டன.'' 1975லேயே நிலைமை கொஞ்சம் ஏடாகூடமாக இருந்தது. ஆனால் செம்பின் விலையில் மாற்றம் ஏற்படும் என்று எதிர்பார்த்து, நிதி நிறுவனமும், உலக வங்கியும், அதை ஒட்டியே திட்டங்களை வகுத்தன. 1975இல் உலக வங்கியின் சுரங்கத் துறையில் வேலை செய்து வந்த ஒருவர் இவ்வாறு கூறுகிறார்: ''ஏகப்பட்ட முடிவுகள் செம்பின் விலை எதிர்பார்ப்புகளை மையமாக வைத்து எடுக்கப்பட்டன. ஆனால் அவை எல்லாமே தவறாக போய் முடிந்தன.''

இப்படிப்பட்ட தவறான கணிப்புகளுக்கான பொறுப்பு, சமமாக பகிர்ந்து கொள்ளப்பட்டன; ஆனால் அதற்கான செலவு யார் முதுகில் ஏற்றப்பட்டது? முழுவதுமாக ஜாம்பியா மீதுதான். இன்று ஜாம்பியாவின் மொத்தக் கடன் 4 பில்லியன் டாலர்களாகும். சற்று தள்ளி இருந்து பார்த்தால், இன்று இது ஒரு பெரிய தொகையாகத் தெரியாது. ஆனால் ஒரு சிறிய நாடான ஜாம்பியாவைப் பொறுத்தவரை, இது ஒவ்வொரு ஜாம்பியனும் 600 டாலர் கடனாளி என்ற நிலைக்கு தள்ளியுள்ளது. அதோடு, இன்று இந்த சகதியிலிருந்து மீள அதற்கு வழி தெரியவில்லை. அதே சமயம் ஜாம்பியாவின் தனிநபர் தேசிய மொத்த உற்பத்தி வெறும் 470

டாலர்களாகும். ஜாம்பியா தான் வாங்கிய கடனின் தவணையை வட்டியோடு திருப்பி செலுத்த நினைத்தால், அது நாட்டின் மொத்த அன்னியச் செலவாணியைப் போல 195 சதவிகிதமாக இருக்கும். இதுதான் உலகிலேயே மிகவும் அதிக பட்ச விகிதமாகும்.

ஜாம்பியா தான் முன்பு வாங்கிய கடனை குறிப்பிட்ட கெடுவிற்குள் திருப்பிக் கொடுக்க முடியாமல் தவித்த போது, நிதி நிறுவனம் உட்பட மேற்கத்திய கடன் கொடுத்த அரசுகள், அதைத் தள்ளிப் போட்டுக் கொடுத்தன. ஒவ்வொரு முறையும் அது தவறாமல் தவறிக் கொண்டே வந்தது. தற்போது நிதி நிறுவனம், புதுக் கடன்களை நிறுத்தி வைத்துள்ளது. அதோடு அது வழக்கமாக முன்வைக்கும் சீர்திருத்தக் கொள்கைகளையும் ஜாம்பியா முன் தூக்கியெறிந்துள்ளது. இதன் விளைவாக ஜாம்பியர்களின் வாழ்க்கை நிலை இன்னும் மோசமாகி உள்ளது. ஏற்கனவே ஜாம்பியர்களின் வருமானம், 1974லிருந்து, சராசரியாக 44 சதவிகிதமாக குறைந்துள்ளது. 1985இல் மக்களின் அடிப்படை உணவான சோளத்தின் விலை திடீரென்று 50 சதவிகிதம் உயர்ந்தது; ரொட்டி விலை உயர்வு குபீரென்று 100 சதவிகிதத்தை தொட்டது. ஜாம்பியா நான்கு புறமும் நிலத்தால் சூழப்பட்ட ஒரு நாடாகும். பெட்ரோல் விலை இருமடங்கானதும், போக்குவரத்தை சார்ந்திருக்கும் கிட்டத்தட்ட அனைத்து பொருட்களின் விலை கடுமையாக பாதிக்கப்பட்டது. (பேருந்துக் கட்டணம் 70 சதவிகிதம் உயர்ந்தது.) மற்றதை விடுங்கள்; ஜாம்பியாவில் சாவுகூட சிம்மசொப்பனமாகியது. ஏனெனில் சவப் பெட்டிகளின் விலை 90 சதவிகிதம் உயர்ந்தது.

வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகை நிருபர் ஒரு மின் தூக்கியின் விநோதக் கதையை இவ்வாறு கூறுகிறார்.

'ஜாம்பியாவின் தலைநகரான லுசாக்காவில் உள்ள உயரமான கட்டிடத்தில் 23 மாடி உண்டு. அதில் ஒரே ஒரு மின்தூக்கி மட்டும் இயங்கும் நிலையில் இருந்தது. அங்குள்ள அலுவலக ஊழியர்கள் அதில் முண்டியடித்துக் கொண்டு ஏறி புளிமூட்டையாய் அடைந்து கொள்வர். பின்னர் எவரும் தான் இறங்க வேண்டிய மாடிக்கான பொத்தானை அமுக்குவது கிடையாது. அதன் எண்ணைச் சொல்ல பெரிய கூப்பாடு ஒன்றை போடுவர். மாயாஜாலம் போல் மின்தூக்கி வேண்டிய மாடிகளில் நின்று ஆட்களை இறக்கி விட்டு, சென்று கொண்டிருந்தது. பின்னர்தான் விஷயம் புரிந்தது — அவர்கள் கூச்சல் போட்டது மின்தூக்கியை நோக்கி அல்ல; அதன் மேலே அமர்ந்து கொண்டு, கையால் நட்டுகளை திருகி, இயக்கிக் கொண்டிருந்த, மின்தூக்கி இயக்குபவரை நோக்கிதான் அந்த அறைகூவல்!' அவ்வப்போது பழுதானாலும்கூட, ஜாம்பியாவின் பிரசித்தி பெற்ற இக்கட்டிடத்தில் வாடகைக்கு இருப்பவர் ஓடிவிடாமல் இருக்க எத்தனை முயற்சி! இது வேடிக்கையாக இருக்கிறதா? ஆனால் அதே சமயம், பிரச்சனையை உள்ளூர் ரீதியில் தீர்க்க முனையும் ஆர்வமும் இங்கு தெரிகிறதல்லவா? இது பொருளாதாரம் இருக்கும் நிலையை தெளிவாக படம் பிடித்துக் காட்டும். குதிரைக்கு லாடம் இல்லாததால், போரை இழந்த கதைதான்.

சரியான உதிரி பாகங்களும், இறக்குமதி செய்யப் படும் கச்சாப் பொருட்களும் இல்லாததால் ஜாம்பியா தொழிற்துறை 50 சதவிகிதம் திறனில்தான் இயங்கிக் கொண்டு உள்ளது. 1985 நவம்பரில், நாட்டில் மொத்தம் உள்ள 6500 டிராக்டரில், 2000தான் இயங்கு நிலையில் இருந்தன. தேசிய பேருந்து நிறுவனத்தின் வசம் இருந்த 555 பேருந்துகளில் 320 ஓரம் கட்டப்பட்டிருந்தன. ஜாம்பியாவின் முக்கிய சுற்றுலா கவர்ச்சியான விக்டோரியா நீர்வீழ்ச்சியைக் காண வரும் பயணிகளை

வரவேற்காமல், அதன் விமான நிலையம் மூடப்பட்டிருந்தது. ஏன் தெரியுமா? விமான நிலைய தீயணைப்பு வண்டி பழுதாகிக் கிடந்ததால்! அறுவடை செய்யப் பட்டுக் கிடந்த 25 லட்சம் மூடை தானியங்கள். வாகனங்கள், டயர்கள், பெட்ரோல், மற்றும் தார்பாலின் ஆகியவற்றின் பற்றாக்குறையால், கிராமப்புறங்களிலேயே போட்டு வைக்கப்பட்டிருந்தன. நாட்டிலுள்ள பெரிய செம்புச் சுரங்கத்தில் இருந்த 190 தாது அள்ளும் இயந்திரங்களில் 57 பயன்படுத்த முடியாத நிலையில் இருந்தன.

கைவசம் அன்னியச் செலாவணி இல்லாத ஒரு நாட்டால், அன்னியச் செலாவணியை ஈட்ட முடியாது. அதே போல, தன்னுடைய குடிமக்களுக்கு உணவளித்து பேண முடியாது. விவசாயிகளுக்கு விதை வாங்கவோ, உரம் வாங்கவோ கடன் கிடைப்பதில்லை. விற்பனை குறித்தும் நம்பிக்கையாக இருக்க முடியாது. 1980-81 இல், நிதி நிறுவனத்தின் கட்டுப்பாடுகள் இல்லாதிருந்த போது நல்ல விளைச்சல் இருந்தது. 1981-82 இல் நிலைமை தலைகீழ். பழி, மழையின்மை மீது சுமத்தப்பட்டாலும் கூட, குற்றவாளி சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிதி நிறுவனம்தான். ஜாம்பியாவில் நீண்டகாலம் வசித்தவரும், தற்போது 'பிரேட் பார் த வேர்ல்ட்' அமைப்பில் வேலை செய்து வருபவருமான பில்ரா என்ற அமெரிக்கர், 1981 இல் வேறு கிராமப்புற கடைகளில் உரங்கள் கிடைக்குமா என்று விவசாயிகள் நீண்ட தூரம் நடந்து வெறுங்கையோடு திரும்புவதை தான் கண்ணால் பார்த்துள்ளதாக தெரிவிக்கிறார்.

கிராமப்புற பொருளாதாரத்தின் வீழ்ச்சி கண்டிப்பாக நாட்டு மக்கள் அனைவரையும் பாதிக்கும். பில்ரா மேலும் கூறுகிறார்:

'பொதுவாக ஜாம்பியாவின் கிராமப்புறமெங்கும் உள்ளூர் மக்கள் நடத்தும் சிறு கடைகள் நிறைந்து

காணப்படும். அதில் மக்களின் அன்றாட நுகர் பொருட்கள் விற்கப்படும். ஆனால் 1976க்கும் 1981க்கும் இடையே, விநியோக அமைப்பு முறையில் அடிவிழுந்ததால், பாதிக்கு மேற்பட்ட கடைகள் இழுத்து மூடப்பட்டன. 1978க்கு பிந்தைய நாணய மதிப்பு குறைப்பு, நிதிநிறுவனத்தின் கட்டுப்பாடுகள் ஆகியவை, பல கிராமப் பகுதிகளை நுகர்பொருள் விநியோகத்தில் இருந்து துண்டித்து விட்டன. மாவட்ட தலைநகரை அடுத்து உள்ளே போனால், கடைகளில் எதையுமே பார்க்க முடியாது. கடைசியில் கிராம மக்கள், ஒன்று, அதிகப் பணத்தையும், நேரத்தையும் செலவழித்து நகர்புறங்களுக்குச் சென்று தேவையான பொருட்களை வாங்க வேண்டும்; அல்லது நான்கு, ஐந்து மடங்கு விலை கொடுத்து அங்கிருந்து வாங்கி விற்கும் வர்த்தகர்களிடம் வாங்க வேண்டும், இதுதான் வேகமாக அதிகரித்து வந்த கிராமப்புற வறுமையின் ஒரு அளவு கோலாகும்.'

பில்ரா மேலும் கூறுகிறார் :

'வேளாண்மை விரிவாக்கத் தொழிலாளர்கள், விதைப்பு காலத்தில், வெறுமனே கையைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தனர். ஏனெனில் வாகனமும் இல்லை; எரிபொருளும் இல்லை. கிராமப்புற ஏழைகள், கடந்த 10 ஆண்டுகளில் பரம ஏழையாகி விட்டனர்— நன்றி : சர்வதேச நிதிநிறுவனம்!

கிராமப்புற மருத்துவ மையங்கள், பொதுவாக இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளையும் உபகரணங்களையும் நம்பி இருந்ததால், இன்று கடுமையாக நோய்வாய்பட்டு வந்தவர்களையும் திருப்பி அனுப்பும் நிலைக்கு வந்துவிட்டன. நகர்புற மக்களின் நிலையும், இதைப் பொறுத்தவரை, ஒன்றும் பொறாமைப்படுகிற நிலையில் இல்லை. ஒரு பிரபல மருத்துவமனையில் பணிபுரிந்து வந்த ஒரு அமெரிக்க டாக்டர், அறுவை சிகிச்சை

கையுறைகள், கத்திகள் ஆகியவை கடும் பற்றாக்குறை யாக விளங்கியதாகவும், நோயாளிகள் இவற்றை அவர் களாகவே வாங்கிக் கொண்டு வருவதாகவும் கூறினார். அவசரமற்ற அறுவை சிகிச்சைகள் முடிந்தவரை தள்ளிப் போடப்பட்டன.

நிலைமை இப்படி இருக்க நாட்டில் ஊட்டச்சத்து குறைவு தலைவிரித்து ஆடியதில் வியப்பில்லை. உணவின் விலை இதற்கு முக்கிய காரணம். 1980 இல் சாதாரண மக்கள் ஒருவேளை உண்ண வேண்டுமானால், சம்பாத்தியத்தில் 80 சதவிகிதம் செலவிட வேண்டிய நிலையில் நாடு இருந்தது. அதற்கு பிறகு நிதிநிறுவனத்தின் கட்டுப்பாடுகள் இன்னும் மோசமாகியது.

இதற்கிடையே, ஜாம்பியாவில் இன்னும் பணம் இருந்தது—நிறையவே இருந்தது. ஆனால் அது விரல் விட்டு எண்ணக் கூடியவர்களிடம் மட்டுமே தஞ்சம் அடைந்திருந்தது. ஜாம்பியாவின் மேட்டுக்குடியினர் நன்னொழுக்க ரீதியாக மிகவும் திவாலான நிலையில் இருந்தனர். அவர்கள் நினைத்தால், 'ஷாப்பிங்' செய்ய தென்னாப்பிரிக்கா செல்வதும், படகுக் கார்களில் பவனி வருவதுமாக இருந்தனர். இம்மக்கள், மொத்தத்தில், நாட்டு மக்களிடம் இருந்து ஒட்டுமொத்தமாக அன்னியப் பட்டு இருந்தனர்—ஒரே ஒரு விதிவிலக்கு—அவர்களுக்கு வேலைக்காரிகள் தேவைப்பட்டனர்!

திடீரென்று உதித்த உண்மை உணர்வுடன், அந்த பழைய கடன்காரன், ஆப்பிரிக்காவின் இன்றைய குழப்பத்திற்கு, கடன் கொடுத்தவர்களும் காரணம் என்று ஒப்புக் கொள்ளக் கூடும். நிதிநிறுவன அதிகாரி ஒருவர் வாஷிங்டன் போஸ்ட் நிருபரிடம், ''ஜாம்பியாவில் நடை பெற்றதை தடுத்திருக்கலாம். அந்நாட்டை தரைமட்ட மாக்கிய பெருமை எங்களையே சாரும்'' என்று கூறியிருக்கிறார்.

ஜாம்பியர்கள், நிதிநிறுவனத்தின் இத்தகைய அக்கறையை பாராட்டுவார்கள் என்று நம்பலாமா?

## கென்யா : சுடுகாடு நோக்கிய பயணம்?

ஆப்பிரிக்காவைப் பொறுத்தவரை, செல்வக் கொழிப்பிற்கான பயணம், அரசு அதிகார வட்டத்திற்குள் நுழைந்து அங்கேயே தங்கி விடுவதுதான். ஜனநாயக ரீதியான தேர்தல்கள் என்பது இக்கண்டத்தைப் பொறுத்தவரை வெறும் கேலிக் கூத்துதான். 1986 இறுதிவாக்கில், நைரோபியில், 8 வருடங்களாக தொடர்ந்து பதவியில் இருந்து கொண்டிருந்த அதிபர் டேனியில் அரப் மோய்க்காக,ஒரு பிரார்த்தனைக் கூட்டம் நடந்தபோது, நானும் அதில் கலந்து கொண்டேன். அதற்குப் பிறகு அதில் கலந்து கொண்ட ஒரு பாதிரியார், "நான் பிரார்த்தனையின் போது, இதுவே அமெரிக்கா வாக இருந்தால், 8 வருடம் என்பது ஒரு அதிபரின் கடைசி வருடமாக இருக்கும்; ஆனால் இங்கு முடிவு கண்ணுக்கு எட்டவேயில்லையே என்று நினைத்துக் கொண்டேன். மக்களோடு விவாதிக்காமல், எவருமே காலம் காலமாக கோலோச்ச அனுமதிக்கக்கூடாது," என்று என்னிடம் கூறினார்.

எப்பொழுதுமே கென்யா அரசிற்கு கிறித்துவ மதபீடத்தை கண்டால் ஆகாது. அதை அரசிற்கு எதிராக சதி செய்யும் அமைப்பு என்று அது வர்ணிக்கும். அதற்கு முக்கிய காரணம், கென்யாவிலுள்ள தேர்தல் முறை. அங்கு ஒரு வேட்பாளர் போட்டியிடும் போது, அவரை ஆதரிப்பவர்கள், அவரின் பின்னால் அணிவகுத்து நிற்க வேண்டும். இதற்கும் ஜனநாயகத்திற்கும் காததூரம் என்று கிறித்துவ மதபீடம் வெளிப்படையாக விமர்சனம் செய்யத் துணிந்தது, அரசின் விரோதத்தை அதற்கு சம்பாதித்துக் கொடுத்தது.

மேற்கைப் பொறுத்தவரை தனியார் கொள்கை அமலில் இருக்கும் வரை, ஜனநாயகம் குறித்து அவ்வளவு கண்டிப்பு காட்டுவதில்லை. அக் கண்ணோட்டத்தில், கென்யா, எப்பொழுதுமே, ஒரு கிழக்கு ஆப்பிரிக்க வெற்றிக் கதையாக மிளிர்ந்தது. கென்ய மக்களைப் பொறுத்தவரை, அவர்களிடமும் அதே அமெரிக்க மனப்பான்மை கோலோச்சுவதுதான் கொடுமை. வாழ்க்கையின் உச்சிக்கு போக வேண்டுமென்று நினைத்தால் போய்விடலாம். மனசு வைக்க வேண்டும். ஒவ்வொரு கென்யனின் கனவும் எப்படியாவது ஒரு மெர்சிடிஸ்—பென்ஸ் கார் வாங்குவதுதான்! ஏழைகளைப் பற்றி எவனுக்கு அக்கறை?

இந்த 'பென்ஸியர்'கள் கூட்டத்தை தவிர்த்து (கொள்ளையடித்தோ, கொலை செய்தோ, எப்படியோ வாங்கிவிட வேண்டும் ஒரு பென்ஸ்—இதுதான் வாழ்க்கை லட்சியம்!) கென்யாவிற்கு மற்றொரு புகழும் (? !) உண்டு. அங்குதான் ஆப்பிரிக்காவிலேயே மிகப்பெரிய சேரியான 'மாத்தரே' இருக்கிறது. நான் அதை கோடை காலத்தில் சென்று பார்த்தேன். மழைக்காலத்தில் எப்படியிருக்கும் என்பது ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்! எல்லோருமே பணக்காரர்களாக இருக்கமுடியாது; ஏழையாய் இருப்பது மிகவும் அவலமான விஷயம். அதனால் கென்யர்கள் தங்களது ஆத்திரத்தை பிற கென்யர்கள் மீது காட்டி தணித்துக் கொள்கின்றனர். அதற்கு 'மாத்தரே நோய்' என்ற பெயரே வந்துவிட்டது. கிடைத்தவனை நையப் புடைத்து அடித்து நொறுக்குவது அவர்களுக்கு ஒரு வடிகாலாகி விட்டது. ஆனால் இது அடிப்படையில் ஒரு ஆப்பிரிக்கனின் குணம் அல்ல.

எது எப்படி இருந்த போதிலும், கென்யர்கள் அண்டை நாட்டாரை விட மிகவும் செழிப்பாக இருப்பதாக முழங்க, கென்யா தயங்குவதில்லை. அது உண்மையாகவும் இருக்கலாம். ஆனால் இப்படி, 'உன்னைப்

பார்க்கும் போது நான் பரவாயில்லை' என்ற மனப் பான்மையுடன் உள்ள ஆப்பிரிக்க நாடுகள் கூட, விரைவில் கடன் தொல்லை, சர்வதேச சந்தைச் சக்திகளின் சதியில் சிக்கும் அவலம் ஆகியவற்றில் புதைந்து போய் விடு கின்றன. விளைவு? பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையே உள்ள இடைவெளி அதல பாதாளமாகி விடுகிறது.

சர்வதேச நிதி நிறுவனத்தின் அதிகாரபூர்வமான வரலாற்றியலாளரான மார்கரெட் டி வெரிஸ், நிதி நிறுவனத்தின் வரலாறு குறித்து எழுதியிருந்த ஒரு கட்டுரையை என் கென்ய நண்பர் என்னிடம் காண்பித்தார். அதில் மார்கரெட் இவ்வாறு குறிப்பிடு கிறார். 'வளர்ச்சியே அடையாத ஒரு நாட்டின் பொருளாதாரத்தின் மீது அந்நாட்டின் தேசியக் கொள்கைகள் (அவை எந்தச் சித்தாந்தத்தை சார்ந் திருந்தாலும், அவை எப்படி அமல் செய்யப்பட்டாலும்) ஏற்படுத்தும் தாக்கத்தைக் காட்டிலும், உலகச் சந்தை அதிகமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.' ஆனால் நிதி நிறுவனம் தனது சொந்த வரலாற்றியலாளரின் கருத்தைக் கூட சட்டை பண்ணுவதாகத் தெரியவில்லை.

என் கென்ய நண்பரின் கருத்துப்படி, கென்யாவிலும், பிற மூன்றாம் உலக நாடுகளிலும் பொருள் உற்பத்தி/ விற்பனை ஆகா, ஓகோ என்று தொடர்ந்து இருக்கப் போவதில்லை. அது கிட்டப்பார்வை உடையது மட்டுமல்ல, அது வெறும் மாயைதான். உதாரணமாக கென்யா, பிரேசிலின் இழப்பில் இருந்து லாபம் பெறலாம். ஆனால் அதுவும் தற்காலிகமானதே! நீண்டகால திட்டம் என்பது சாத்தியமானதல்ல. இத் திடீர் வரவுகள், கழுத்தை நெருக்கும் கடனை அடைக்க கைகொடுக்கக் கூடும். ஆனால் ஒருபோதும் நீடித்து நிலைத்திருப்ப தில்லை. உதாரணமாக 1986 கடைசியில், கென்யாவின் முக்கிய ஏற்றுமதியான தேயிலை, அதற்கு முந்தைய

வருடம் சம்பாதித்து கொடுத்ததில் பாதியளவுகூட கொடுக்கவில்லை.

அனைத்து நாடுகளும், ஒரே கொள்கைகளை பின்பற்றி, ஒரே பொருளை ஏற்றுமதி செய்து ஒன்றுக்கொன்று அடித்துக் கொண்டு சாகும் நிலைக்கு ஆரத்தி எடுப்பது சர்வதேச நிதி நிறுவனத்தின் வேலை. பிராந்திய கூட்டுறவு சிறிய அளவில்கூட ஏற்பட்டு விடுவதில் நிதி நிறுவனத்திற்கு உடன்பாடு கிடையாது.

கென்யா 1975லிருந்தே சர்வதேச நிதி நிறுவனத்தின் குரங்குப்பிடியில் இருந்து வந்துள்ளது. நிதி நிறுவனத்தின் ஒரு அதிகாரி, கென்ய ரிசர்வ் வங்கியின் அலுவலகத்தில் உட்கார்ந்து கொண்டு அரசின் வரவு-செலவு தீர்மானம் உட்பட எல்லாவற்றிலும் மூக்கை நுழைத்துக் கொண்டிருப்பார். நான் என் கென்ய நண்பரிடம், அரசு வரவு-செலவு திட்டத்தை ஆராய்ந்து, நிதி நிறுவனத்தின் கட்டுப்பாடுகளால் எப்படி கென்யா பாதிக்கப்பட்டது என்பதை துல்லியமாக சுட்டிக்காட்ட முடியுமா என்று வினவினேன். என் நண்பரால் சிரிப்பை அடக்க முடியவில்லை. வரவு-செலவு திட்டத்தில் குறிப்பிடப்படும் எண்கள், தொகைகள் ஆகியவற்றிற்கு பெரிதாக மதிப்பு ஏதும் கிடையாது. திட்டத்தின் பெரும் பகுதியை ராணுவச் செலவு முழுங்கிவிடும். அது அரசு ரகசியம். அதைக் கேள்வி கேட்க முடியாது. வேறு பல பெரிய செலவினங்களும் மறைமுகமாக குறிக்கப்பட்டிருக்கும். இங்கு நண்பர் சுவாரசியமான ஒரு தகவலையும் குறிப்பிட்டார். கென்ய அதிபரின் அலுவலர்கள், பத்திரிகை, தொலைக்காட்சி, பூனைகள், தொடர் வாகனங்கள் அடங்கிய படை பரிவாரத்திற்காக தினமும் செலவிடப்படும் தொகை சுமார் 20 லட்சம் ரூபாய்கள் (1986 கணக்குப்படி!). அதிபர் டேனியல் அரப் மோய்க்கு

கால்—வாய் நோய் இருக்கிறது என்பது பரவலான ஜோக். அதாவது அவர் நடந்து கொண்டே இருக்கிறார்; வாய் ஓயாமல் பேசிக் கொண்டே இருக்கிறார். ஆனால் நிதி நிறுவனம் ஒருபோதும் ராணுவச் செலவினங்களுக்கோ, இதுபோன்ற வினோத நோய்களுக்கோ கட்டுப்பாடுகள் எதுவும் விதிப்பதில்லை.

கென்யாவில் தனது முன்னுரிமைகள் என்ன என்பது குறித்து 1983 இல் நிதி நிறுவனம் ஒரு ரகசிய அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. இந்த ஆவணத்தின்படி, வேளாண் பொருட்களின் ஏற்றுமதி பாதிக்கா வண்ணம், அதன் உற்பத்தியைப் பெருக்குவது, நிதி நிறுவனத்தின் நோக்கமாக இருந்தது. அதைக் கருத்தில் கொண்டு 1983 ஜனவரி—பிப்ரவரியில் வேளாண், கால்நடைப் பொருட்களின் உற்பத்தி விலை உயர்த்தப்பட்டது. கரும்பு விலை 33 சதவிகிதமும், கோதுமை 35 சதவிகிதமும், பருத்தி 13 சதவிகிதமும், பால், இறைச்சி போன்றவை 12 முதல் 17 சதவிகிதமும் உயர்த்தப்பட்டன.

விவசாயிகளுக்கு மகிழ்ச்சியான செய்திதானே என்கிறீர்களா? அதுதான் இல்லை. நிதி நிறுவன அறிக்கை இப்படி போகிறது: ''அரசு கடைபிடித்த கொள்கை, வேளாண் பொருட்களில் செய்யப்பட்ட மாறுதல்கள், நுகர் பொருட்களில் தாக்கம் ஏற்படுத்தும் வகையில் விளங்கியது.'' சுப்பனிடம் கொள்ளையடித்து குப்பனிடம் கொடுக்கும் கதைதான். சரி! எப்படியாகிலும் விவசாயி கொஞ்சமாவது பயனடைந்து இருக்க வேண்டும் என்று கருதுகிறீர்களா? மீண்டும் உங்களுக்கு தோல்வி! 1985 ஆம் வருடத்திய அரசு பொருளாதார கணக்கெடுப்புபடி, 1984 ஆம் வருடத்தில் வேளாண்மைத் துறையில், நிதி நிறுவனம், வேளாண் உற்பத்திப் பொருட்களின் விலையை உயர்த்திய பிறகு, வர்த்தக விகிதம் குறைந்துள்ளது. அதாவது விவசாயிக்கு வேளாண்மையில் இருந்து கிடைக்கும் வருமானத்தின் அளவு, அவன்

வாங்கும் நுகர் பொருட்களின் அளவை ஒப்பிடும்போது குறைந்துள்ளதே தவிர உயரவில்லை. மேலும், வேளாண் விரிவாக்க சேவைகளின் அதிகச் செலவு (உதாரணம்—நீர்பாசனம்), உபயோகிப்பாளர் தலையில் போடப்பட்டு விட்டது. இறுதியில், சர்வதேச நிதி நிறுவனத்தின் சமீபத்திய சீரமைப்பு திட்டத்திற்குப் பிறகு, விவசாயியின் நிலைமை மேலும் மோசமடைந்து உள்ளது என்பதுதான் உண்மை.

நகரத்திய நுகர்வோர், அதிலும் குறிப்பாக மிகவும் கீழ்தங்கிய நிலையில் உள்ளோர், மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். சர்வதேச நிதி நிறுவனம் இதை பகிரங்கமாக ஒப்புக் கொள்வதில்லை. குதிரை கீழே தள்ளியதும் இல்லாமல், குழியும் பறித்த கதையாக, சர்வதேச நிதி நிறுவனத்தின் கொள்கைகள், பலவித வருவாய் குழுக்கள் மீது ஏற்படுத்திய சமுதாயத் தாக்கம் பெருமளவிற்கு சமமானதுதான் என்று கூறிக்கொள்கிறது. எடுக்கப்படும் சிக்கன நடவடிக்கையால், சமுதாயத்தில் செழிப்பாக இருக்கும் மக்கள் பாதிக்கப்பட்டால் அதில் என்ன தவறு? என்று வினவுகிறது நிதி நிறுவனம். இருக்கும் பிரச்சனை வெறும் பொதுமக்கள் தொடர்பானதுதான் என்பது நிதி நிறுவனத்தின் கணிப்பு. இருப்பதைப் பிடுங்கிக் கொள்ளும்போது, வைத்திருப்பவன், இதுவரை சொகுசாக வாழ்ந்தவன் சத்தம் போடத் தான் செய்வான்! இதுதான் நிதி நிறுவனக் கருத்தோட்டம். நிதி நிறுவனத்தின் திட்டங்கள், மக்களின் பாகுபாட்டை அகற்றும் என்பது அதன் அறைகூவல்.

நிதி நிறுவனத்தின் 1985 ஆம் ஆண்டறிக்கை இவ்வாறு கூறுகிறது: 'நிதிநிறுவனத்தின் சீரமைப்பு திட்டங்கள், குறிப்பிடத்தக்க வருவாய் விநியோகப் பாதிப்பை ஏற்படுத்தி இருக்கிறது என்பதற்கு தீர்மானமான நிரூபணங்கள் எதுவுமில்லை.'

பின் ஏன் அதன் திட்டங்கள் குறைகூறப்படுகின்றன?

இந்த சீரமைப்பு திட்டங்கள் சில குறிப்பிட்ட குழுக்கள் மீது, குறிப்பாக ஒருமித்து எதிர்ப்பு குரல் கொடுக்கும் நகர்புற தொழிலாளர்கள், அரசுப் பணியாளர்கள், ராணுவம் போன்றவர்கள் மீது அடிக்கடி தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இப்படிக் குழுக்கள், திட்டத்திற்காக, சில பாதிப்புகளுக்கு ஆளாக வேண்டியது கட்டாயம்... நிதி நிறுவனம், இத்தகைய புகார்கள் எங்கிருந்து வரும் என்பதை முன்கூட்டியே கணித்து வைத்திருந்து, அதை சந்திக்க தயாராக இருக்க வேண்டும். உண்மையிலேயே 'யார் ஏழை?' என்பதை அவர்கள் கண்டுபிடிக்க முயல வேண்டும். எதிர்ப்பவர்கள் எல்லோரும் 'அப்படிப்பட்ட ஏழைகளாக' இருக்க வேண்டும் என்று கட்டாயமில்லை.

நிதி நிறுவனத்தின் 1985 ஆண்டறிக்கையும், 1983 ஆம் வருடத்திய கென்யா ரகசிய அறிக்கையையும் ஒப்பு நோக்கினால் சில விஷயங்கள் புலப்படும். கடந்த சில வருடத்திய கொள்கைகள், இந்நாட்டைப் பொருத்த வரை, ஏழைகள் மீது கடுமையான சுமையை ஏற்றி வைத்துள்ளது என்பது உறுதி. நிதி நிறுவனம் கூறுவதிற்கு மாறாக, இதனால் கையைச் சுட்டுக் கொண்டவர்கள், கொஞ்சம் வசதியானவர்கள் இல்லை; அடிமட்டத்தில் இருப்பவர்கள்தான்!

## அட்டவணை : 1

### 1982 இல் நைரோபியில் அடிப்படை பொருள்களின் விலை உயர்வு (குறியீட்டு எண் 1975=100)

| | உணவு | உடை/ காலணி | வாடகை | எரிபொருள் சக்தி |
|---|---|---|---|---|
| அடிமட்ட வருமானம் | 242 | 308 | 314 | 393 |
| நடுமட்ட வருமானம் | 229 | 220 | 288 | 364 |
| உயர்மட்ட வருமானம் | 232 | 213 | 259 | 311 |

*ஆதாரம் : சர்வதேச நிதிநிறுவனத்தின் கென்யா மீதான ரகசிய அறிக்கை.*

அட்டவணை 1ஐ நன்றாக உற்றுப் பாருங்கள். அதில் இடம்பெற்றுள்ள விலைவாசி உயர்வுகள், அதன் புள்ளி விபரங்களில் இருந்தே எடுக்கப்பட்டவையாகும். அவை வாழ்வின் மிக அத்தியாவசியமான பொருட்கள். 1975ஐ அடிப்படை வருடமாக எடுத்துக் கொண்டதற்கு காரணம், அவ்வருடம்தான் நிதி நிறுவனம் கென்யாவிற்குள் காலடி எடுத்து வைத்தது. இந்த அட்டவணையை சரியாகப் பார்த்தால், எப்படி நோக்கினாலும், மிகக் குறைந்த வருமானம் உள்ளவரே அதிகம் பாதிக்கப் பட்டது தெரியவரும். உதாரணமாக, உணவிற்காக, குறைந்த வருமானம் உள்ளவர்கள் தங்கள் வருமானத்தில் 41 சதவிகிதத்தையும், நடுத்தர வருமானம் உள்ளவர்கள் 35 சதவிகிதத்தையும், உயர்ந்த வருமானம் உள்ளவர்கள் 25 சதவிகிதத்தையும் செலவிடுகின்றனர். விலைவாசி உயர்வால், மூன்று பகுதியினருமே பாதிக்கப்பட்டிருந்தாலும், உயர்ந்த வருமானம் உள்ளவர்கள், ஓரளவு சமாளித்து

உள்ளனர். உயர் வருவாய் உள்ளவர்களை குறைந்த வருவாய் உள்ளவர்களோடு ஒப்பிட்டு நோக்கினால், குறைந்த வருவாய் உள்ளவர்கள், அதிகப் பளுவை சுமக்க வேண்டியிருந்தது தெரிய வரும்; அதாவது அவர்கள் உணவில் 10 அலகுகளையும் உடையில் 95 அலகுகளையும் எரிபொருளில் 82 அலகுகளையும் அதிகம் தாங்க வேண்டியிருந்தது. நிதி நிறுவனத்தின் சீரமைப்புக் கொள்கை, 'விநியோக ரீதியாக சமத்துவமிக்கதாக' விளங்கியதாக, இது நிரூபிக்கும் பட்சத்தில், பன்றிகள் பறந்தால் வாயைப் பிளந்து கொண்டு பார்க்காதீர்கள்.

நிதி நிறுவனம், இது கென்யாவிற்கே உரித்தான தனிக்கதை (இதை மறுக்க முடியாது). ஒரு விதிவிலக்கு; மற்ற நாடுகளில் புனர் நிர்மாண சீரமைப்பு திட்டங்களால் பாலாறும், தேனாறும் ஓடுகின்றன; அவற்றால் ஏழைகளைக் காட்டிலும் பணக்காரர்களே அதிகம் பாதிக்கப்பட்டனர், என்று சப்பைக்கட்டு கட்டும் என்று எதிர்பார்க்கிறேன்—அப்படி செய்யும் பட்சத்தில், அது, பிற நாடுகளில் அது மேற்கொண்ட ஆய்வுகளை பொது மக்கள் முன் வைக்க வேண்டும் என்பது என் வேண்டுகோள். எனக்கு நிதி நிறுவனத்தின் கென்ய ரகசிய அறிக்கை அதிகாரபூர்வமாக கிடைக்கவில்லை; ரகசிய அறிக்கை, ரகசியமாகத்தான் கிடைத்தது என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.

கென்யத் தொழிலாளர்களின் ஊதியம் குறித்த புள்ளி விபரங்களும் ஜீரணிக்க முடியாதவாறே உள்ளன. ஊதியம் உயர்ந்துள்ளதை மறுக்க முடியாது; ஆனால் பணவீக்கம் அளவு உயரவில்லை. 1975 லிருந்து இன்று வரை, சராசரியான ஊதியம் இரட்டிப்பாகி உள்ளது. குறைந்தபட்ச கூலி 60 சதவிகிதம் உயர்த்தப்பட்டுள்ளது. ஆனால் அவர்களுடைய உண்மை ஊதியத்தின், அதாவது அவர்களின் வாங்கு சக்திக்கு நேர்ந்த கதி என்ன? அது

ஒரு தனிக்கதை! நைரோபி பல்கலைக்கழகத்தை சேர்ந்த வளர்ச்சி ஆய்வு நிறுவனத்தின் பேராசிரியர் ஒருவர் மேற்கொண்ட ஆய்வு, 1981க்கும் 1983க்கும் இடையே தொழிலாளர்களின் உண்மை ஊதியம் 20 சதவீதம் குறைந்து உள்ளதாக தெரிவிக்கிறது. 1975 இல் நிதி நிறுவனம் நுழைந்தபோது, குறைந்தபட்ச கூலி, 1984 இல் இருந்ததைக் காட்டிலும் 42 சதவீதம் அதிகமாக இருந்தது.

அதே அறிஞர் மேற்கொண்ட மற்றொரு ஆய்வு, அரசின் முன்னுரிமைகள் எவ்வாறு மாறியுள்ளன என்பதையும் தெரிவிக்கிறது. 1964—73க்கு இடையே, சமுதாயச் செலவினங்கள் முதலிடம் வகித்தன. கல்வி, உடல்நலம் போன்றவை வருடத்திற்கு 15 சதவிகிதம் உயர்ந்து வந்தது. ஆனால் 1974—83க்கு இடையே நிலைமை தலைகீழ்! ராணுவச் செலவு 11.7 சதவிகிதமும், வாங்கியகடனுக்கான வட்டி 13.7 சதவிகிதமும் உயர்ந்தது. கல்வி, உடல்நலம் போன்றவை வருடத்திற்கு 3 சதவிகிதம் கூட உயரவில்லை. முன்பு சமுதாய முன்னேற்றத்திற்காக செலவிடப்பட்ட தொகையை இன்று ராணுவமும், வாங்கியுள்ள கடனும் விழுங்கி விடுகின்றன என்பது தெளிவு.

விலைவாசி, ஊதியம், அரசின் முன்னுரிமை ஆகியவை நேரடியாக மக்களின் நலன்களோடு தொடர்பு உடையவை. ஒரு சமுதாயம் எப்படி முன்னேறுகிறது என்பதற்கும், சமுதாய சமத்துவத்தை அது பேணிக் காக்கின்றதா என்பதை அளவிடுவதற்கும், குழந்தைகளுக்கு கிடைக்கும் சத்துணவு சிறந்த குறியீடு ஆகும். அரசு அதிகாரபூர்வமாக, 1977, 1979 மற்றும் 1982 இல் மூன்று கிராமப்புற குழந்தை சத்துணவு ஆய்வுகளை மேற்கொண்டது. அதன்படி 1977 இல் ஐந்து வயதிற்கு உட்பட்ட குழந்தைகளில் 24 சதவிகிதம் பேர் குறை வளர்ச்சி உடையவர்களாக இருந்தனர்; 1982 இல் இது

28 சதவிகிதமாக உயர்ந்து விட்டது. அதோடு, 46.5 சதவிகிதம் குழந்தைகள், ஆய்விற்கு முந்தைய இரு வாரங்களில் நோய்வாய்ப்பட்டிருந்தனர்.

நிதி நிறுவனத்தின் ரகசிய அறிக்கை உணவு உற்பத்தியும், ஏற்றுமதியும் போதுமான அளவு இருக்க வேண்டும் என்று கூறினாலும், உண்மை விளையாட்டு, உணவு 0 ஏற்றுமதி 1 என்ற கணக்கிலேயே இருந்தது. பணப் பயிர் அதிக முன்னேற்றம் கண்டுள்ளதையும், அடிப்படை உணவுப் பயிர்கள் இறங்குமுகமாக இருந்ததையும் வைத்து இதைக் கண்டு கொள்ளலாம்.

பணப் பயிருக்கு அளிக்கப்படும் ஆதரவு, இரு முக்கிய மோசமான பக்க விளைவுகளை ஏற்படுத்தும். முதலாவது வெளிப்படையானது; குறைவான உணவே பயிரிடப் படுகிறது. இரண்டாவது, சிறு விவசாயிகள், தேயிலை அல்லது காபி போன்றவற்றை பயிரிடும் போது, அவர்களுக்கு அதிகப் பணம் கிடைக்கிறது. அவர்கள் அதைக் கொண்டு அதிக உணவை வாங்குவார்கள் என்று எதிர்பார்த்தால், நடப்பில் அப்படி நடப்பதில்லை. ஏனெனில் பணப் பயிரில் இருந்து வரும் பணத்தை ஆண்கள் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ளனர். பெண்கள் பொதுவாக, சோளம் போன்றவற்றை விற்று அதன் மூலம் கிடைக்கும் பணத்தைக் கொண்டு குடும்பம் நடத்துகின்றனர். இப் பணப் பயிர்கள், கணவன்—மனைவி தகராற்றிற்கும் அடிகோலுகிறது.

பொதுவாக பெண்களுக்கு பணம் கிடைத்தால், அவர்கள் அதை, குடும்ப நலனுக்காக செலவிடுகின்றனர். குறிப்பாக குழந்தைகளின் உணவிற்காக செலவிடுகின்றனர். இதை ஐ. நா.வின் ஆய்வும் உறுதி செய்கிறது. ஒரு யுனிசெஃப் ஆய்வு இப்படி கூறுகிறது: 'கரும்பு பயிரிடுவதில், குடும்பத்தினர் அனைவரின் உழைப்பும் செலவிடப்பட்டாலும், எங்களது கணவன்மார்கள்

அதன் வருவாயை கட்டுப்படுத்தி செலவும் செய்கின்றனர்; அதில் பெரும் பகுதி குடிக்கே போய்விடுகின்றது என்று பல பெண்கள் புகார் செய்துள்ளனர்.'

ஆப்பிரிக்க பெண்கள், உணவு, மற்றும் உணவுப் பயிர்கள் மீதான தீர்மானங்கள் எடுக்கும் அதிகாரம் பெற்றவர்களாக விளங்கினாலும், பணத்தை செலவிடும் அதிகாரம் இன்னும் ஆண்கள் வசமே உள்ளது. ஆண்கள் தங்களது வருவாயை அதிகரிக்க, பெண்களின் உழைப்பை உபயோகித்துக் கொள்வதால், பெண்களுக்கு, குடும்பத்தைக் கவனிக்க, குழந்தைகளை பராமரிக்க நேரம் போதாமல் போய்விடுகிறது. சாதாரண ஆப்பிரிக்க பெண்மணி, கொத்தடிமைகளைக் காட்டிலும் அதிக நேரம் உழைக்கிறாள். அவள் எதையாவது விட்டுக் கொடுக்க வேண்டியுள்ளது.

ஐ. நா. ஆய்வு, பெண்கள் எதை எதை விட்டுக் கொடுக்கிறாள் என்பதையும் குறிப்பிடுகிறது.

— சமையல் பழக்கம் மாறுகிறது. வேகமாக, எளிதாக தயாரிக்கும் உணவுக்கு முதலிடம் தரப்படுகிறது. ஒருநாளைக்கு ஒருமுறை மட்டுமே சமைத்து வைக்கப்படுவதால், வைட்டமின் இழப்பு ஆகியவை ஏற்படுகின்றது.

— அவளால் குடும்பத்தினருக்கு சரியாக பகிர்ந்து அளிக்க முடியவில்லை. குழந்தை உணவு தயாரிக்க நேரம் கிடைப்பதில்லை. குழந்தைகள் பெரும்பாலும் உணவு நேரத்திற்கு முன்பே தூங்கி விடுகின்றனர்.

— வீட்டைச் சுத்தமாக வைத்திருத்தல் பாதிக்கப் படுகிறது.

— எரிபொருள் சேகரிப்பு மற்றும் நீர் கொண்டு வருதல் பாதிக்கப்படுகிறது.

— குழந்தை வளர்ப்பு மற்றும் பேணல் முதியோர் வசமும், மூத்த குழந்தைகள் வசமும் ஒப்படைக்கப் படுகிறது.

குழந்தைகளுக்கு, அவர்களுடைய மூத்த அண்ணன் அல்லது அக்கா உணவு ஊட்டும் போது, பொடிசுகளுக்கு குறைவான பங்கே கிடைக்கிறது என்பதையும் அந்த ஆய்வு விளக்குகிறது. ஏனெனில், பெரிய குழந்தைகளும் பசியோடு இருப்பதால், தங்கள் பங்கைவிட அதிகமாக உண்டு விடுகின்றனர். அம்மாவிற்கு இதை கவனிக்க நேரம் கிடைப்பதில்லை. குழந்தைகளின் வளர்ச்சியும், விருத்தியும், அவர்களுக்கு யார் உணவு ஊட்டுகிறார்கள் என்பதைப் பொறுத்தே அமைகிறது.

ஆக, பணப் பயிரை தேர்ந்தெடுப்பது வெறும் பொருளாதார தீர்மானம் அல்ல. வாங்கிய கடனை திருப்பி அளிக்க, கென்யா போன்ற ஆப்பிரிக்க நாடுகள், பயங்கரமான சமுதாய பாதிப்புகளை அதற்கு விலையாக அளிக்க வேண்டியுள்ளது. அதில் மிக அதிகமாக பாதிக்கப்படுவது பெண்களும் குழந்தைகளும்தான்— ஏனெனில் அவர்கள்தானே சமுதாயத்தின் நலிந்த உறுப்பினர்கள்!

## தான்சானியா: வறுமைக்குள் பாய்ச்சல்

பொருளாதாரப் பின்னடைவின் தாக்கம் மக்கள் தொகையின் பெரும் பகுதியினரின் நன்னொழுக்கத்தை பாதித்துள்ளது. சமுதாயப் பொறுப்பும், பொது அக்கறையும் கீழிறங்குமுகமாக உள்ளன. 1960, 70களின் அரசியல் உற்சாகம் ஒரேயடியாக வடிந்து போய், அவ்விடத்தை பரவலான விரக்தியும், சமுதாய அக்கறை யின்மையும் ஆக்கிரமித்துக் கொண்டன.

— நுகுயுரு லிபும்பா, தார்—எஸ்—சலாம் பல்கலைக் கழகம்

1960களின் பின் பகுதியிலும், 1970களின் துவக்கத்திலும், 'முவாலிமு' (ஆசிரியர்) என்று மக்களால் அன்பாக அழைக்கப்பட்ட பெருந்தலைவர் ஜீலியர் நையரேரேயின் ஆட்சியின் கீழ் இருந்த தான்சானியா, பல வளர்ச்சி கொள்கைவாதிகளின்; கடன் வழங்கிய நாடுகளின் செல்லக் குழந்தையாக விளங்கியது. அக் காலகட்டம் அரசியல் உற்சாகம் கள்வெறி கொண்டு ஆடிய காலம். தான்சானியா, மனித நேயத்துடன் கூடிய சோசலிசத்திற்கான முன்மாதிரிக்கு உத்தரவாதம் அளிப்பதாக காணப்பட்டது. இப்பொழுது அங்கு பொருளாதாரம் சிதைந்து காணப்படுவதால், ஆப்பிரிக்காவில் சோசலிசமாவது, கத்திரிக்காயாவது என்று 'சுதந்திரச் சந்தைப் பூசாரி'களை முழங்க வைத்துள்ளது.

தான்சானியாவில் எப்பொழுதுமே அரசுத்துறை பெரும் ஆதிக்கம் செலுத்தி வந்துள்ளது. அது செலவின மிக்கதாயும், திறமையற்றும் விளங்கியதை மறுக்க முடியாது. ஆனால் மற்றொரு உண்மையையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். தான்சானியா ஒரு சோசலிச நாடாக இருந்ததோ, இல்லையோ அது எப்பொழுதும் 'வெளி உலகத்தை' பெரிதும் சார்ந்திருந்தது. 1976-77இல், பிரேசிலை கடுங்குளிர் தாக்கியதால், உலக காப்பிச் சந்தையில், காப்பி விலை உயர்ந்தது. அச்சமயம் சந்தடி சாக்கில், தான்சானியா நல்ல அறுவடை செய்தது. தான்சானியா, சுதந்திரம் அடைந்ததில் இருந்து எப்பொழுதுமே இறக்குமதிக்கு கட்டுப்பாடுகளை விதித்து வந்துள்ளது. ஆனால் இந்த 1977ஆம் வருடத்திய திடீர் லாபம், ஒரு போலியான பாதுகாப்பு உணர்வை அதற்கு அளித்தது. அதனால் இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. விளைவு? 1977 இல் இறக்குமதி 39 சதவிகிதம் அதிகரித்தது. அதில் பெரும்பாலானவை உடனடி நுகர்பொருட்களே. எதுவுமே நீண்டகால முதலீட்டிற்காக தருவிக்கப்படவில்லை. இறக்குமதி.

அன்னியச் செலாவணி—சேமிப்பை அப்படியே கபளீகரம் செய்வதைப் பார்த்ததும் கட்டுப்பாடுகள் மீண்டும் கொண்டு வரப்பட்டன. ஆனால் காலங் கடந்துவிட்டது. *1981* வாக்கில், அந்நியச் செலாவணி இருப்பு பூஜ்யத்தை தொட்டு விட்டது.

இதற்கிடையே, கச்சாப் பொருட்கள் ஏற்றுமதியும் பிற நாடுகளைப் போல, தான்சானியாவும், தனது ஏற்றுமதி வருவாய் தலைகுப்புற விழுவதைக் காண நேர்ந்தது. ஏற்றுமதிப் பொருட்களின் அளவும் குறையத் துவங்கியது. *1984* ஆம் வருடத்திய ஏற்றுமதி வருவாய், *1980-81* இல் இருந்ததைக் காட்டிலும் *30* சதவிகிதம் குறைவு. *1985* இல் இது *40* சதவிகிதமாக அதிகரித்தது. *1980* அக்டோபரில், அதிபர் ஜீலியஸ் நையரேரே ஐரோப்பிய பார்வையாளர்களிடம் இவ்வாறு கூறினார்: ''இவ்வருடம் தான்சானியாவில் மழை நன்றாகவே உள்ளது. பருத்தி விவசாயிகள், கடந்த வருடத்தைவிட இருமடங்கு விளைவித்துள்ளனர். எங்களிடம் அன்னியச் செலாவணி இருப்பு இல்லை. அதனால் அத்தியாவசியப் பொருட்களை கூட இறக்குமதி செய்ய வழியில்லை. முக்கிய ஏற்றுமதிப் பொருளான பருத்தியை நம்பி உள்ளோம். அதனால் இந்த நல்ல விளைச்சல் திருப்தி அளிப்பதாக இருந்தது. ஆனால் இவ்வருடம் ஜூலையில், சர்வதேச சந்தையில், ஒரே நாளில் பருத்தியின் விலை பாதியாக சரிந்தது. இது கிட்டத்தட்ட ஒரு புயல் அல்லது எரிமலை வெடிப்பிற்கு சமானம். எங்களது வருமானம் பாதியாக குறைந்து விட்டது. என் மக்களும், எனது நாடும் முயற்சி எடுத்து உழைத்தும், ஒரு பைசாகூட அதிகமாக சம்பாதிக்க முடியவில்லை. இது பயங்கரமான கொள்ளை!''

இருக்கிற பிரச்சனை போதாதென்று அண்டை நாடான இடி அமீனின் உகாண்டாவுடன் ஒரு போர்

(1978-79). ஒரு பயங்கர கொடுங்கோலனை ஒழித்துக் கட்டியதற்காக, சர்வதேச சமுதாயம், தான்சானியா விற்கு ஆரத்தி ஒன்றும் எடுக்கவில்லை. 1980 இல் சர்வதேச நிதி நிறுவனத்தை, தான்சானியா எண்ணை இறக்குமதிக் கடன் கொடுக்கக் கோரி அணுகியபோது, நிதிநிறுவனம் வழக்கமான கட்டுப்பாடுகளை முன் வைத்தது—தாராளமய மாக்கல், அரசுத்துறைக்கு கட்டுப் பாடு போன்றவை. அரசு முடியாது எனக் கூறி ஒரு நீண்ட தர்மயுத்தத்தை துவக்கியது.

கடைசியில், 1986 இல் நையரேரே குறிப்பிட்ட பருத்தி விவகாரம் நிதிநிறுவனத்தின் காலில் விழ வைத்தது. நிதிநிறுவனம் 2.5 மில்லியன் டாலர் கடன்தர இசைந்தது. அதிபர் மிவின்சி ''சர்வதேச நிதிநிறுவனம் என்னும் ஷைலக் வழக்கமாக கேட்கும் சதை, ஒரு சொட்டு ரத்தம் கூட சிந்தாமல் வெட்டி எடுக்கப்படும்'' என்று கூறினார். ஆனால் ரத்த ஆறு ஏற்கனவே ஓடிக் கொண்டு இருக்கிறது என்பது பல தான்சானியர்களின் வாதம். மேலும், ஒப்பந்தத்தின் ஷரத்துகள் பொது மக்களின் முன் வைக்கப்படவில்லை என்றும் அவர்கள் கூறினர். ஜூன் 1986 இல் அரசு சமர்பித்த வரவு செலவு திட்டத்தில் நிதி அமைச்சர் ஒப்பந்தத்தின் விவரங்களை வெளியிடவில்லை. ஒரு பாராளுமன்ற உறுப்பினர், தங்களுக்குகூட அரசு தெரிவிக்கவில்லை என்று புலம்பி னார்.

தான்சானியாவின் பொருளாதாரத்தின் பல அம்சங்கள் தவறாக இருந்தன. சர்வதேச நிதி நிறுவனம் எடுக்கக் கோரிய பல நடவடிக்கைகள், சில நன்மைகளை விளைவிக்கும் என்பது உண்மைதான். ஆனால் நாட்டு நிலைமை, மேற்கத்திய பத்திரிகைகள் வர்ணிப்பது போல அவ்வளவு கவலைக்கிடமான நிலையில் இல்லை. தான்சானியாவில் ஒரே ஒரு கட்சி அரசாண்டாலும், பல

ஆப்பிரிக்க நாடுகளைக் காட்டிலும், அங்கு திட்டமிடு தலில் ஜனநாயகப் பங்கேற்பு அதிகமாகவே இருந்தது. கல்வி மற்றும் உடல்நல கவனிப்பில், அந்நாடு எட்டியிருந்த நிலை அசாதாரணமானது. கிட்டத்தட்ட அனைத்து குழந்தைகளும் குறைந்தபட்சம் ஆரம்பப் பள்ளிகளுக்கு சென்றனர்; இறப்பு வயது 60ஐ எட்டியது. பலர் நம்பிக்கொண்டிருந்ததற்கு மாறாக, அந்நாட்டின் பொருளாதாரம், நல்ல வளர்ச்சியடைந்து கொண்டுதான் இருந்தது. பிரச்சனை என்னவென்றால், அதிகார வர்க்கம், அனைத்து நன்மைகளையும் சுருட்டிக் கொண்டது. மொத்தத்தில் ஓரளவு வேலைவாய்ப்பு கிடைத்த போதிலும், வருங்கால முதலீட்டிற்கு நிதி கிடைக்கவில்லை தேசிய மொத்த பொருள் உற்பத்தியில் 1970இல் 16 சதவிகிதமாக இருந்த பொதுத் துறையின் பங்களிப்பு, 1982இல் 32 சதவிகிதமாக உயர்ந்திருந்தது.

எதிர்பாராத வேளாண்மை கொழிப்பு, சில யதார்த்தத்திற்கு புறம்பான கொள்கைகளுக்கு அடிகோலியது. அதில் மிகவும் மோசமானது, அனைத்து வேளாண்மை கொள்முதல் மற்றும் விநியோகத்தை தேசிய அரவை நிறுவனத்திடம் ஒப்படைத்தது. இதை பல தான்சானிய மக்கள் இன்று ஒப்புக் கொள்கின்றனர், முன்பு குற்றம் சாட்டப்பட முடியாத நிலையில் இருந்த பொதுத்துறை, இன்று நாட்டின் உள்ளிருந்தும், புறத்திலிருந்தும் கடுமையாக விமர்சிக்கப்படுகிறது. நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. உதாரணமாக. நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருந்த ஒருவித சணல் தொழிற்சாலைகள் 22, தனியார்—அந்நிய முதலீட்டாளர்கள் மற்றும் தொழிற்சங்க கூட்டுறவுகளுக்கு விற்கப்பட்டன. உணவு, கால்நடை, மரம், மிதிவண்டி ஆகியவற்றிற்கான, அரசு நிறுவனங்கள் இழுத்து மூடப்பட்டன. வேறு சில நிறுவனங்களின் இறக்கைகள் வெட்டப்பட்டன.

நிதிநிறுவனம், அரசு அதிகார வர்க்கத்தின் கால்களை முறிக்கும் வேலையையும் செய்தது. அது அரசிற்கு, வீணாகிக் கொண்டிருந்த பணத்தை சேமித்துக் கொடுத் தாலும், வேலையில்லாத் திண்டாட்டம் பயங்கரமாகியது. 1986 இறுதியில் 50,000 அரசு ஊழியர்கள் வீட்டிற்கு அனுப்பப்பட்டனர். இதில் வேடிக்கை என்னவென்றால், அரசின் கருவூலத்தை காலியாக்கிக் கொண்டிருந்த உயர் அதிகாரிகள் தங்கள் வேலையை தக்கவைத்துக் கொண்டு, இளைய, குறைந்த ஊதியம் வாங்கிக் கொண்டிருந்த வர்களை வீட்டுக்கு அனுப்பிவிட்டனர். ஒரு பெரிய துடைப்பம் கொண்டு அரசு அலுவலகங்களில் இருந்து தூக்கியெறியப் பட்டவர்களின் உண்மையான எண்ணிக்கை எவ்வளவு இருக்கும் என்று தெரிந்தால் நல்லது.

வழக்கம் போல, தான்சானிய நாணய மதிப்பைக் குறைக்க, நிதிநிறுவனம் பரிந்துரை செய்தது. தான்சானியா ஷில்லிங், யதார்த்தத்திற்கு புறம்பான விகிதத்தில் நிர்ணயிக்கபட்டிருந்தது என்பது உண்மைதான். நான் 1983இல், தார்எஸ்—சலாமில் சாப்பிட போனபோது, நியுயார்க் அளவு அதன் விலை இருந்தது. ஆனால் நாணய மதிப்பு பல நடவடிக்கை களில் இறங்கியது. அதனுடைய பல திட்டங்களுக்கு வெளிநாட்டு நன்கொடையாளர்கள் பணம் கொடுத்து வந்தனர். அவர்கள் தான்சானியா நாணயத்தில்தான் அதைக் கொடுத்தனர்; அமெரிக்க டாலரில் அல்ல. நாணய மதிப்புக் குறைப்பால் அது எவ்வாறு பாதிக்கப் பட்டது தெரியுமா?

அவ்வமைப்பு ஒரு பால் பண்ணை—கால்நடை திட்டத்தை ஏழைகளுக்கு உதவுவதற்காக துவக்கியது. அதன்படி, ஏழைகளுக்கு ஒரு பசு வழங்கபபடும்; ஈனப்படும் கன்று, திட்டம் வசம் ஒப்படைக்கப்

படவேண்டும்; ஏனெனில் திட்டம் அதை வேறு ஒருவருக்கு கொடுத்து உதவும். தேவையான மருந்து போன்றவை கொடுக்கப்படும் போது, மாட்டில் இருந்து வருமானம் வரத் துவங்கியதும், இவை திருப்பி அளிக்கப்பட்டு விடவேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டு இருந்தது. நாணய மதிப்புக் குறைப்பால் மருந்தின் விலை கடுமையாக அதிகரித்தது. கண்டிப்பாக, விவசாயிகளால் அதை திருப்பிக் கொடுக்க முடியாது. நாங்கள் வேறுவழியை கண்டுபிடித்தாக வேண்டும். இல்லையெனில், மொத்த திட்டமும் அம்பேல் ஆகிவிடும், என்று அவ்வமைப்பு கூறியது.

மாட்டு விலையும் கடுமையாக அதிகரித்ததால், திட்டத்தினால் பெரும் தாக்கத்தை ஏற்படுத்த முடியவில்லை.

தான்சானியாவின் சராசரி தனிநபர் வருமானம் வருடத்திற்கு 11200 ஷில்லிங்குகள் (நாணய மதிப்பிற்கு பின்னர்) இது சுமார் 280 டாலர்கள். முன்பு குறிப்பிட்ட அதே தேவாலயம் மக்கள் மிக அடிப்படையான 18 பொருட்களுக்கு எப்படி செலவு செய்கிறார்கள் என்று ஒரு ஆய்வை மேற்கொண்டது. அது பெரிய அளவில் செய்யப்படவில்லை என்றாலும், அதன் முடிவுகள் சுவாரசியமாகவே இருந்தன.

4 அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட குடும்பம், தங்களது வருவாயில் 50 சதவிகிதத்துக்கும் மேலானதை அரிசி, சோளம், பீன்ஸ், சமையல் எண்ணை, பால் மற்றும் சர்க்கரை ஆகிய பொருட்கள் வாங்க செலவழிக்கின்றன. ஒரு நபர் மட்டுமே இருக்கும் குடும்பம்கூட இந்த ஆறு பொருட்களுக்கு மிக அதிகமாக செலவழிக்கிறது.

இது நகர்புறங்களில் செய்யப்பட்ட ஆய்வு. அந்த மக்கள், தேசிய சராசரி வருவாயைவிட அதிகம்

சம்பாதிப்பதால் அவர்களால் அப்படி செலவிட முடியும். ஆனால் பெரும்பாலான மக்கள் விவசாயிகளாக இருக்கும் தான்சானியாவில், அவர்கள்பாடு மிகவும் ஆபத்தாக இருக்கிறது. ஒரே ஆறுதல், தங்களுக்கு வேண்டிய உணவை அவர்கள் பயிரிட்டுக் கொள்ளமுடியும். நகர்புறத்து மக்களைப் பொறுத்தவரை, மீதிச் செலவு களுக்கு, அதாவது, வாடகை கொடுக்க, அழுக்கு போக குளிக்க, பேருந்தில் அலுவலகம் செல்ல, காய்கறி பழங்கள் வாங்க வேண்டுமானால், அவர்கள் தேசிய சராசரி வருமானத்தை போல குறைந்த பட்சம் 4 மடங்கு சம்பாதித்தாக வேண்டும்.

ஆனால் நடைமுறையில் அது இயலாத காரியம். அதனால் அவர்கள் பல்வேறு விதமான வழிமுறைகளை கடைபிடிக்கின்றனர். பல்கலைக்கழக பேராசிரியர்களும், அரசு ஊழியர்களும், மதிய உணவு இடைவேளையின் போது, வேகமாக வீட்டுக்கு ஓடி, மாட்டில் இருந்து பால் கறப்பதும், கோழிகளுக்கு தீவனம் வைப்பதும், காய்கறி தோட்டத்தில் களை பிடுங்குவதுமான வேலை களில் மூழ்கி விடுகின்றனர். பெரும்பாலோருக்கு ஒரு சிறு துண்டு தோட்டமாவது இருக்கிறது. வெளிநாட்டில் வேலை செய்யும் பாக்கியவான்கள், திரும்பிவரும் போது ஏதாவது ஒரு காரை உடன் தள்ளிக் கொண்டு வந்து விடுகின்றனர். அது பல வேலைகளுக்கு உதவும் டாக்சியாக கை கொடுத்து உதவுகிறது. இது போன்ற நடைமுறைகள் கிழக்கு ஆப்பிரிக்காவில் அபரிமிதம்.

தான்சானியாவில் பொருட்களுக்கு பஞ்சம் இல்லை. கடைகளில் சாமான்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும்— வாங்க மக்களால் இயலாத காரணத்தால்! 1986இல் ஒரு இரண்டு கிலோ டின் சமையல் எண்ணை 500 ஷில்லிங் விலை விற்றது.

உணவு இறக்குமதி மற்றும் உணவு மானிய உதவி ஆகியவற்றின் தாக்கம் பற்றி கணிக்க, ஆக்ஸ்பார்ம் அமைப்பின் இங்கிலாந்து கிளை பாலா பார்க்கையும், டோனி ஜாக்சனையும் தான்சானியாவிற்கு 1985 இல் அனுப்பியது. தேசிய அரவை நிறுவனத்தின் கொள்கை களால், அதை ஒதுக்கித் தள்ளிவிட்டு, அங்குள்ள விவசாயிகள், கறுப்புச் சந்தையில் உணவை விற்பதை அவர்கள் கண்டுபிடித்தனர். அறுவடை உச்சகட்டத்தில் இருக்கும் போது உணவு லாரிகள், பகலிலும், இரவிலும் கென்யாவிற்குள் போய்க்கொண்டே இருப்பது சகஜம். ஏனெனில், அரசு விலையைப் போல மூன்று, மூன்றரை மடங்கு விலையை கருப்புச் சந்தை அவர்களுக்கு அளித்தது. அரசு சார்ந்த நிறுவனங்களின் திறமையின்மை ஒருபுறம் இருக்க, அரசின் விலை நிர்ணயிப்பு கொள்கைகள், யதார்த்தத்தோடு, துளிகூட ஒத்துப்போகாத நிலை யிலேயே இருந்தது மிகவும் துரதிர்ஷ்டவசமானது.

புருண்ட்டி எல்லையில் இருக்கும் மற்றொரு பிராந்தியத்தில், விவசாயிகள், பார்க்கிடமும் ஜாக்சனிட மும் வேறு கதைகள் பல கூறினர். ஒருவர் இப்படி கூறினார் :

'ஒருநாள் அதிகாலை வாசல் கதவு தட்டப்பட்டது. திறந்து பார்த்தால், கென்யாவில் இருந்து ஒரு லாரி ஓட்டுனர். அவர் கையில் ஒரு உப்பு மூட்டை. எனக்கு உப்பு தேவை. அதை வாங்கிக் கொண்டு, ஒரு மட்டை சோளத்தை கொடுத்து அனுப்பினேன். வந்து படுத்தால் மறுபடி வாசல் கதவு தட்டப்பட்டது. போய் பார்த்தால், இம்முறை புருண்ட்டி ஓட்டுனர். அவர் கையில் பிரிட்டனில் தைக்கப்பட்ட ஒரு சட்டை. என்னால் கண்டிப்பாக அதை வாங்க முடியாது. நான் என் சோளத்தை கொடுத்து விட்டு அதை வாங்கிக் கொண் டேன்.'

அரசிற்கு விற்று லாபம் அடைய முடியாது என்பதை உணரும் விவசாயிகள், வேறு எவருக்காவது விற்க வேண்டும் என்ற யதார்த்த முறையை கடைபிடிக்கின்றனர். அரசு கொள்முதல் விலையை உயர்த்தினாலும் அது போதுமானதாக இல்லை. அதனால், சமீப வருடங்களில் தேசிய அரவை நிறுவனம், மொத்த அறுவடையில் 25 சதவிகிதத்தை மட்டுமே பெறமுடிந்ததில் ஆச்சரியம் இல்லை. இங்கு பிரச்சனை என்னவென்றால், அரசு நகர்புற வாசிகளுக்கு மலிவான விலையில் உணவு அளிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. ஆகவே அது உணவை இறக்குமதி செய்ய நிர்பந்திக்கப் படுகிறது.

ஆனால், வேளாண்மை உட்பட அனைத்தையும் சுதந்திரச் சந்தைக்கு மாற்ற நிர்ப்பந்திக்கும் நிதி நிறுவனத்தின் போக்கு, தான்சானியாவின் சிக்கலான பிரச்சனையை மிகவும் எளிமையாக புரிந்துகொள்ள முயலும் முட்டாள்தனமான முயற்சிதான். அரசு, விவசாயிகளால் ஏற்றுக் கொள்ளக்கூடிய விலைக்கு கொள்முதல் செய்வதாக வைத்துக் கொண்டாலும்கூட, நாணய மதிப்புக் குறைப்பு காரணமாக உரம் போன்றவற்றின் விலை கடுமையாக அதிகரித்துவிடும். தான்சானியா ஒரு பெரிய நாடு—இங்கிலாந்து அல்லது மேற்கு ஜெர்மனி போல நான்கு மடங்கு பெரியது. அதே சமயம் வருடத்திற்கு 30 மில்லியன் டாலர் வட்டி மட்டும் கட்டும் ஏழை நாடுகூட. அதனால் அந்நாட்டால் உணவு போன்ற உற்பத்தி பொருட்களை விளைவிடத்திலிருந்து கொண்டுவரத் தேவையான சாலையமைப்பு, வாகனங்கள் போன்றவற்றிற்கு அதனால் செலவிட முடியாது.

லுத்தரன் தேவாலய அமைப்பு, இவ்வாறு கூறுகிறது:

'பல சாலைகளை, சாலைகள் என்றே கூறமுடியாது. மழைக் காலமானால், கேட்கவே வேண்டாம்.

எரிபொருள் மற்றும் டயர்கள் பற்றாக்குறை, பிரச்சனையை இன்னும் மோசமாக்கும். இவை வேளாண் பொருட்கள் நகர்புறங்களை அடைவதை தாமதப்படுத்து கின்றன. உதாரணமாக, 1986 இல் தெற்கு தான்சானியாவில் காப்பி செழிப்பாக வளர்ந்திருந்தது. அரசு தனியார் போக்குவரத்தாளர்களுக்கு, டயர் மற்றும் எரிபொருள் ஆகியவற்றை தர முன்வந்தும், மோசமான சாலைகள் காரணமாக லாரி முதலாளிகள் அதற்கு மறுத்து விட்டனர்.'

வறுமைப் பாய்ச்சலுக்கு தான்சானியா சரியான உதாரணம். உங்களிடம் குறைவாக இருந்தால், உங்களால் குறைவாகத்தான் முதலீடு செய்ய இயலும்; அதனால் உங்களுக்கு குறைவாகத்தான் கிடைக்கும். எரிபொருளும், உதிரி பாகங்களும், இறக்குமதி செய்யப்பட வேண்டும். அது விலை அதிகம்; அதனால், போக்குவரத்து துறை 30 சதவிகிதம் திறமையிலேயே இயங்குகிறது. அரசு கணிப்புபடியே, 1985 இல் மட்டும் தான்சானிய தொழில் உற்பத்தி 6.4 சதவிகிதம் குறைந்து உள்ளது. கடைசியில் விளைவு அடிப்படை உணவு மற்றும் இன்றியமையாப் பொருட்களுக்கு பற்றாக்குறை; கறுப்புச் சந்தையின் அமோக வளர்ச்சி. எதை ஒழித்துக்கட்டப் போவதாக, நிதி நிறுவனம் முழங்கியதோ, அவை அங்கு தலைவிரித்து ஆடத் துவங்கின.

விவசாயிகள் தங்கள் சம்பாத்தியத்தில் இருந்து எதையும் வாங்க முடியாத நிலையில் இருக்கும் போது, அவர்களுக்கு எதைதான் தர முன்வந்தாலும் அதனால் எந்த பயனுமில்லை என்று பொறுப்புள்ள, பொருளாதார வாதிகள், பல வருடங்களாக கூறிவந்துள்ளதை நிதி நிறுவனம் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். அரசு கொள்முதல் விலையை ஆயிரக்கணக்கில் உயர்த்தி னாலும், விவசாயி, பிரிட்டன் சட்டையை, புருண்ட்டி

வழியாக வாங்கிக் கொண்டுதான் இருப்பான்—அது தான்சானியாவில் கிடைக்காதவரை! கிராமப்புறங்களில் பொருட் பற்றாக்குறை இருந்தால், ஏற்றுமதிக்கோ, தேசிய உபயோகத்திற்கோ உணவுப் பொருட்கள் சரியாக கிடைக்காது. பொருளை விற்க முடியாததால், எரிபொருள் கிடைக்காது; உரம் கிடைக்காது; உதிரிப் பொருட்கள் வராது; சாலைகள் நல்ல நிலைமையில் இருக்காது. இது ஒரு விஷச் சக்கரம். இது உங்களுக்கு இப்பொழுது தெளிவாகி இருக்குமே. நாட்டின் மொத்த உற்பத்தியில் 60 சதவிகிதம் கடன், தவணை, வட்டி ஆகியவற்றிற்கே போய்விடுகிறது என்கிறார் தான்சானிய நிதியமைச்சர்.

அரசு வரவு—செலவுத் திட்டம் வெட்டப்பட்டதால், ஒரு காலத்தில் பிரமாதமாக இருந்த கல்வி அமைப்பு பெரும் பாதிப்பிற்கு ஆளானது. தங்களது குழந்தைகளின் பள்ளிகளுக்கு நிதியுதவி அளிக்க பெற்றோர்கள் முதல் முதலாக அணுகப்பட்டனர். அனைத்துக்குழந்தைகளுக்கும் கல்வியளிப்பதில் பெரும் பெருமை கொண்டிருந்த ஒரு நாட்டில், இது வர்க்கப் பிரிவினையை தோற்றுவிக்கும்.

சட்ட ஒழுங்கு பராமரிப்பு மிகவும் சீர்கேடு அடைந்த நிலையில் இருந்தது. தான்சானியாவின் பல பிராந்தியங்களில், மக்கள் பாரம்பரிய சமூகப் பாதுகாப்பு அமைப்பு முறையை மீண்டும் அமல் செய்யத் துவங்கி விட்டனர்.

சர்வதேச நிதிநிறுவனத்திற்கு இச்செய்திகள் மிகவும் இனிப்பாக இருக்கும். குறைந்த பட்சம் போலிஸ் துறையின் ஒரு பகுதியாவது தனியார்வசம் போய் விட்டதல்லவா?

ஆப்பிரிக்க அரசாங்கங்கள், மேற்கத்திய மாதிரியின் முக்கிய அம்சங்களை அப்படியே ஏற்றுக் கொண்டன. அவற்றிற்கு பெருமைமிக்க திட்டங்களும், ராணுவச்

செலவினங்களும் மிகவும் பிடித்தவையாக விளங்கின. பணப்பயிர் வளர்ப்பதா, உணவுப்பயிர் வளர்ப்பதா, என்ற தீவிர விவாதத்திற்குள் எல்லாம் போகவில்லை. சுருக்கமாகக் கூறினால், காலனியாதிக்க அமைப்பு முறையை அப்படியே பின்பற்றுவதில் திருப்தி அடைந்து விட்டனர். எந்த ஆப்ரிக்கன், ஏற்றுமதி—சார்பு அமைப்பில் இருந்து பலன் பெற வேண்டும் என்பதுதான் உண்மையான விவாதமாக இருந்தது. வழக்கம் போல, விவசாயி முதல் சுற்றிலேயே நாக்—அவுட்! அதே போல நகர்புற பெரும்பான்மை மக்களும்!

தற்பொழுது வாங்கிய கடன், இக்குழுக்களை மேலும் ஓரம்கட்டி விட்டது. நைஜீரிய பொருளாதார வல்லுன ரான கிளைட் அகே அதை இவ்வாறு விவரிக்கிறார்:

'மேற்கத்திய வங்கிகளாலும், நிதி அமைப்புகளாலும் மேற்கொள்ளப்படுகிற கடன் சீரமைப்பு திட்டங்கள் நிலைமையை மேலும் மோசமாக்குகின்றன. குறிப்பாக, தற்போது உள்ளது போல வட்டிவிகிதம் அதிகமாகவும், பொருட்கள் விலை குறைவாகவும் இருக்கும் போது, சர்வதேச நிதிநிறுவனம் முன் வைக்கும் சீரமைப்பு திட்டங்கள் ஏழைகளுக்கு வழங்கப்படும் மானிய உதவியை நிறுத்துவதை முதல் குறியாக கொண்டிருக்கும். ஏற்கனவே ஆப்ரிக்க நாடுகள் அடக்குமுறை ராஜ்ஜியங் களாகவே விளங்குகின்றன. அப்போது, இத்தகைய அந்நிய அழுத்தங்களும் சேரும் போது, அவை, நிதிப் பொறுப்பு என்ற பெயரில் முழுச் சர்வாதிகார ஆட்சியமைப்பதை நியாயப்படுத்தும்.'

இது ஏற்கனவே துவங்கிவிட்டது. ஜாம்பியாவில் 1986 டிசம்பரில், அடிப்படை உணவு விலை 100 சதவிகிதம் உயர்த்தப்பட்டது என்ற அறிவிப்பு வந்தவுடன் உணவுக்கலவரங்கள் வெடித்துக் கிளம்பின. அரசு தரப்பு கணிப்புபடி 30 பேர் இறந்தனர்.

பத்திரிகையும் அதற்கு ஆமாம் சாமி! என்று தலையாட்டியது. உண்மை எண்ணிக்கையை யார் அறிவார்? கென்யாவில், சித்திரவதை உட்பட நடைபெறும் மனித உரிமை மீறல்கள் தினசரி செய்தியாகி விட்டன. தான்சானியாவில்கூட, அதிக ஊதியம் கேட்டு போராடிய கரும்புத் தொழிலாளர்களின் மீது போலிஸ் நடத்திய தாக்குதலைக் கண்டித்து போராட முனைப்புகள் ஏற்பட்டன. அரசியல் அடக்குமுறை, வளர்ச்சிக்கு ஒரு மாபெரும் தடைக்கல் என்று கிளைட் அகே கூறுகிறார். அவர் கூற்று முற்றிலும் சரியானதே. ஆனால் அந்த அரசியல் அடக்குமுறைக்குப் பின்னால், நிதிச்சுமை உள்ளது. சர்வதேச நிதி அமைப்புகள், தங்களுக்கு சேர வேண்டிய சதையை வெட்டிக் கொடுத்துவிட நிர்ப்பந்திக்கும் போது, அதிகார துஷ்பிரயோகம் வெகுவாக நியாயப்படுத்தபட்டு விடுகிறது.

# 3

# சயர்: கோழிமுட்டை?

பெரும்பாலான ஆப்பிரிக்க அதிபர்கள் தேர்தல்கள் மூலம் பதவியில் இருந்து இறக்கப்படுவதில்லை; ராணுவப்புரட்சி மூலமே. துரதிர்ஷ்டவசமாக அப்படி தூக்கி எறியப்படாமல் காலம் காலமாக பதவியில் இருப்பவர்களில் ஒருவர் சயர் நாட்டின் அதிபர் ஜெனரல் மொபுட்சு செசே கோகோ. கடந்த 20 ஆண்டு காலமாக, மக்கள் அவரது ஆட்சியில் படாத பாடுபட்டு வருகிறார்கள். இவ்வளவுக்கும் சயர் செழிப்பான இயற்கை வளங்களை கொண்ட நாடு. அதன் வேளாண்மை நிலங்கள் மிகவும் வளமானவை. அங்கு வறட்சி என்பதே கிடையாது. செம்பு, கோபால்ட், வைரம் போன்ற அரிய உலோகங்கள் ஏராளமாக அங்கு புதைந்துள்ளன. அங்கு இன்னும் ஏராளமான காடுகள் உள்ளன. நதிகளும் நிறைய உண்டு. அவை உள்நாட்டு போக்குவரத்திற்கு உதவுவதோடு, நீர் மின்சக்தி எடுக்க பெருமளவு வாய்ப்பும் உள்ளது.

ஆனால் சாதாரண சயர் குடிமகனின் வாழ்க்கையோ தாங்க முடியாத பிரச்சனையாக இருக்கிறது. சுதந்திரம் அடைந்தபோது இருந்ததில் 10இல் ஒரு பங்குகூட இல்லை, இன்றைய சயர் தொழிலாளியின் உண்மை ஊதியம். மக்கள்தொகையில் 80 சதவிகிதம் அடிமட்ட வறுமையில் வாடுகின்றனர். ஃபுட் மானிட்டர் என்ற பத்திரிகையில் கிம் சாப்பின் இப்படி குறிப்பிடுகிறார் :

''சயரில் நிலைமை மோசம்தான்; ஆனால் எல்லோருக்கும் அல்ல. சயரின் மொத்தக் கடன் 5 பில்லியன் டாலர்கள். அதிபர் ஜெனரல் நாட்டில் இருந்து கொள்ளையடித் திருக்கும் சொத்தின் மதிப்பும் அதே அளவு இருக்கும் என்று மதிப்பிடப்பட்டது தற்செயலான விஷயமே. அவருக்கு பிரான்சிலும், பெல்ஜியத்திலும் 7 கோட்டைகள் உள்ளன; ஸ்பெயின், இத்தாலி மற்றும் சுவிட்சர்லாந்தில் பல மாட மாளிகைகளும் உண்டு. அவருக்கு ஐவரி கோஸ்டிலும், நாட்டின் எட்டு பிராந்தியத்திலும் ஒரு அதிபர் மாளிகை உண்டு. அவரது சுவிஸ் வங்கிக் கணக்கில் உள்ள தொகை பற்றிய கணக்கு எவருக்கும் தெரியாது. அவரிடம் தனிப்பட்ட முறையில், பல கப்பல்கள், போயிங் 747 உட்பட பல ஜெட் விமானங்கள்' குறைந்த பட்சம் 51 மெர்சிடிஸ் கார்கள் உள்ளன... இப்பட்டியல் இன்னும் நீண்டு கொண்டே போகும். அவருடைய தோட்டமான 'செல்சா', சயரிலேயே மூன்றாவது பெரிய தோட்டம். அது நாட்டின் மொத்த வேளாண் ஏற்றுமதியில் 6 இல் ஒரு பங்கை ஏற்றுமதி செய்கிறது. அதோடு, நாட்டில் உள்ள அனைத்து அந்நிய நிறுவனங்கள், வங்கிகள் ஆகியவற்றில் அவருக்கு மூலதனப் பங்கு உண்டு. நாட்டின் கனிவளங்கள் வெளி நாட்டிற்கு அனுப்பப்படும்போது, அதில் அவருக்கு 5 சதவிகிதம் கமிஷன் உண்டு. நாட்டின் மொத்த வரவு செலவு திட்டத்தில் 30 சதவிகிதம், அதிபர் மாளிகை வழியாக செலவிடப்படுகிறது. அதைப் பின்னர் எவரும் கேள்வி கேட்க முடியாது. இதைப்பற்றி விலாவாரியாக ஆராய்ச்சி செய்துள்ளனர் பெல்ஜிய ஆய்வாளர்கள்.

தலைவரின் பெருமை இப்படி தலைவிரித்து ஆடும் போது, பள்ளிக்குழந்தைகள் கூட பேராசை பிடித்து அலைவதில் வியப்பில்லை. இரு பள்ளி ஆசிரியர்கள் இப்படி குறிப்பிடுகிறார்கள்:

'வருங்காலத்தில் நீங்கள் எப்படி இருக்கப்போகிறீர்கள் என்று பள்ளிச் சிறுவர்களை கேட்டால், அவர்கள் எப்பொழுதும், பெரிய வியாபாரிகள், அரசியல்வாதிகள், விளையாட்டு வீரர்கள் அல்லது இசை வித்தகர்களாகவே விரும்புவதாக தெரிவிக்கின்றனர். காரணம் என்ன என்று வினவியபோது, அப்படி இருந்தால், அடுத்தவர்களுக்கு உத்தரவிடலாம், நிறைய பணம் சம்பாதிக்கலாம், வேலையே செய்ய வேண்டாம் என்ற பதில் வந்தது. இதில் வெளிப்படையாக தெரிந்தது ஆடம்பரத்திற்கான பேரவா. அதோடு அறிவுபூர்வமான வேலை அல்லது உடல் உழைப்பின் நிராகரிப்பு... ''ஏன் அடுத்தவர்களை ஏமாற்றுகிறீர்கள்'' என்று கேட்டால், பெரும்பாலோர் நேரடியாக, ''ஏனெனில் நாங்கள் சயரியர்கள்'' என்ற பதிலே வருகிறது.'

அதிகாரபூர்வமான சுருட்டலும் சுரண்டலும் கேட்க ஆளற்று சிறப்பாக நடந்து கொண்டிருந்தபோது, மக்கள் குருதி வடித்துக் கொண்டிருந்தனர். ஆனால், எப்படியோ புதிய பணம், சயர் நாட்டிற்குள் வந்து குவிந்து கொண்டிருந்தது! மொபுட்டு அரசிற்கு உலக வங்கி, சுமார் 1 பில்லியன் டாலரை கடன் அளித்தது. இதில் 375 மில்லியன் டாலர்கள் 1984க்கும் 1986க்கும் இடையே மட்டும் வழங்கப்பட்டவை. சர்வதேச நிதிநிறுவனம் வழக்கம் போல தனது கைங்கரியத்தைத் துவக்கியது. இந்த மகிழ்ச்சியற்ற பூமியில் மக்களின் நிலை என்னவாக இருந்தது என்று பார்ப்போமா?

1983 செப்டம்பரில் நிதிநிறுவனம் நாணய மதிப்புக் குறைப்பை திணித்தது. அதற்கு ஒரு வருடம் கழித்து, ஒரு சராசரிக் குடும்பத்திற்கு வெறும் சாப்பாட்டிற்கு (இறைச்சி, மீன் இல்லாமல்) ஒரு நாளைக்கு 80 சயர்கள் தேவைப்பட்டது. ஆனால் ஒரு சாதாரணத் தொழிலாளி அல்லது ஒரு ஆசிரியரின் தினசரி சம்பளம் வெறும் 20

சயர்களே! 1986 இல் ஊதிய உயர்வு ஏற்பட்டாலும், விலைவாசி அதற்கு ஏற்ப உயர்ந்து விட்டது.

1983 இல் இருந்து ஊட்டச்சத்துக் குறைவு அதிகரித்தது. பானை வயிறுக் குழந்தைகளின் எண்ணிக்கை கடுமையாக அதிகரித்தது. ஒரு சில பிராந்தியங்களில், 5 வயதை அடையுமுன்பே பாதிக் குழந்தைகள் இறந்து விடும் நிலைமை இருந்தது. தலைநகரிலும், மற்றொரு முக்கிய நகரிலும், மக்களின் சராசரி கலோரி உணவு அளவு 1450, 1425 என்று இருந்தது. உணவு வேளாண்மை அமைப்பின் கணிப்புப் படி, ஒரு சராசரி வாழ்க்கை நடத்த சுமார் 2300 கலோரிகள் தேவைப்படும். கொஞ்சம் கொஞ்சமாக பட்டினி பரவிக் கொண்டிருந்ததைத்தான் இது சுட்டிக் காட்டுகிறது.

பாதுகாப்பு இன்மை தலைவிரித்தாட்டியது. ஷபா பிராந்தியத்தில் வேலை பார்த்து வந்த ஒரு கன்னிகாஸ்திரி 1984 இல் இவ்வாறு எழுதுகிறார்:

'எங்கள் பகுதியில் வசித்து வந்தவர்கள், மாலை 6 மணிக்கு மேல் வெளியே வர அஞ்சினர். ஏனெனில், அப்பொழுது நகர் எங்கும் ராணுவத்தினர் ரோந்து சுற்றிக் கொண்டிருந்தனர். அவர்கள் போவோர் வருவோரை கொள்ளையடிப்பதும், மக்களை பணயக் கைதிகளாக பிடித்து வைத்துக்கொண்டு, பணம் கேட்பதும் ஆக இருந்தனர். அவர்களுக்கு வேறு வழி இருக்கவில்லை; ஏனெனில் அவர்களுக்கு சம்பளம் (மாதம் 200 சயர்கள்) போதுமான அளவு கொடுக்கப்பட வில்லை. ஆனால் அவர்களின் அட்டூழியம் அளவுகடந்து இருந்தது. ஒரு சமயம், ஒரு ஏழை விதவையிடம் இருந்த ஒரே ஒரு ஆட்டையும் அவர்கள் திருடிக் கொண்டனர். 1983 இல் இருந்து நாணய மதிப்பு குறைப்பு 450 சதவிகிதமாக உயர்ந்தபோது, சம்பளம் அதிகாரபூர்வ

மாக 100 சதவிகிதமாக மட்டுமே உயர்த்தப்பட்டது. ஆனால் எங்கள் மருத்துவமனையில், 29 பேருக்கு 20 சதவிதம் உயர்வு கொடுக்கப்பட்டது. மீதி 120 பேருக்கு வெறும் ஆறுதல்தான் கிடைத்தது. ஆசிரியர்கள்தான் மிகவும் கோபமடைந்து விட்டனர். அவர்கள் மாதம் 300-350 சயர்கள் சம்பாதித்தனர். ஆனால் ஒரு மூட்டை ரொட்டி மாவு 740 சயர் விற்றது. அதில் ஒரு குடும்பம், ஒருவேளை சாப்பிட்டால், இரண்டு வாரம் காலம் தள்ள லாம். அவ்வளவுதான்!'

1986 இல் ஒரு பெல்ஜிய ஆர்வலர் இவ்வாறு குறிப்பிடுகிறார்:

'5 லட்சம் மக்கள் தொகையைக் கொண்ட தலை நகரான கனங்காவில், வாழ்க்கை மிகவும் அவலமாக இருந்தது. நேற்று நான், ஒரு சிறுமி, புல்லைத் தின்று கொண்டு இருந்ததைப் பார்த்தேன். மற்றொருவர், மது பானக் கழிவை சாப்பிட்டுக் கொண்டிருந்ததையும் காண நேர்ந்தது. அச்சிறுமி, வீட்டிற்கு எடுத்துச் செல்ல மேலும் புல்லை சேகரித்துக் கொண்டிருந்தாள். கேட்டதற்கு, மூன்று நாட்களாக சாப்பிடவில்லை என்று தெரிவித்தாள். ஒரு ராணுவக் கவிழ்ப்பு முயற்சி பற்றி வதந்தி உலவியது. மொபுட்டு, தனது அமெரிக்க உளவாளிகள் மூலம் விஷயத்தை கேள்விப்பட்டு அவர்களை விலை கொடுத்து வாங்கி விட்டார்.'

கிவிலு பிராந்தியத்தில் உள்ள ஒரு ரோமன் கத்தோலிக்க பாதிரியார் இவ்வாறு கருத்து தெரிவிக் கிறார்:

'இம்மக்களைப் பொறுத்தவரை, நிதி நிறுவனத் தாலும், பிற பணக்கார நாடுகளாலும் பெரிதும் புகழப் படுகிற 'பொருளாதார' மீட்பு என்பது பயங்கரமான பேரழிவுதான். சம்பளம் அப்படியே இருக்கும்போது,

விலைவாசி விண்ணைத் தொட வேகமாக போய்க் கொண்டு இருந்தது. அதற்கு உள்ளூர் உற்பத்தி பொருட்களும் தப்பிக்கவில்லை. வறுமை எங்கும் தாண்டவமாடியதால், மக்கள் தலைநகரைவிட்டு இங்கு ஓடிவந்து கொண்டு இருந்தனர். சம்பாதிப்பதை வைத்து வாழ்க்கை நடத்த முடியவில்லை; ஏனெனில் எல்லாவற்றிற்கும் பணம் கொடுக்க வேண்டியிருந்தது—ஒரு பாலத்தை கடக்க; ஒரு ராணுவ சாலைத் தடையை கடக்க; ஒரு பள்ளியில் சேர; பின்னர் மதிப்பெண்கள் வாங்க என்று எதற்கெடுத்தாலும் காசு!'

'மருத்துவமனை செவிலியர்கள் தங்களால் இயன்ற அளவு சேவை செய்து வந்தனர். ஆனால், ஏழைகள் உட்பட அனைவரிடம் இருந்தும் அவர்கள் பணம் வசூலிக்க வேண்டியிருந்தது. ஏனெனில், அரசுப் பணம் கிடைத்தபாடில்லை. இதற்கிடையே, பணம் உள்ளவர்களும், அதிகாரம் உள்ளவர்களும் திருடத் தயங்கவில்லை. மருத்துவமனை இயக்குனர் 2,00,000 சயர்கள்மதிப்புள்ள மருந்துகளை திருடிக் கொண்டார். மாநில கல்வி அதிகாரி, கத்தோலிக்கப் பள்ளிகளில் இருந்து 3.5 மில்லியன் சயர்களை சுருட்டிக்கொண்டார்...'

1984 இல், நிதிநிறுவனத்தின் பரிந்துரைகளின்படி 46,000 ஆசிரியர்கள (நாட்டிலுள்ள மொத்த ஆசிரியர்களில் 20 சதவிகிதம்) வீட்டிற்கு அனுப்பப்பட்டனர். மேற்படிப்பு படித்துக்கொண்டிருந்த ஊழியர்களில் மூன்றில் ஒரு பகுதியினரும் தூக்கியெறியப்பட்டனர். அதில் தலைதப்பிய ஒரு பாதிரியார் இவ்வாறு கூறுகிறார்:

'ஆசிரியர்களின் சம்பளம் பயங்கரமாக தேய்ந்து கொண்டு வருகிறது. ஆனால் இளைஞர்களும், அறிவு ஜீவிகளும், நடப்பதை புரிந்து கொண்டு இருந்தனர். அவர்களின் அரசியல் உணர்வு கூர்மை அடைந்து

கொண்டு வந்தது. ஏற்கெனவே இரு ஆசிரியர்கள் போராட்டம் வெடித்துவிட்டது. ஆனால் யாரையும் கைது செய்ய முடியவில்லை; ஏனெனில் வெளிப்படையான தலைவர்கள் யாரையும் சுட்டிக்காட்ட முடியவில்லை. அரசு எதிர்ப்பு இயக்கங்களை மெதுவாகத்தான் கட்டி எழுப்ப முடியும். பெரும்பாலான மக்கள் இன்னும், ஆளுபவர்களுக்கு, இனத் தலைவருக்கு, மருத்துவர்களுக்கு கட்டுப்பட்டே இருக்கின்றனர்.'

ஏன் சயரில் இன்னும் நிதிநிறுவனக் கலவரங்கள் ஏற்படவில்லை என்பதை மேற்கண்ட கூற்று விளக்கும். ஆனால், பயங்கர அடக்குமுறை இருந்தும், பல எதிர்ப்பு வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன. ஆசிரியர்கள் முன்னணியில் இருந்தனர். வங்கி ஊழியர்கள், தபால் ஊழியர்கள் மற்றும் பல தேசியமயமாக்கப்பட்ட துறை ஊழியர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வந்தனர்.

ஒரு கிறித்துவ அமைப்பிற்காக வேலை செய்து வந்த ஒரு பெல்ஜியப் பெண்மணி, 1984 நவம்பர், டிசம்பர் மாதங்களில், கிவு பிராந்தியத்தில் பரவலாக பயணம் செய்து இருந்தார். அவர் ஒரு தனிப்பட்ட அறிக்கை ஒன்றை தயார் செய்து இருந்தார். அதில் இருந்து சில :

''எனக்கு பசிக்கிறது!'' ''எனக்கு பசிக்கிறது'' இக்குரல்கள்தான் நான் போன இடமெல்லாம் ஒலித்துக்கொண்டிருந்தது. உள்ளூர் ரீதியான வறட்சி ஒன்று ஏற்பட்டுக்கொண்டிருந்தது. அடுத்த அறுவடைவரை, மக்களால் தாக்குப்பிடிக்க முடியாமல் தவித்தனர். விலைவாசி நாளுக்கு நாள் புதிய உயரங்களை எட்டிக் கொண்டிருந்தது. நேற்று 10 சயருக்கு விற்ற பீன்ஸ், இன்று 40 சயர். பெரும்பாலான குடும்பங்கள் ஒன்று விட்டு ஒரு நாள்தான் சாப்பிட்டுக் கொண்டிருந்தன.

குறைந்தபட்சம் 20 சதவிகிதம் குழந்தைகள் பள்ளிக்குச் செல்லாமல் இருந்தனர்—காரணம் பஞ்சம்! சயரின் இப்பகுதிதான் நாட்டின் தானியக் களஞ்சியம் என்று அழைக்கப்பட்டு வந்தது! அதற்கே இந்த நிலை. நிலைமையை சமாளிக்க மக்கள் எடுத்த முயற்சிகளுக்கும் பலத்த அடி விழுந்து கொண்டு இருந்தது. நாங்கள் எங்கள் கிறித்துவ மையத்தில், விவசாயிகளுக்கு 27 வீடுகள் கட்டித்தரும் ஒரு திட்டத்தை துவக்கினோம். அவையும் நன்றாகவே உருவெடுத்துக்கொண்டிருந்தது. ஆனால் இறுதியில் அதை முடிக்கத் தேவையான கருவிகள் கிடைக்கவில்லை. அதை, தலைநகரில் இருந்து கொண்டு வரவேண்டியிருந்தது. சாலைகள் சரியாக இல்லாததால், விமானம் மூலம் கொண்டு வரப்பட்டன. இதனால் கடுமையான விலையேற்றம் ஏற்பட்டது. உதாரணமாக ஒரு கிலோ ஆணி 360 சயர்களுக்கு விற்றது.'

பொருளாதார பின்னடைவு மிகக் கடுமையாக இருந்ததால், மக்களால் தங்களுடைய சம்பளத்திற்குள் காலம் தள்ள முடியவில்லை. விளைவு! அவர்கள் 'அரசியலமைப்புச் சட்ட விதி 15ஐ' நம்பி வாழ்க்கையை ஓட்ட வேண்டியிருந்தது. சுதந்திரம் அடைந்தவுடன் சயரின் அரசியலமைப்பு சட்டத்தில் 14 விதிகள்தான் ஏற்படுத்தப்பட்டன. அதனால், மக்கள் தாங்களாகவே சட்ட ரீதியாகவோ, அல்லது புறம்பாகவோ ஈடுபடும் செயல்கள் அனைத்திற்கும் 'சட்ட விதி 15' என்று பெயர் சூட்டப்பட்டது.

கடைசியில் நிலைமைதான் என்ன? ரொம்பச் சுலபமானது! சயரில் இன்று மிஞ்சியிருப்பது 2500 அதி உச்ச பணக்கார குடும்பங்களும் 27 மில்லியன் அடி கீழ்மட்ட ஏழைக் குடும்பங்களும்தான்! இதை எதிர்த்து சிறு சிறு போராட்டங்கள் வெடித்ததாலும், இதற்கு சரியான தீர்வு கத்தோலிக்க தேவாலயம், ஒரு பொது

வேலைநிறுத்தத்தை அறிவிப்பதன் மூலமே ஏற்பட முடியும் என்பது பலருடைய கருத்து. ஆனால் தேவாலயம் தொடர்ந்து மௌனம் சாதித்து வருகிறது.

பல சமயங்களில் எதிர்ப்பு போராட்டங்களை, மக்கள் சில அற்ப காசுகளுக்கு ஆசைப்பட்டு காட்டிக் கொடுத்து விடுகின்றனர். ஆனால் பொதுவாக கூட்டு முயற்சி மூலமே மாற்றம் சாத்தியம் என்பது மக்களுக்கு கொஞ்சம் கொஞ்சமாக புரியத் துவங்கி உள்ளது.

உதாரணமாக, சயரின் வளமான பிராந்தியங்களில் ஒன்றான லிசாலாவில் ஏழை விவசாயிகள், ஒருசில பெரும் வர்த்தகர்களை நம்பி வாழ்க்கையை ஓட்டி வந்தனர். அவர்கள் விளைச்சலை அடிமாட்டு விலைக்கு வாங்கிக் கொண்டு சென்றனர். ஆனால் தற்போது, ஒரு சயர் நாட்டு வேளாண் பொருளாதாரவாதி ஒருவர் அங்கு சென்று வசிக்கத் துவங்கியுள்ளார். அவர் அவ்விவசாயிகளை ஒற்றுமையாக ஒன்றுகூடி இயங்க உதவியுள்ளார். அந்த வல்லுனர் பலமுறை கைதாகி இருந்த போதிலும், விவசாயிகள் முன்பு இருந்ததைப் போல மூன்று மடங்கு விலையை பெற்று வருகின்றனர்.

வேறு சில கிராமங்களில், மக்கள் ஒரு சமுதாய அரிசி அரவை ஆலை ஒன்றை நிறுவ ஊக்கப்படுத்தப் பட்டுள்ளனர். அதனால், அவர்கள் குத்திய நெல்லை, முன்பை விட இருமடங்கு விலைக்கு விற்க முடிகிறது. அதே சமயம், கிடைக்கும் லாபத்தைக் கொண்டு, ஆலை வாங்கிய பணத்தை அடைத்து வருகின்றனர். வர்த்தகர்களின் வழி அப்போதும் தனிவழியே; அவர்கள் ராணுவத்தினருடன் வந்து, வலுக்கட்டாயமாக, நெல்லைக் கொண்டு செல்ல முயன்றனர். ஆனால் விவசாயிகள் ஒரு கூட்டு பாதுகாப்பு ஒன்றை ஏற்படுத்திக் கொண்டதோடு, அருகே உள்ள கிராமங்களுக்கு முன்பே

தகவல் தெரிவிக்கவும் செய்தனர். உள்ளூர் அரசு அதிகாரிகள, மக்கள் மீது கடுமையான அபராதங்களை விதித்து, பணக்காரர்கள் ஆகின்றனர். ஒரு கிராமத்தில் மக்கள் இப்படி கூட்டுறவுகளை அமைத்துக்கொண்டு, அபராதம் செலுத்த மறுத்ததை தொடர்ந்து, வேறு இடத்திற்கு தன்னை அனுப்ப அரசை வேண்டிக் கொண்டிருக்கின்றார்.

சமுதாய கூட்டு முயற்சி ஒன்று மிகவும் வெற்றி பெற்று விட்டதால், அது உடைத்து நொறுக்கப்படும் அபாயத்தில் உள்ளது. பல கிராமங்களைச் சேர்த்து 5000 விவசாயக் குடும்பங்கள் ஒன்று சேர்ந்து, தங்களது வாழ்க்கையை பாதிக்கும் அனைத்து நடவடிக்கை களுக்கும்—மீன் பிடிப்பு, கால்நடை வளர்ப்பு, நெற் சந்தை, அடிப்படை பொருளை வாங்குதல், சேமிப்பு, கடன் போன்ற கூட்டுறவுகளை அமைத்துள்ளனர். பெண்கள் குழுக்கள் அரவைக் கூட்டுறவுகளையும், நீர் வழங்கலையும் பார்த்துக் கொள்கின்றனர்.

பொருளாதாரப் பிரச்சனைகளும். பரவலான பற்றாக்குறையும் அவர்களை தளர்வடையச் செய்ய வில்லை. மாறாக அவர்களை கூட்டாக இயங்கி செயல்படத் தூண்டியுள்ளது. அவர்கள் கால்களை நன்றாக ஊன்றி விட்டதால், இப்பொழுது பிற துறை களில் நுழைந்துள்ளனர். உதாரணப், விவசாயிகளின் உரிமைகளை பாதுகாக்க சட்ட உதவி. பெண்களுக்கு எதிரான பாகுபாட்டையும் அவர்கள் எதிர்க்கின்றனர். இதைப் பார்த்து பிற பிராந்தியங்களிலும், அதுபோல துவங்க பல குழுக்கள் அங்கு விஜயம் செய்கின்றன. முதலில் பிராந்திய ரீதியாக, பின்னர் நாடு தழுவிய அளவில் ஒரு விவசாய இயக்கத்தை கட்டி எழுப்ப

எண்ணம். 1985 வாக்கில், அவர்கள் அப்பிராந்திய மெங்கும் 80 கூட்டுறவுகளை கட்டி எழுப்பியுள்ளனர். அதில் 20000 விவசாயக் குடும்பங்கள் உறுப்பினர்களாக உள்ளனர். புதிய தலைவர்களை உருவாக்குவது இன்று இதன் முன்னுரிமையாக விளங்குகிறது.

இது அவ்வளவு சுலபமான காரியமாக இருக்கவில்லை. சந்தித்த பிரச்சனைகளைப் பற்றி அமைப்பாளர்கள் இவ்வாறு கூறுகின்றனர்: நாங்கள் மிக மோசமாக பயிற்றுவிக்கப்பட்ட அமைப்பாளர்களுடன் சேர்ந்து வேலை செய்ய வேண்டும். வேறு நாடுகளில், எவ்வாறு விவசாய இயக்கங்கள் தோன்றி வளர்ந்தன என்பது குறித்த தகவல்கள் மற்றும் ஆவணங்கள் எங்களுக்கு தேவையாக இருந்தன. நாங்கள் முதலில் இருந்தே தற்சார்புடன் இருக்க முடிவு செய்திருந்தோம். வெளியாருடன் கூட்டு வைத்துக்கொண்டால், என்றாவது ஒருநாள், நாங்கள் செய்வதோடு அவர்களுக்கு உடன்பாடு இல்லாமல் போய்விடும். தகவல் பரிமாற்றத்திற்கு எங்களிடம் வசதி இல்லை. அதற்கு தேவாலயத்தின் உதவியை நாட வேண்டி இருந்தது.

நாங்கள் பிராந்திய அளவிலும், மாநில அளவிலும் வேலை செய்ய நினைத்தால், அதற்கு போய் வர ஒரு வழி கண்டுபிடித்தாக வேண்டும். தனது காரில், ஒரு காலி யிடத்தோடு போகும், ஒரு பாதிரியாரை எப்போதும் தேடிக் கொண்டு இருக்க முடியாது. எங்களை எப்போதும் போலீஸ் கண்காணித்துக் கொண்டு இருந்தது. நாங்கள் எதிர்ப்பாளர்களாக நோக்கப்பட்டோம். தகவல்களைப் பெற பெரும் தாகம் இருந்தும், அதைப் பெறுவது மிகவும் சிரமமான காரியமாக இருந்தது. தொடர்ந்து ஒரு இதழைப் பெற்று வந்தால், அதை போலீஸ் கண்காணிக்கும். அதனால் நேரில் பார்க்கும்போது பரிமாறிக் கொள்வதுதான் ஒரே வழியாக இருந்தது.

வேறு பல கூட்டு நடவடிக்கைகளும் பலன் அளிப்பன வாக இருந்தன. உதாரணமாக, மக்கள் சும்மா கழுத்தை திருப்பிப் பார்த்தாலே வரி விதிக்கப்பட்டு வந்தது. எது அசல், எது போலி என்பது மக்களுக்கு புரியாமல் இருந்து வந்தது. தேவாலயமும், பிற அமைப்புகளும், இப்படி சட்டத்திற்கு புறம்பாக வசூலிக்கப்படும் வரி குறித்து தொகுத்து, அதை பிரார்த்தனை முடிந்து போகையிலோ, சந்தையிலோ மக்களிடம் விநியோகித்தனர். மக்களுக்கு இதுதாண்டா சட்டம், இதுதான் உன் உரிமை என்று தெரிந்த பிறகு கதையே வேறுதான்!

உதாரணமாக, ஒரு கிராமத்தில் சந்தைக்கு அருகே இருந்த இரு ராணுவ சாலைத் தடையில் இருந்த அதிகாரிகள், அங்கு விற்பனை செய்ய வரும் பெண் களிடம், வரி என்ற பெயரில் எதையோ வசூலித்து வந்தனர். கடைசியில் 400 பெண்கள் அடங்கிய குழு, இந்த சாலைத் தடையை எதிர்த்தது. தேவாலயம் ராஜதுரோகச் செயலை புரிவதாக ராணுவ கேப்டன் குற்றம் சாட்டினார். இறுதியில் சாலைத் தடைகள் அகற்றப்பட்டன.

மற்றொரு இடத்தில், கிராமவாசிகள் கூட்டாக சேர்ந்து மீன் வளர்க்க சுமார் 80 குட்டைகளை தோண்டினர். அவர்கள் தோண்டி முடித்ததும், ஒரு குட்டைக்கு தலா 800 சயர் வரி விதிக்கப்பட்டது. ஆனால் அக் கிராமவாசிகள் ஒருமனதாக, அவ்வரியை செலுத்த மாட்டோம் என்று முடிவெடுத்து செயல்படுத்தியதால், அதிகாரிகள் விட்டுக் கொடுக்க வேண்டியதாயிற்று!

தாக்குப் பிடிக்கும் கலை நகர்ப்புறங்களுக்கும் பரவியது. இவர்கள் கடைபிடிக்கும் முறைகள், மேற்கத்திய மக்களுக்கு விநோதமாகத் தோன்றலாம். ஏனெனில் அவர்களுக்கு அரசியல், குடி உரிமைகள் அப்படியே கிடைத்து வருகின்றன. சயரில் ஒரு கடிதம்

எழுதுவதுகூட போராட்டத்தில் முடியக்கூடும். அந்த அளவு அடக்குமுறை. அப்படிப்பட்ட ஒரு சூழலில், ஒரு அரசு அதிகாரியை சட்டத்திற்கு கீழ்படிந்து நடக்க வைத்தால் அது பெரு வெற்றியாகும்.

சந்தைகளை தங்கள் வசம் வைத்திருந்த பெரிய ''மாமா''க்களையும் அவர்கள் பிடுங்கிக் கொண்டிருந்த வரிகளையும் பெண்கள் எதிர்க்கத் துவங்கினர். அந்த மாமாக்களுக்கு ராணுவமும், அரசு அதிகாரிகளும் கூட்டு. பெண்கள், இவ்வாறு ஒவ்வொரு முறை 'வரி' கொடுக்கும் போதும், அதைத் தொகுத்து சாட்சிக் கையெழுத்துடன், அதிகார வர்க்கத்தில் உயரே அமர்ந்திருந்தவர்களிடம் தொடர்ந்து கொடுத்து வந்தனர். கடைசியில், இதன் மீது நடவடிக்கை எடுக்க தயாராக இருந்த ஒரு அதிகாரியை அவர்கள் சந்திக்க நேர்ந்தது. அதனால் மாமாக்கள் ஒழிந்தனர். ஆனால் இதற்கு அவர்கள் கொடுத்த விலை அதிகம் — பலருடைய வீடுகள் சூறையாடப்பட்டன; பலர் அடித்து நொறுக்கப் பட்டனர்; பல பெண்கள் பாலியல் வன்முறைக்கு ஆளாயினர்.

இத்தகைய முயற்சிகள் நம்பிக்கை அளித்தாலும், அவை ஆயிரக்கணக்கில் பெருகினால் சயரின் நிலையில் ஒரு மாற்றத்தை கொண்டுவர இயலும். ஆனால் உண்மையான மாற்றம், என்று மேற்கு, 'மக்கள் தலைவர்' மொபுட்டுவிற்கு ஆதரவு அளிப்பதை நிறுத்தி, சாதாரண சயர் மக்களை பட்டினி போட்டு, அவர்களது ஏற்றுமதி வருவாயில் 50 சதவிகிதத்தை பிடுங்கிக் கொள்வதை கட்டுபடுத்திக் கொள்கிறதோ அன்றுதான் வரும்.

ஆனால் அப்படிப்பட்ட ஒரு முடிவு சாத்தியமல்ல. சயருக்கு பணம் கொடுத்தவர்கள், பல வருடங்களாக அங்கு என்ன நடைபெறுகிறது என்பதை அறிவர். ஏனெனில் இந்த செயல்முறை அவர்களுக்கும் லாபகர

மாகவே இருக்கிறது. அவர்களுக்கு சயரின் வளமான உலோகத் தாதுப் பொருட்கள், தங்கள் கட்டுப்பாட்டில் இருப்பது முக்கியம். அதை உறுதி செய்ய, சயரின் மேல்தட்டு வர்க்கத்திற்கு தீனி போடுவதும் அவசியம். மொபுட்டுவின் சொத்துக்களை விற்றாலே கடன் முழுவதையும் அடைத்துவிடலாம். சயரில் இதுமட்டும் நடைபெறவில்லை. உபயோகமற்ற, சரியாக திட்டமிடப் படாத, ஆபத்தான பல திட்டங்கள் அங்கு புகுத்துப் பட்டுள்ளன. இதில் மேற்கிற்கு சரியான பங்கு உண்டு.

உதாரணமாக, தேசிய ஆடை நிறுவனம் 1973 இல் அமெரிக்காவில் இருந்து 30 அதி-நவீன பருத்தி சுத்திகரிப்பு இயந்திரங்களை 7.5 மில்லியன் டாலருக்கு வாங்கியது. அதை வாங்கச் சென்ற சயரின் பிரதிநிதிக் குழுவிற்கு 450000 டாலர்கள் கமிஷனாக கிடைத்தது. இதில் ஒரு இயந்திரம்கூட இயங்கவில்லை.

அதேபோல கிஷாங்கனி விமான நிலையத்தில் உள்ள ஓடுதளம் முழுவதுமாக பழுதுபார்க்கப்பட்டு நீட்டப் பட்டவுடன், இரண்டாவது ஓடுதளம் ஒன்றும் உடனடியாக போடப்பட்டது. அங்கு மொத்தம் ஒரு நாளைக்கு அதிகபட்சம் 5 விமானங்கள்தான் வந்து போகும். இது அப்பிராந்தியத்தில் ஒரு வருட வருமானத்தை விழுங்கிக் கொண்டது. கிஷாங்கனியில் உள்ள ஒரு சாதாரண தொழிலாளிக்கு, பல மாத சம்பளம் தேவைப்படும் — வீட்டில் இருந்து விமான நிலையம் வரை டாக்சியில் செல்வதற்கு! அப்படி போய்விட்டால், அவன் சொகுசான குளிர்சாதன வசதியை ஆனந்தமாக அனுபவிக்கலாம்!

கின்ஷா சர்வதேச வர்த்தக மையக் கட்டிடத்தில் யாரும் இல்லை; ஏனெனில் அங்கு உங்களால் வேலை செய்ய முடியாது—காரணம் அதற்கு சன்னல்களே

கிடையாது! பிரெஞ்சு நிறுவனம் ஒன்றால் வழங்கப்பட்ட குளிர்சாதன இயந்திரங்கள், உத்திரவாதக்காலம் முடிந்தவுடன் சுத்தமாக பழுதடைந்துவிட்டன.

'சயரின் குரலு'க்காக 110 மில்லியன் டாலர் செலவில் கட்டப்பட்ட தொலைக்காட்சி தகவல் மையம் உண்மையிலேயே ஒரு நல்ல விஷயம்—இல்லையெனில் அப் பணத்தைக் கொண்டு 165000 ஆரம்பக் கல்வி பள்ளி ஆசிரியர்களுக்கு 5 வருடங்களுக்கு சம்பளம் வழங்கியிருக்கலாம்! வேறு ஒன்றும் கிழித்திருக்க முடியாது. 1980 டிசம்பரில் திட்டம் அமைத்து முடிக்கப்பட்டது. அதை அமைத்துக் கொடுத்த பிரெஞ்சு நிறுவனம், 'தன் சொந்த செயற்கைகோள் தகவல் பரிமாற்ற வசதியைக் கொண்டுள்ள ஒரு சில நாடுகளில் சயரும் ஒன்று' என்று முழங்கியது. வால்ஸாட் ஜர்னலின் பத்திரிக்கையாளரும், 'முடிவுற்ற எதிரிகள்' என்ற அற்புதமான புத்தகத்தின் ஆசிரியருமான ஜோனத்தன் கிவித்தி இவ்வாறு குறிப்பிடுகிறார் :

'அந்த பிரெஞ்சு நிறுவனத்தின் தலைவர் பிலிப் ஜிஸ்கார்ட் எஸ்டய்ங், முன்னாள் பிரெஞ்சு அதிபரின் நெருங்கிய உறவினர். அக் கட்டிடம் கட்டவும், தகவல் பரிமாற்ற அமைப்பு விற்கவும் தேவையான ஒப்பந்தம், அதிபர் வாலரி ஜிஸ்கார்ட் எஸ்டய்ங் பதவிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்டது. இவர்தான் மொபுட்டு அரசைப் பாதுகாக்க இருமுறை பிரெஞ்சு ராணுவத்தை அனுப்பியவர். எப்படியோ, அந்த அதிநவீன திட்டம் ஒரு மாதத்திற்கு உள்ளாகவே செயலிழந்து விட்டது. மேலும், அதை நாட்டின் உட்பகுதியில் ஒளிபரப்ப வசதிகள் கிடையாது. பல சயர் குடிமக்கள் மின்சக்தி வசதியில் இருந்து ஓரிரு நாட்கள் தள்ளி வசிக்கின்றனர். தொலைபேசியை பலர் கண்ணால் பார்த்ததுகூட கிடையாது. அப்படி இருக்கும்போது, எதற்கு இந்த

அதி அதிநவீன தகவல் அமைப்பு? சயர் குடிமகனுக்கு தேவையில்லாமல் போகலாம். ஆனால் அந்நிய நிறுவனங்களுக்கு இது தேவை.

சயரில் ஏராளமான நீர் வளம் இருப்பதால், நல்ல சக்தி திட்டங்கள், அதை கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். தொடர்ச்சியாக பல சிறிய அணைகள் கட்டுவதுதான் அந்நாட்டிற்கு உகந்தது. ஆனால் அமெரிக்காவின் நினைப்பு வேறு மாதிரி இருந்தது. அது கரடுமுரடான பகுதியில் 1100 மைலுக்கு மின்சக்தியை கம்பி மூலம் கடத்த திட்டம் போட்டது. உபயம் : அப்போதைய அமெரிக்க தூதுவர் ஷெல்டன் வான்ஸ்! ஜோனத்தன் கிவிட்டி என்னிடம், '1980இல் அமெரிக்க தூதரக அதிகாரி ஒருவர், திட்டம் நீண்டகாலம் எடுப்பதால் பல இயந்திரங்கள் துருப்பிடித்து கெட்டுப் போய் கொண்டிருக்கின்றன' என்று கூறியுள்ளதாக தெரிவிக்கிறார். எப்படியோ அமெரிக்க ஜெனரல் எலக்ட்ரிக் நிறுவனத்திற்கும், மோரிசன் நாட்சன் நிறுவனத்திற்கும் ஒப்பந்தம் கிடைத்துவிட்டது. இதில் சுவையான விஷயம், மோரிசன் நிறுவனத்தின் தற்போதைய வழக்குரைஞர் யார் தெரியுமா? அதே ஷெல்டன் வான்ஸ்தான்! தூதர் பதவியில் இருந்து ஓய்வு பெற்றதும் வழக்குரைஞராகிவிட்டார்!

அந்த மகா மின்சக்தி திட்டம், ஒரு செம்பு சுத்திகரிப்பு ஆலைக்கும், இரும்பு எஃகு ஆலைக்கும் மின்சக்தி கொடுத்திருக்க வேண்டும். ஆனால், அந்த இரும்பு ஆலை தனது சக்தியில் 10 சதவிகித திறனுக்கு மேல் ஒருபோதும் இயங்கியதில்லை. அதோடு அது உற்பத்தி செய்யும் எஃகின் தரமோ மிக மோசம். அதன் விலையோ இறக்குமதி எஃகைப்போல நான்கு மடங்கு. இந்த லட்சணத்தில், முதலில் 10000 பேருக்கு வேலை வாய்ப்பு என்று முழங்கப்பட்ட இடத்தில் 1000 பேர்தான்

வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். செம்பு சுத்திகரிப்பு ஆலை ஒரு துண்டு செம்பைக்கூட இன்றுவரை சுத்திகரிக்கவில்லை. அதே சமயம், இந்த மின்சக்தி திட்டம், தனது 1100 மைல் பாதையில் ஒரு கிராமத்திற்குகூட மின்சக்தி அளிக்காதவாறு வடிவமைக்கப்பட்டுள்ளதை சாமர்த்தியம் என்று கூறுவதா? இல்லை...? இத்திட்டம் வழங்கப்பட்டதற்கு முக்கிய காரணம், மொபுட்டு அரசிற்கு ஆதரவு தர, தனது நிறுவனங்களுக்கு ஒப்பந்தம் அளிக்க, அமெரிக்க அரசு விதித்த நிபந்தனையாகும் என்று கூறப்படுகிறது.

இந்த அரசு மக்களை வெறும் பட்டினிப் போட்டு கொல்வதோடு திருப்தியடையவில்லை. எதிர்த்தவர்கள் சித்திரவதைக்குள்ளானார்கள். பலர் மாயமாய் மறைந்தனர். அதிபரின் முன்னாள் மெய்க்காப்பாளராக இருந்த ஒருவர், ஒரு பெல்ஜிய தினசரிக்கு அளித்த பேட்டியில், 1980க்கும் 1983க்கும் இடையே மட்டும், அரசை எதிர்த்த 500 பேர் கொலை செய்யப்பட்டதாக தெரிவித்தார். தான் அதில் நேரடியாக பங்கு பெற்றதாகவும் அவர் கூறினார். கின்ஷா அதிபர் மாளிகைக்கு அருகே, மான்ட் நுகலிகாவில் உள்ள ஒரு முகாமில் சித்திரவதைகளும், கொலைகளும், அதிபரின் மெய்க்காவல் படையினரால் நடத்தப்பட்டன என்று சர்வதேச மனித உரிமை இயக்கமான அம்னஸ்டி இண்டர்நேஷனல் தெரிவிக்கிறது.

கொலைக்காரர்களும், கொள்ளைக்காரர்களும் அடங்கிய இந்த, சயர் ஆளும் வர்க்கத்தை அடையாளம் காண பெரிய வித்தை எதுவும் தேவையில்லை. ஆனால், சர்வதேச அமைப்புகளுக்கும், வர்த்தக வங்கிகளுக்கும் இதைப்பற்றி எல்லாம் அக்கறை கிடையாது. பத்து வருடங்களுக்கு முன்பு கடன் தவணை கொடுக்க முடியாமல் சயர் தவித்துக் கொண்டிருந்தபோது, பல

வங்கிகள் அதற்கு உதவ முன்வந்தன. பல வங்கிகளை பிரதிநிதப்படுத்தி பேச்சுவார்த்தை நடத்திய சிட்டி வங்கியின் மூத்த உதவித்தலைவர் டாக்டர் இர்வங் பிரெய்ட்மண், 250 மில்லியன் டாலர் புதுக்கடன் கொடுத்து உதவினார். சயர் நிதிநிறுவனத்திடம் மேலும் கடன் வாங்கி, நாட்டு நிதிநிலைமையை சீராக்கிக் கொள்ள ஒப்புக்கொண்டுள்ளதால், அதன் நாணயத் தன்மை மீண்டும் நிரூபிக்கப்பட்டு உள்ளதாக அதற்கு நற்சான்றிதழ் அளித்தார் பிரெய்ட்மண். இப்படி சாதனை புரிந்ததில் வியப்பில்லை. ஏனெனில் அவர் முன்பு உலக வங்கி மற்றும் நிதிநிறுவனத்தில் உயர் பதவிகள் வகித்து வந்தவர்தான்! இந்த உடன்பாடு கூட, சயரின் ரிசர்வ் வங்கியின் ஆளுனருடன், ஒரு நண்பர் என்ற முறையில், அதிகாரபூர்வமற்ற முறையில் பேசி ஏற்பாடு செய்யப்பட்டது என்று பெருமையடித்துக் கொள்ளக்கூட பிரெய்ட்மண் தயங்கவில்லை. 1976 இல், சயருக்கு கடன் கொடுத்தவர்கள் அடங்கிய 'பாரிஸ் கிளப்', சயரின் 85 சதவிகிதம் கடன் தவணையை முதலில் மூன்று வருடங்களுக்கும், பின்னர் ஏழு வருடங்களுக்கும் தள்ளிப் போட்டது. இதில் ஒன்றும் வியப்பில்லை. டாக்டர் பிரெய்ட்மண், 'சயர் நல்ல வளங்களைக் கொண்டுள்ள தால், உலக முதலாளித்துவ நாடுகள், அதன் பொருளாதாரத்தை தூக்கி நிறுத்த முயல்கின்றன' என்று தெரிவிக்கிறார்.

10 வருடங்களுக்குப் பிறகும் அது தொடர்கிறது. இப்படியாக, உலகிலேயே மிக அதிக முறை, இப்படி கடன் தவணை தள்ளிப் போடப்பட்ட நாடாக சயர் திகழ்ந்தது. 1984 இல், மொபுட்டு தனது நாணய மதிப்பை 500 சதவிகிதம் குறைத்ததை பாராட்டி, சர்வதேச நிதிநிறுவனம், 1985 இல் மேலும் 160 மில்லியன் டாலர் கடன் கொடுத்தது.

மீண்டும் கடன் கொடுத்தவர்களின் கணக்கு தப்பி விட்டது. பிச்சை ஓட்டை கையில் எடுத்துக்கொண்டு மறுவருடமே, மொபுட்டு பாரீசுக்கு கிளம்பிவிட்டார். அவர் கேட்டது சிறிய தொகைதான்—வெறும் 900 மில்லியன் டாலர்கள் மட்டுமே!

தி எக்னாமிஸ்ட் 'அந்நிய நாட்டு அறிக்கை'யில் (இரகசியமானது) இவ்வாறு குறிப்பிடப்படுகிறது:

ஏமாற்றுதல், கறுப்புச்சந்தை, கள்ள ஏற்றுமதி போன்றவை சயரின் தலைநகரில் தலைவிரித்து ஆடுகின்றன. பிரதமரின் சிக்கன நடவடிக்கை, தனியார் மயப்படுத்துதல், அந்நிய மூலதன ஊக்குவிப்பு போன்றவை நாட்டை எங்கும் அழைத்துச் சென்றுவிடவில்லை. ஆனால் மாற்றுக்கொள்கை எதுவும் இல்லையே! என்ன செய்ய! சயரின் நிலைமை படுமோசமாகிக் கொண்டிருந்தாலும், மொபுட்டுவிற்கு ஆபத்து வராது என்பது எங்களது ஊகம்!

மாற்றுத் திட்டம் ஒன்று உண்டென்றால், அது பணக்குழாயை மூடி, மொபுட்டுவை தூக்கி எறிவதுதான். ஆனால் மொபுட்டு அதற்கு அஞ்சுபவராக தெரியவில்லை. 1986 டிசம்பரில் அவர், சயரின் கடன் தவணை, மொத்த ஏற்றுமதியில் 10 சதவிகிதத்துக்கு மேல் இருக்காது என்று சர்வசாதாரணமாக அறிவித்துள்ளார்.

**பின் குறிப்பு :**

1987 இல், மீண்டும் பாரீஸ் கிளப் 884 மில்லியன் டாலர் கடன் கெடுவை—முன்பு கேட்டிராத அளவில்—15 வருடங்களுக்கு நீட்டித்துள்ளது. மேலும் 6 வருட போனஸ் காலக்கெடுவும் உண்டு. அதில் எக்கடனும் திருப்பி அளிக்க வேண்டியதில்லை, அதோடு சர்வதேச

நிதிநிறுவனம், புதிதாக 370 மில்லியன் டாலர் கடன் அளிக்க ஒப்புக்கொண்டுள்ளது. சயருக்கு காட்டப்பட்ட கருணை பிற நாடுகளுக்கு கிடைக்கும் என்று யாரும் தப்புக்கணக்கு போட்டுவிடக்கூடாது என்று பாரீஸ் கிளப் கூறியுள்ளதாக தெரிகிறது. சயரின் ரிசர்வ் வங்கி ஆளுனர், இதை ஒரு 'வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி' என்று வர்ணித்துள்ளார்! எப்படிப் பார்த்தாலும் அது உண்மைதான்!!

# 4

# லத்தீன் அமெரிக்கா : கடனும் அதள பாதாளச் சரிவும்

மூன்றாம் உலகின் பிற நாடுகளோடு ஒப்பிடும்போது, லத்தீன் அமெரிக்கா செழிப்பானது என்று பலரும் நினைக்கின்றனர். பல வழிகளில் அது உண்மைதான். பல முக்கிய பொருளாதாரவாதிகளுக்கு மொத்த தேசிய உற்பத்திக் குறியீட்டு எண்தான் நம்பத்தகுந்த செல்வச் செழிப்பின் அளவுகோல். அதன்படி சகாராப் பகுதியில் உள்ள ஆப்பிரிக்க நாடுகளின் மொத்த தேசிய உற்பத்தி தலைக்கு 220 டாலராக இருக்கும்போது, லத்தீன் அமெரிக்காவில் அது 1700 டாலராக உள்ளது. அர்ஜெண்டீனா, மெக்சிகோ, வெனிசுலா போன்ற நாடுகளில் அது 2000 டாலருக்கும் மேலே.

லத்தீன் அமெரிக்காவில் மக்கட்தொகைப் பெருக்கப் பிரச்சனை கிடையாது. மெக்சிகோ, மத்திய தென் அமெரிக்கா மற்றும் கரீபிய நாடுகள் மொத்தத்திற்கும் சேர்த்து மக்கட்தொகை வெறும் 400 மில்லியன்தான். அதாவது இந்திய மக்கட் தொகையில் பாதி! ஆனால் இது பரந்துபட்ட ஒரு பகுதியில் உள்ளது. உதாரணமாக, பிரேசிலின் பரப்பளவு மட்டும் இந்தியாவை விட இரண்டரை மடங்கு பெரியது. இக்கண்டத்தில் ஏராளமான எண்ணை, வளமான மண், மதிப்புமிக்க கனிவளங்கள் ஆகியவையும் உண்டு.

வெளியே இப்படி பிரமாதமாக தெரியும் இக்கண்டத்திற்கு பெரும் பிரச்சனைகள் உண்டு. முதலில் நாடுகளுக்கு இடையே சமத்துவமின்மை; அதைவிட அதிகமாகத் தெரிவது சமுதாய வர்க்கங்களுக்கு இடையே உள்ள சமத்துவமின்மையாகும். உதாரணமாக, பிரேசிலின் சராசரி தேசிய மொத்த உற்பத்தி தலைக்கு 1700 டாலர்கள். அதே சமயம் பொலிவியாவுடையது வெறும் 509 டாலர்களே! பனாமாவுடையது 2200 டாலர்கள்; ஹாய்ட்டியுடையதோ வெறும் 320 டாலர்கள்.

ஒருபுறம் நாற்றமெடுக்கும் பணக்காரர்கள்; மறுபுறம் கந்தைகூட இல்லாத ஏழைகள்—இதுதான் லத்தீன் அமெரிக்கா! உலகிலேயே இங்குதான், வருவாய் மிக மோசமாக பிரிக்கப்பட்டுள்ளது! லத்தீன் அமெரிக்க பணக்காரர்கள் எப்படி ஆடம்பரமாக, அதி உல்லாசமாக வாழ்வது என்று நியூயார்க், லண்டன்வாசிகளுக்கு சொல்லிக் கொடுக்கக் கூடிய விதத்தில் வாழ்க்கை நடத்துபவர்கள். பிரேசிலில் உள்ள சமூகப் பொருளாதார ஆய்வு நிறுவனம், 1978 இல் அங்கு உள்ள மேட்டுக்குடி சீமான்களின் வருமானம், கீழ்மட்ட வர்க்கத்தினரைப் போல 225 மடங்காகும் என்று கூறுகிறது. இது 1970 இல் 178 மடங்காக மட்டுமே இருந்தது. பிரேசிலின் மக்கள்தொகையில் மூன்றில் இரு பகுதியினர் ஊட்டச்சத்துக் குறைவால் அவதிப்படுகின்றனர்.

1970களுக்குப் பிறகு, ஒரு லத்தீன் அமெரிக்க நாடு கூட, தங்களது செல்வம் எப்படி பகிர்ந்து கொள்ளப் பட்டுள்ளது என்பதற்கான புள்ளிவிபரங்களை அளிக்க வில்லை. கடைசியாக கொடுத்தது மெக்சிகோ; அது 1977 இல். இந்நாடுகள் இத்தகவலை அளிக்காததற்குக் காரணம், அவர்களிடம் அது குறித்த புள்ளிவிபரங்கள் இல்லை என்பதல்ல.

இச்சூழலில், பெரும் வளர்ச்சி வங்கி பொருளாதார வாதிகள், மக்களின் தலைக்கு இவ்வளவு வருமானம் என்று கணக்கிடப்பட்டுள்ள புள்ளிவிபரங்களையே சார்ந்துள்ளனர். இவை வெறும் சராசரி விபரங்களே. தலையை அடுப்பிற்குள்ளும், காலை குளிர்சாதன பெட்டிக்குள்ளும் வைத்திருந்தால், நீங்கள் 'சராசரியா'க சுகமாக இருக்கிறீர்கள் என்றா அர்த்தம்? சராசரி தேசிய மொத்த உற்பத்தியான 2000 டாலர்கள் இருக்கும்போது, 1900 டாலர் சம்பாதிப்பவன் குளிர்சாதன சௌகரியத் தையும், 10 டாலர் சம்பாதிப்பவன் அடுப்புக் கொதிப்பை யும் அனுபவிக்கிறான்.

## மாபெரும் வேலைக் கொள்ளை

கடன் நெருக்கடி, பலரை வேலையில் இருந்து தூக்கி எறிந்துள்ளது. சிரமப்பட்டு வேலையில் ஒட்டிக் கொண்டுள்ளோருக்கு, கடும் ஊதியக் குறைப்பை பரிசாக அளித்துள்ளது. பணம்தான் அனைத்து கொடுஞ் செயலுக்கு காரணம் என்று யார் கூறியிருந்தாரோ அவர், ஏதாவது ஒரு வேலையில் இருந்திருக்கக்கூடும். பெரும்பாலோரிடம் பணம் இல்லாமல் இருப்பது, ஏற்கனவே இருக்கும் சமுதாயக் கொடுமைகளை பெருக்கு கிறது. சர்வதேச நிதி நிறுவனம், ஒரு அரசின் பொதுச் செலவைக் குறைக்க வற்புறுத்தும்போது, அதற்கு முதலில் பலியாவது அரசு ஊழியர்களே—அதிலும் கடைநிலை யில் இருப்பவர்கள். இந்த நிபந்தனை, குறிப்பாக நிதி நிறுவனத்தின் அனைத்து திட்டங்களோடும் வருகிற இலவச இணைப்பு.

லத்தீன் அமெரிக்காவில் உள்ள வேலையில்லாத் திட்டத்தைப் புரிந்து கொள்வது எளிதல்ல. அரசுடன் பதிந்து வைத்துக் கொண்டிருக்கும் வேலையற்றோர் எண்ணிக்கை உண்மையில் கேலிக்கூத்து. வேலையில்லாமல்

வெளியே இருப்போரின் எண்ணிக்கை அதைவிட பல மடங்கு அதிகம். அதிகாரபூர்வமான எண்ணிக்கையே மோசமானதாக இருக்கும் பட்சத்தில், வெளியே இருக்கும் நிலைமை உண்மையில் நரகமாகத்தான் இருக்கும் என்று எடுத்துக் கொள்ளலாம்.

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் பொது இயக்குனர் பிரான்சிஸ் பிளான்கார்ட், 1980க்கும் 1984க்கும் இடையே, லத்தீன் அமெரிக்காவின் அதிகாரபூர்வ நகர்புற வேலையின்மை 40 சதவிகிதமாக அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கிறார். நகர்புற தொழிலாளர் விகிதம், 1970களைப் போன்ற விகிதத்தில் அதிகரிப்பதாக வைத்துக்கொண்டால், இன்று அது 67 சதவிகிதமாக உயர்ந்திருக்கக்கூடும்.

லத்தீன் அமெரிக்காவில் முதலீடு இல்லாமல் இருப்பதால், இயந்திரங்களின் நிலை தேய்ந்து கொண்டே போகிறது. மனித மூலதனம் தேய்ந்து கொண்டே வருவது, சர்வதேச தொழிலாளர் அமைப்பிற்கு கவலை அளித்து வருகிறது. மக்களுக்கு வேலை கிடைக்காத போது, அவர்கள் தங்கள் திறமையை வேகமாக இழந்து வருகின்றன. அதன் காலம் அதிகரிக்கும்போது, நிலைமை மோசமாகிக் கொண்டே போகிறது.

கடன் நெருக்கடியால், அதிகபேர், குறைந்த வேலைகளுக்காக போட்டியிடும்போது ஊதியம் குறைகிறது என்கிறார் பிரெஞ்சு பொருளாதாரவாதி பியிர்ரி சலாமா. அவரது விவாதம் இப்படி போகிறது:

தொடர்ச்சியான நாணய மதிப்புக் குறைப்பு தொடர்ந்து (நிதிநிறுவனத்தின் விருப்பமான பொழுது போக்கு!), முக்கியமான விஷயங்களுக்கு உள்ளூர் நாணயத்தைக் காட்டிலும், டாலரே அதிகாரபூர்வமற்று

உபயோகிக்கப்படுகிறது. பொருளாதாரம் டாலர் மயமாக்கப்படும்போது, அதிகாரிகளுக்கு உள்ளூர் நிதிக் கொள்கை மீதான பிடிப்பு தளர்ந்து விடுகிறது. முன்பு, லத்தீன் அமெரிக்க நாணயங்கள் அதிக மதிப்பு கொண்டவையாக இருந்தன. ஆனால் தற்போது அவை டாலருக்கு எதிரான அந்நியச் செலவாணி விகிதத்தில் குறைவான மதிப்பே கொண்டுள்ளன. கடன் கொடுக்கும் நாடான, அமெரிக்காவின் உற்பத்தித் திறனை அதன் டாலர், அந்நிய செலவாணி விகிதம் இனியும் பிரதிபலிப் பதில்லை.

நவீன, பெரிய வியாபாரிகள், தாங்கள் வாங்கும் கடனை டாலர் அடிப்படையில் வாங்க நிர்பந்திக்கப் படுகின்றனர். ஆனால் அவர்களின் வருவாயோ உள்ளூர் நாணய மதிப்பில் இருக்கும். நாணய மதிப்பு குறைக்கப் படும்போது, இவர்களின் கடன் மதிப்பு ஏறிவிடுகிறது. அதனால் அதைச் சரிகட்ட அவர்கள், விலையை ஏற்றுகின்றனர்—இது பணவீக்கத்தை அதிகரிக்கிறது. அல்லது தொழிலாளர்களின் ஊதியத்தை குறைக்கின்றனர். அதை மார்க்சிய வார்த்தைகளில் கூறுவதானால் சுரண்டல் விகிதத்தை அதிகரிக்கவேண்டும்; இல்லையெனில், கம்பெனியை இழுத்து மூட வேண்டியதுதான். இதற்கு சில உதாரணங்களைப் பார்க்கலாம்:

பிரேசிலைப் பொறுத்தவரை சட்டபூர்வமான குறைந்தபட்ச ஊதியம் ஒரு சௌகரியமான அளவுகோல். வெளி ஆட்களுக்கு முதலில் இது பெரும்புதிராக இருக்கும்; வருமானம், விலைவாசி, வாடகை எல்லாமே, குறைந்தபட்ச கூலியின் பெருக்கல்களாகவே குறிப்பிடப் படுவதைக்கண்டு! ஏன்? ஒரு குறைந்தபட்ச கூலி, ஒரு தனிநபர் வயிற்றை கழுவக்கூட போதாது. பிரேசிலின் ஆய்வு மையத்தின் கருத்துப்படி, 1983—85 இல் குறைந்தபட்ச கூலி, ஒரு குடும்பத்தின் அடிப்படை

தேவையில் ஐந்தில் ஒருபங்கில் இருந்து ஐந்தில் ஏழு பங்கு வரை மட்டுமே உள்ளன. இருந்தும் மொத்த தொழிலாளர்களில் 10 சதவிகிதத்துக்கும் குறைவானோர் 5 குறைந்தபட்ச கூலியைவிட அதிகமான கூலியை பெறுகின்றனர்.

1986 இல் பிரேசிலிய பத்திரிக்கை கீழ்கண்ட புள்ளி விபரங்களை அள்ளி வீசியது :

பொருளாதார ரீதியாக இயங்கிக்கொண்டிருப்பதாக கருதப்படும் மொத்த 52.4 மில்லியன் பிரேசிலியர்களில் 12.9 சதவிகிதம் தொழிலாளர்களுக்கு ஊதியமே கிடையாது. 30 சதவிகிதத்தினர் குறைந்தபட்ச கூலியை மட்டும் பெறுகின்றனர். கிராமப்புற தொழிலாளர்களில் 27.3 சதவிகிதத்துக்கு கூலி எதுவும் கிடையாது; 42.9 சதவிகிதத்தினர் குறைந்தபட்ச கூலியை மட்டும் பெறுகின்றனர். அதாவது பொருளாதார ரீதியாக இயங்கிக்கொண்டிருக்கிற மக்களில் 64.8 சதவிகிதம் ஏழ்மையில் இருந்து, கடுமையான வறுமை வரையில் அல்லாடிக் கொண்டு இருக்கின்றனர். பிரேசிலில், 1940 இல் இருந்து, உற்பத்தித்திறன் 4 மடங்கு அதிகரித்துள்ளது; ஆனால், குறைந்தபட்ச கூலியின் வாங்குதிறன் 50 சதவிகிதமாக குறைந்துள்ளது.

குறைந்தபட்ச கூலியில் வாழ்க்கை நடத்த முடியாத போது, பிரேசிலியர்கள் உயிரோடு உலாவ என்ன செய்கின்றனர்? பிரேசில் சமூக பொருளாதார ஆய்வு நிறுவனம் இதுகுறித்து இவ்வாறு விவரிக்கிறது:

துருவால், ஒரு 40 வயதான ஏழை பிரேசிலியன். அவன் அதிகபட்சம் இன்னும் ஏழு, எட்டு ஆண்டுகள் வாழக்கூடும். அதுவே வடகிழக்கில் இருந்தால் இன்னும்

இரண்டு வருடங்கள் தாண்டினால் ஜாஸ்தி. அவன் நிமோனியா காய்ச்சலில் மருத்துவர்களோ, மருந்துகளோ இல்லாமல் சாகக்கூடும். கடைசியில் கல்லறை கூட கிடைக்காது! அவனுக்கு மகன் இருக்கும் பட்சத்தில், அவனும் அதிகம் படிக்காத நோஞ்சானாக, பார்வைக் கோளாறு உடையவனாக இருப்பான். அவன், தந்தை வயதுவரை கூட உயிர் வாழ மாட்டான். வேலை என்று ஒன்று இருந்தால், அதற்காக பல மணி நேரம் பயணம் செய்து கழிப்பான். வேலை கிடைக்காவிட்டால், குற்றவாளிகளாக, தெருப் பொறுக்கிகளாக அவர்கள் அவர்கள் மாறிவிடுவர். அவனது மகள் வேறு ஒரு தொழிலாளியைத் திருமணம் செய்து கொள்வாள். இளைய வயதிலேயே முதியவளாக காட்சியளிப்பாள். தனது ஊட்டச்சத்து குறைந்த, எலும்பும் தோலுமாக காட்சியளிக்கிற குழந்தைகளுக்காக, சலவைப் பெண்ணாக மாறுவாள்; அதிர்ஷ்டம் இருந்தால், ஏதோ ஒரு வீட்டில் வேலைக்காரியாய்! ஆனால் தன் குழந்தை களை பகல் நேரத்தில் எங்கு விடுவாள்? வீட்டில் ஆறிப்போன எஞ்சிய உணவுடன் பூட்டி வைத்தாலும், அவை வீட்டைவிட்டு நழுவி, காடு மேடுகளில் கவனிப்பாரற்று திரியும். பெரும் நகரங்களில் அவர்கள் சுலபமாக, சொற்ப காசுக்கு ஆசைப்பட்டு வாழ்க்கைக்கே ஆபத்தை தேடிக்கொள்ளும் பிக்பாக்கெட்டுகளாக, ஜேப்படி திருடர்களாக மாறிவிடுவர்.

துருவாலை நீங்கள் அச்சுற்று வட்டாரத்தில் ஏதாவது ஒரு ரயிலில் பார்க்கலாம். அவன் வெறும் ஒரு டீ-ஷர்ட் மட்டுமே அணிந்திருப்பான். கையில் ஒரு டின் இருக்கும். குப்பைத்தொட்டியில் இருந்து பொறுக்கிய பழைய சூட்கேசில் ஆறிப்போன உணவு இருக்கும். பக்கத்தில் இருப்பவர் என்ன பேசுகிறார் என்பதை அறியக் கூட முடியாத விதத்தில் தூங்கி வழிவான்.

அந்நாள், ஒரு மரச்சாமான் கடையில் அவன் வேலை செய்யும் முதல் நாளாகவோ, அல்லது ஒரு இரும்புப் பட்டறையில் வேலை செய்யும் கடைசி நாளாகவோ இருக்கும். அந்த அதிகாலை 5மணி வண்டியில் அவன் இன்னும் ஒருமணி நேரம் பயணம் செய்ய வேண்டி இருக்கும். பேருந்துப் பயணம் இன்னும் செலவு மிக்கது. அவனை விழித்தெழவைக்கக் கூடிய சக்தி ஆலைச்சங்கிற்கு மட்டும்தான் உண்டு. ஐந்துநிமிடம் தாமதமானால் கூட கூலி வெட்டப்படும். படிக்கத் தெரியாதவனாக இருப்பததால், அருகில் இருப்பவர் வைத்திருக்கும் செய்தித்தாளில் குறைந்தபட்ச கூலி உயர்வு பற்றிய செய்தியை அவனால் தெரிந்துகொள்ள முடியாது.

ஆனால் குறைந்தபட்ச கூலியைப்பற்றி அறிந்திருந் தால் மட்டும் என்ன பிரமாதமான மாற்றம் ஏற்பட்டு விடப்போகிறது? எப்படி இருந்தாலும் அவனது குடும்பத்திற்கு அது போதாது. வாடகை, பால், மின்சக்தி கட்டணம் என்று எல்லாவற்றின் விலையும் ஏறிக்கொண்டுதான் இருக்கும் என்பதையும் அவன் அறிவான். ஒருநாள் அவன் மனைவியும் குழந்தைகளும் குப்பைத்தொட்டியில் உள்ள உணவைப் பொறுக்க அலைய நேரிடும். அந்த குப்பைத்தொட்டி உணவு கூட நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வருவதை அவன் உணர்ந்துள்ளான். உதாரணமாக ரியோ நகரில் 1970 இல் ஒரு கியூபிக் மீட்டருக்கு 43.8 சதவிகிதமாக இருந்த இந்த 'சாப்பிடும்' பொருட்கள், 1980 இல் 36.7 சதவிகிதமாக குறைந்துள்ளன.

துருவால் மிகவும் துன்பகரமான மனிதனாக தன்னைக் கருதிக்கொண்டாலும், தற்கொலை செய்து கொள்ள அவன் எண்ணியதே இல்லை. வேறு நகரத் திற்குப் போக அவன் எண்ணியதுண்டு. பிற நகரங் களிலும் மக்கள் குப்பைத்தொட்டிக்கு அடித்துக்

கொண்டிருப்பதை அவன் அறியான். தெருப்பன்றி களுக்குக்கூட ஒத்துக்கொள்ளாத அவ்வுணவிற்கு உன்னைப் பிடி, என்னைப்பிடி என்று சண்டை நடக்கும். எப்படி யானாலும் வயிற்றில் உள்ள வெற்றிடத்தை அது நிரப்பும் அல்லவா?

அக் குப்பைத்தொட்டிகளில் வேறு பல உபயோகமான பொருட்களும் சமயங்களில் கிடைக்கும். அதை விற்று அவர்கள் காசு சம்பாதிக்கலாம். இப்படி வாழ்க்கையை ஓட்டுபவர்கள், அவமானத்திற்கு அப்பாற்பட்டு செயல் படுகின்றனர். அதற்குக் கீழே உள்ள ஒரே வழி குற்றம் புரிவதுதான். இப்பொழுது, மற்றவர் தூக்கியெறியும் பொருளில்தானே வாழ்க்கை நடத்துகின்றனர்!

திறந்தவெளி சந்தை நாள், அவர்களுக்கு பண்டிகை தினம். அந்நாளின் இறுதியில் மிஞ்சியிருப்பவை அவர் களுக்கு விருந்துதான்.

11 மணி. துருவாலின் ஆலைச் சங்கு மதிய உணவிற் காக ஒலிக்கிறது. ஒருமணி நேரத்திற்குள் அவன் கொண்டு வந்த ஆறி அவலாய் போன சாப்பாட்டை சாப்பிட்டு விட்டு வேலைக்குத் திரும்ப வேண்டும். அப்பொழுது அவன் கண்முன்னால் பலர் காரில் போய்க் கொண்டு இருப்பர்—அல்லது கால்பந்தை தெருவோரம் உதைத்துக் கொண்டு சென்று கொண்டிருப்பர். சக தொழிலாளி களின் மதிய உணவுத் தூக்கிலும் ஒரே மாதிரியான—சாதம், பீன்ஸ் அல்லது மக்ரோனி — உணவுதான் இருக்கும். பிரேசிலியர்களுக்கு எப்படி சாப்பிடுவது என்று தெரியாததால், அவர்கள் எப்போதும் பசியோடு இருக்கிறார்கள் என்ற ஒரு கட்டுக்கதை உண்டு. வெறும் இந்த உணவை மட்டும் (முட்டை அல்லது இறைச்சி இல்லாமல்) சாப்பிட்டால், 1 கிலோ சாதம், 3 கிலோ பீன்ஸ், 2 கிலோ மக்ரோனியாவது சாப்பிட வேண்டும்

என்று ஊட்டச்சத்து நிபுணர்கள் கூறுகின்றனர். ஆனால் பிரேசிலின் தென் நகரங்களில் யாரும் இப்படி சாப்பிடுவது கிடையாது. ஆகவே, இரண்டு ஏழைகளில் ஒருவர் ஊட்டச்சத்து குறைவால் அவதிப்படுவதில் வியப்பில்லை.

களைத்துப் போய் வேலையில் இருந்து திரும்பும் துருவால், உடலை கழுவக்கூட முடியாத நிலையில் உள்ளார். காய்ந்த ரொட்டியும், சுடவைத்த காப்பியும் தொண்டையை நனைக்கும். வாங்கி வந்த ஒரே ஒரு சிகரெட்டுடன் குடிசை வாசலில் உட்கார்ந்து கொண்டு, நாளை குழந்தைகளுக்கு என்ன நடக்கும் என்ற கவலைக்குள் மூழ்கி விடுவான். அவனுக்கு நம்பிக்கை அறவே அற்றுப் போய்விடுகிறது. அவனது மூத்த மகள் தெருவில் இருந்து வருகிறாள். அவள் நாள் முழுவதும் வேலை தேடி அலைந்து எதுவும் கிடைக்காமல் துவண்டு போய் வருகிறாள். 16 வயதான அவள், பள்ளிக்குள் எட்டிப் பார்த்தது ஒரு வருடம் மட்டுமே! அவளது பெயரைக்கூட அவளுக்கு எழுதப் படிக்கத் தெரியாது. அவளுக்கு வேலை எதுவும் கிடையாது. கிடைத்தால் கூலி வேலை கிடைக்கும். அவளது காலில் கிடக்கும் பிளாஸ்டிக் செருப்புகூட, குப்பைத் தொட்டியில் பொறுக்கியதாக இருக்கலாம். பிற ஏழைப் பெற்றோரின் பெண்களைப் போல, தனது மகளும் உடலை விற்று பிழைக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகி விடுவாளோ என்ற கவலை துருவாலின் மனதை அலைக்கழித்தது. காலையில் தங்களது மகள்களை சிவப்பு விளக்கு பகுதியில் விட்டுவிட்டு மாலையில் போய் அழைத்துவரும் (பள்ளிக்கு அனுப்புவது போல) பெற்றோர்கள் பலரை துருவால் அறிவான். அவ்வெண்ணமே அவனைப் பிடுங்கித் தின்றது.

அழுக்குப் படிந்த கவுச்சி நாற்றம் அடிக்க, அவனது மூன்று புதல்வர்களும் ஒருவர் பின் ஒருவராக வீட்டிற்குள்

நுழைந்தனர். நாளெல்லாம் ஒவ்வொரு வீட்டுக் கதவைத் தட்டி, பணம், உணவு, உடை என்று எடுத்த பிச்சை ஒரு முடிவுக்கு வந்துவிட்டது; அல்லது போக்குவரத்து சந்திப்புகளில் வாகன ஓட்டிகளிடம் தின்பண்டங்கள் விற்பனை அல்லது சகவயதுப் பையன்களுடன் சேர்ந்து சிறு திருட்டுகள்! யாரும் பள்ளிப் பக்கம்கூட எட்டிப் பார்க்கவில்லை. பொதுப் பள்ளிகளில் இடம் கிடைக்க வில்லை. கிடைத்தாலும் மூன்று பேரை படிக்க வைப்பது கட்டுப்படியாகாது. பள்ளிச் செலவுகள் போக, அவர்களது சம்பாத்தியத்தையும் இழக்கவேண்டி வரும்!

தின்பண்டங்கள் விற்று சம்பாதித்த பணத்தில், புதிய ரொட்டி ஒன்றை வாங்கி வந்தான் 13 வயதான மூத்த பையன். அதன் வாசனை அவனை சுண்டியிழுத்தது. கட்டுப்படுத்திக் கொண்டான். அது குழந்தைகளுக்கு. இளைய புத்திரர்கள் இருவரும், அட்டைப் பெட்டிகளை பொறுக்கி வந்திருந்தனர். அதை சனிக்கிழமை எடைக்குப் போட்டு விடலாம். அந்த பழைய அட்டைப் பெட்டி களைக் கூட வெளியே வைக்க முடியாது. ஏழ்மை அந்த அளவு தலைவிரித்தாடியது. அவனது மனைவி அன்று நரி முகத்தில் விழித்திருக்க வேண்டும்! குப்பையில் கிடைத்த சில உலோகப் பொருட்களை விற்றதில் ஒரு துண்டு எலும்பு கிடைத்தது. அதை அவள் சமைத்துக் கொண்டிருந்தாள்.

அவர்கள் அந்த உணவைத் தாங்களாகவே எடுத்துக் கொண்டு ஒவ்வொரு மூலையில் அமர்ந்து, தனது இயற்கையான, அடிப்படையான, வலிமையான உணர்வான பசியாறுதலைச் செய்யும் குகை மனிதர்கள் போல, யாருடனும், எதுவும் பேசாமல் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்.

ஏன் ஏகப்பட்ட துருவால்கள்? உள்ளூர் சந்தைகளுக் காக உற்பத்தி செய்து கொண்டிருந்த பிரேசில்

தொழிற்சாலைகள் இறங்குமுகமாக உள்ளன. ஏனெனில் எதையும் வாங்க யாரிடமும் காசு கிடையாது. உலக வங்கியின் கணிப்புபடி, பிரேசிலில் உண்மை ஊதியம் 1984க்கும் 1978க்கும் இடையே 40 சதவிகிதம் வீழ்ச்சி அடைந்துள்ளது.

அங்கு கிராமப்புற மக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் சுருங்கி வருகிறது. கிராமப்புறங்களில் இருந்து நகர்ப்புறங்களுக்கு இடம்பெயர்தல், உலகிலேயே லத்தீன் அமெரிக்காவிலேதான் அதிகம். பிரேசில், கொலம்பியா ஆகிய நாடுகளில் 1970களில் 4 சதவிகிதத்துக்கு அதிகமானோர் வருடந்தோறும் நகரை நோக்கி படையெடுத்துக் கொண்டிருந்தனர். மெக்சிகோ, பெரு, வெனிசுலா ஆகிய நாடுகளில் இது 3 சதவிகிதம். அர்ஜென்டினா, சிலி, உருகுவே, வெனிசுலா ஆகிய நாடுகளில் இன்று கிராமப்புறங்களில் 20 சதவிகிதம் மக்களே வசிக்கின்றனர்.

கிராமப்புறங்களும் ஒன்றும் பெரிதாக வாழ்ந்து விடவில்லை. அங்கு தங்கியிருந்த, மிஞ்சியிருந்தவர்களிடம் நிலமெதுவும் இருக்கவில்லை. நிலமற்ற தன்மைதான் லத்தீன் அமெரிக்காவின் கிராமப்புற ஏழ்மைக்கு முக்கிய காரணம் என்கிறது சர்வதேச தொழிலாளர்கள் அமைப்பு. பல வருடத் தொடர்ச்சியான இடப்பெயர்ச்சிக்குப் பிறகும், லத்தீன் அமெரிக்க கிராமப்புறங்களில் 'நெரிசல்' இருந்து கொண்டுதான் இருந்தது. பெரும் நிலப் பகுதிகள் ஒரு சிலரின் கைகளில் இருந்தன. அவற்றில் கூலி வேலைக்குப் போனதால், வாயை மூடிக் கொண்டு, கொடுத்ததை வாங்கிக் கொண்டு, அவர்கள் வர நேர்ந்தது. சர்வதேச தொழிலாளர் அமைப்புக் குழு இவ்வாறு கூறுகிறது:

லத்தீன் அமெரிக்க கிராமப்புறங்களில் காணப்பட்ட முழுமையான ஏழ்மை, 1980 களில் உச்சத்தை

அடைந்தது. அக்காலகட்டத்தில் கொலம்பியா, ஹோண்டுராஸ் மற்றும் பனாமாவைத் தவிர்த்து, பிற நாடுகள் அனைத்திலும், உண்மையான வேளாண்மைக் கூலி கடுமையாக சரிந்திருந்தது. உதாரணமாக மெக்சிகோவில், 1965க்கும் 1980க்கும் இடையே உயர்ந்த கூலி, 1980 களின் துவக்கத்தில் வேகமாக சரிந்து 1965 மட்டத்திற்கு வந்துவிட்டது.

பிரேசிலின் அதிகாரபூர்வமான வேலையில்லாதவர் எண்ணிக்கை 6 முதல் 8 சதவிகிதம் வரை இருந்தது. தனிப்பட்ட பொருளாதார வல்லுனர்கள் இது 17—20 சதவிகிதம் வரை இருக்கும் என அபிப்பிராயப் பட்டனர். வட்டியைக் கட்ட முடியாமல் தவித்ததைத் தொடர்ந்து 1983 செப்டம்பரில் பிரேசில் சர்வதேச நிதிநிறுவனத்தின் காலில் விழுந்தது. நிதிநிறுவனம் உடனேயே பஜனையை ஆரம்பித்து விட்டது. சிக்கன நடவடிக்கைகள் தலை தூக்கின. அதைப் பாராட்டி 11 மில்லியன் டாலர் பல வழிகளில் புதிய கடனாக கிடைத்தது. மறுநாளில் சாபாலோ நகரில் மட்டும் 16 சூப்பர் மார்க்கெட்டுகள் சூறையாடப்பட்டன. அக்டோபர் மத்தியவாக்கில் நாடெங்கும் மொத்தம் 125 சூப்பர் மார்க்கெட்டுகள், கிடங்குகள், கடைகள் சூறையாடப்பட்டன. ரியோவில் கைது செய்யப்பட்ட 19 வயது சிறுவன் ஒருவன் ''நான் எதற்காகவும் மன்னிப்பு கேட்கப் போவதில்லை'' என்று கூறினான். ''எனக்கு வேலை கிடையாது. எவரும் என் பிரச்சனையை தீர்க்க முயலப் போவதில்லை. போராட இதுதான் ஒரே வழி. பிரேசில் வெடித்துக் கிளம்பும் என்று அதிகாரிகளுக்குக் காட்ட இது ஒன்றுதான் வழி'' என்று அவன் மேலும் கூறினான்.

பிரேசில் அப்படி ஒன்றும் வெடித்துக் கிளம்பீ விடவில்லை. மாறாக வங்கியாளர்கள் நாட்டு நிலைமை

குறித்து திருப்தியாகத்தான் இருந்தனர். 'பாங்கர்' பத்திரிகை 1984 ஜுலையில் வெளியிட்ட ஒரு கட்டுரையில்—

கடந்த மூன்று வருடங்களாக, நாட்டின் தொழிற்துறை நலிவடைந்து ஆயிரக்கணக்கானோர் வீட்டுக்கு அனுப்பப்பட்டு, பல ஆண்டுகால உழைப்பின் பயனால் உயர்த்தப்பட்ட வாழ்க்கைத்தரம் சுத்தமாக துடைத்தெறியப்பட்ட போதும், பிரேசியில் புரட்சி ஒன்றும் வந்துவிடாது. 1983இல் நடந்த சூப்பர் மார்க்கெட் சூறையாடல்களை விட, ஒரு புறம் கம்பீரமாக கோலோச்சிக் கொண்டிருக்கும் குற்ற சாம்ராஜயம்தான் புதிய சிகரங்களைத் தொட்டுக் கொண்டு இருக்கிறது. மிஞ்சிப் போனால் கடைக்காரர் களும், வர்த்தகர்களும் பயந்து போய், ஆயுதக் காவலாளிகளை நியமித்துக் கொள்வார்கள்... ஆனால் இது சமுதாயக் குமுறலுக்கான அறிகுறியல்ல.

பணக்காரர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க ஒரு வழி கண்டுபிடித்துள்ளனர். அதாவது, தங்களை ஏழைகளிடம் இருந்து பாதுகாக்க, ஏழை களையே பாதுகாவலர்களாக நியமித்துக் கொள்வது. எப்படி கதை? தொடர்ந்து எட்டாவது வருடம் கீழிறங்குமுகமாக இருக்கும் வெனிசுலாவின் பொரு ளாதாரம் (1986 வரை செலவுத் திட்டத்தில் 33.9 சதவிகிதம் கடன் தவணைக்காக ஒதுக்கப்பட்டது!) மக்களை சுயதொழில்காரர்களாக ஆக்கியுள்ளது. இன்று வெனிசுலாவில் அதிர்ஷ்டசாலிகள், லாட்டரி டிக்கட் விற்றுக்கொண்டு திரிகின்றனர்!

1976 மார்ச்சில் அதிகாரத்தை கைப்பற்றிய ராணுவக் கும்பலின் தலைமையில், அர்ஜென்டினா சர்வதேச நிதிநிறுவனத்தின் கீழ்படிதலுள்ள மாணாக்க

னாக இருந்தது. உடனடியாக 290 மில்லியன் டாலர் கடன் கொடுக்கப்பட்டது. வங்கிகள் கடன் கொடுக்க, லுங்கியை மடித்து கட்டிக்கொண்டு தயாராக இருந்தன. வழக்கம் போல, நிதிநிறுவனம், பொதுச் செலவுகளை குறைக்க நிர்பந்தித்தது. 1,00,000 முதல் 2,00,000 பேர், 'நாளை முதல் நீ வேலைக்கு வர வேண்டாம்' என்று கூறி வீட்டிற்கு அனுப்பப்பட்டனர். இது வெறும் ஆரம்பம்தான்! பல நிறுவனங்கள் காதும் காதும் வைத்தாற் போல தனியார் மயப்படுத்தபட்டன. தீவிர வலது சாரி அமைப்புகள்கூட, 'நாட்டை அந்நிய மூலதனத்திற்கு விற்றுவிட்டார்கள்' என்று கூச்சல் போட்டன. இப்படி கைக்கு வந்த பணம், பொதுத் துறையிலோ, தொழிற்துறையிலோ மறுமுதலீடு செய்யப் படவில்லை. 1983இல், அதிபர் ராகுல அலபோன்சின் ஜெனரல்களிடம் இருந்து ஆட்சியைப் பிடித்ததும், அர்ஜென்டினப் பொருளாதரரம் மூச்சு முட்டிக் கொண்டிருந்த நிலையை எதிர்கொள்ள வேண்டி இருந்தது.

லத்தீன் அமெரிக்காவிலேயே மிகப் பயங்கரமான கடன் சேற்றில் காலை விட்டுக்கொண்டு தவித்த நாடு அர்ஜென்டினாதான் என்கிறார் அந்நாட்டு பொருளாதர வல்லுனர் மிகுலே டு பால்.

பிரேசில், மெக்சிகோ கதையிலாவது, வருவாய் பங்கு பிரிப்பு மிகவும் மோசமாக இருந்தாலும், பல பிரம்மாண்ட திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அர்ஜென்டினாவில், கடனோடு, தொழில் முடக்கம், உற்பத்தி சிதைவு, வேலையில்லா திண்டாட்டம் ஆகியவையும் விலை கொடுத்து வாங்கப்பட்டன. தொழில் உற்பத்தி அதள பாதாளத்தை எட்டியது. சாலைகள், பள்ளிகள், மருத்துவமனைகள் போன்றவை புதுப்பிக்க; சீரமைக்கப் படவேயில்லை

ராணுவக் கும்பல், மிகத் தாராளமாக திறந்து விடப்பட்ட சுதந்திரச் சந்தைக் கொள்கையை காட்டி, அந்நிய மூலதனத்தையும் நாட்டின் உள்ளே இழுத்தனர். தனியார், பொது நிறுவனங்கள், வெளிநாட்டு கடன் வாங்க ஊக்குவிக்கப்பட்டன. பொருளாதார வல்லுனர் டுமால், தங்களது சொந்த மத்திய அலுவலகத்தில் இருந்து சுமார் 7 மில்லியன் டாலர் அளவு கடன் வாங்கிய 106 பன்னாட்டு நிறுவனங்களை தொகுத்து வைத்துள்ளார். மக்கள் சுதந்திரமாக 'பெசோ'களை கொடுத்துவிட்டு டாலர்களைப் பெற்று, உபயோகமற்ற நுகர்பொருட்களை வாங்கிக் குவித்தனர். ஜெனரல்கள் ராணுவப் பொம்மைகளை வாங்கி அழகு பார்த்துக் கொண்டிருந்தனர். 'சூடான பணத்'தை வைத்து அனைவரும் சூதாடிக் கொண்டிருந்தனர்.

'சூடான பணச்' சூதாட்டம் எப்படி நடைபெற்றது. தெரியுமா? உதாரணமாக உங்களிடம் 1 மில்லியன் டாலர் இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். 1980 ஆகஸ்டில், நீங்கள் அதை மாற்றினால் 1350 மில்லியன் பெசோக்கள் கிடைக்கும். அதை அர்ஜென்டினா வங்கி ஒன்றில் 70சதவிகிதம் வட்டிக்கு போட்டால், மறுமாதம் 1444.5 பெசோக்கள் திரும்பக் கிடைக்கும். அதை மறுபடி டாலராக 1440பெசோக்கள் என்ற விகிதத்தில் (அது பணம் போடும் முன்பு உத்திரவாதம் அளிக்கப்பட்ட விகிதம்) மாற்றினால் உங்களிடம் 1031786 டாலர்கள் இருக்கும். இது மாதத்திற்கு 3.2சதவிகிதம் லாபம். அதாவது வருடத்திற்கு 46 சதவிகிதம்! அதனால், அர்ஜென்டினா மற்றும் அந்நிய சூதாட்டக்காரர்கள் (அல்லது வியாபாரிகள்!) தங்களது நிறுவனத்தின் சொத்துக்களை விற்று இந்த விளையாட்டில் போட்டனர். வந்த வரும்படிகள் சுவிட்சர்லாந்து மற்றும் கேமன் தீவுகளை தஞ்சமடைந்தன.

இப்படி பெரிய அளவில், உற்பத்தித்திறன், காசாக மாற்றப்பட்டதால், வேலை இழந்த லட்சக்கணக் கானோர், சுயதொழிலில் குதித்தனர்.

பாவம் அதிபர் அல்போன்சின்! பதவிக்கு வந்ததும், வருட வரவு செலவில் 67 சதவிகிதத்தை கடன் தவணைக்கு அளித்துக் கொண்டிருந்ததை அவரால், இப்போக்கை மாற்றியமைக்க முடியவில்லை. 1983க்கும் 1985க்கும் இடையே வேலையின்மை 58 சதவிகிதம் உயர்ந்தது. போனஸ் அயர்ஸ் நகரில் மட்டும் மொத்த தொழிலாளர்களில் 11 சதவிகிதம் வேலையில்லாமல் இருந்தனர்.

சீருடையில் இருந்த கொலைகாரர்கள் மற்றும் கொள்ளைக்காரர்களுக்கு, சூதாடி நாட்டை முச்சந்தியில் நிறுத்த, மில்லியன் கணக்கில் பணம் கொடுத்த சர்வதேச சமுதாயம் இதற்காக வெட்கப்படவில்லை. அந்த கொடுங்கோலர்கள் தங்கள் ஆட்சிக் காலத்தில் செய்தது எல்லாம் ஒரு புதிய 'பெயர்ச் சொல்லை' கண்டு பிடித்தது தான். அதுதான் ''மாயமாய் மறைதல்!'' எவனாவது எதிர்த்தால் அவன் 'மாயமாய் மறைந்து' விடுவான்! அவர்கள் இப்படி ஆயிரக்கணக்கானோரை, லட்சக்கணக் கானோரை, 'மாயமாய் மறைந்துக்' கொண்டிருந்த போது, சர்வதேச சமுதாயம் மில்லியன்களை வாரி இறைத்துக் கொண்டு இருந்தது—மனசாட்சி உறுத்தல்கள் இல்லாமல். எந்த ஒரு பொருளாதார மாணவனைக் கேட்டாலும் கொடுக்கப்படும் பணம் பட்டம் விடத்தான் பயன்படுத்தப் படுகிறது என்பதைத் துல்லியமாகக் கூறுவான். இந்த சட்டத்திற்கு புறம்பான கடன் (இன்று 54 மில்லியன் டாலர்கள்) மீதான வட்டியை கொடுக்க மறுக்க சரியான நேரம் இது தான்!

## மீண்டும் நிதிநிபுணர்களின் செல்வாக்கு

சிலியில் 1973 இல் வலதுசாரி ராணுவம் ஆட்சியை கைப்பற்றியதும், நிதிப் பொருளாதாரக் கொள்கை புதிய

ஏற்பாட்டின் நிலையை அடைந்தது. 'சிகாகோ பையன்' கள் இதற்கு பொறுப்பேற்றுக் கொண்டனர் (பெரும் பாலோர் சிகாகோ பல்கலைக் கழகத்தில் பயிற்றுவிக்க பட்டவர்கள்!) வேறு எந்த நாட்டிலும் இல்லாத வகையில் தங்களது பொருளாதாரக் கொள்கைகளை நடைமுறைப் படுத்த, சிலியில் தங்கு தடையற்ற வாய்ப்பு கொடுக்கப் பட்டது.

முதலில் அவர்களது கொள்கைகள் வேலை செய்வது போலத் தோன்றியது. அதிகமான வளர்ச்சி விகிதம் ஏற்பட்டவுடன் சிகாகோ பையன்களுக்கு புகழாரம் சூட்டப்பட்டது. ஆனால் அது போலியானது. அதனால் பயனடைந்தவர்கள் மேல்மட்ட மக்களே. அதிக மதிப்பு நிர்ணயிக்கப்பட்ட பெசோக்களைக் கொண்டு, மலிவாக வாங்கப்பட்ட ஆடம்பர நுகர்பொருட்களைக் கொண்டு திருப்திப்பட்டுக் கொண்டது அவ்வட்டம். 1977க்கும் 1981க்கும் இடைபட்ட 'செழிப்பான' வருடங்களில், தனியார் நுகர்வு வருடத்திற்கு 10 சதவிகிதம் உயர்ந்தது. கார்கள், தொலைக்காட்சி பெட்டிகள், வீட்டு வசதி சாதனங்கள் போன்றவற்றின் விற்பனை அமோகமாக இருந்தது.

இந்த கொழிப்பு, சில சமயங்களில் ஏழைகளுக்கும் சிந்திச் சிதறியது. கிட்டத்தட்ட அனைவருக்கும், குறைந்தபட்சம் நகர்புறத்தில் வசித்தவர்களுக்காவது (நாட்டின் மக்கள் தொகையில் 80 சதவிகிதம் நகரங்களில் வசிக்கின்றனர்!) குழாய் குடிநீர் கிடைத்தது; உண்மை ஊதியம் மூன்றில் ஒரு பங்கு உயர்ந்தது. குழந்தை இறப்பு விகிதம் பெருமளவிற்கு குறைந்தது; முதியோர் வயது வரம்பு அதிகரித்தது.

துரதிருஷ்டவசமாக, அதே கால கட்டத்தில், அரசின் கணிப்பின்படியே. 30 சதவிகிதம் சிலிக் குடும்பங்கள்

ஆனால் அதைத் தீவிரப்படுத்திய பெருமை கண்டிப்பாக கடன் நெருக்கடியையே சாரும். மத்தியதர வர்க்கம், கீழ்வர்க்கம் நோக்கியும், ஏழைகள் அதள பாதாளத்தை நோக்கியும் வேகமாக சறுக்கிக் கொண்டு இருந்தார்கள்.

இதை அரசு கையைக் கட்டிக் கொண்டு வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தது. அதற்கு அதன் அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ள வேண்டிய கவலையே சரியாக இருந்தது. நேரம் கிடைத்தபோது, அது செய்த ஒரே காரியம், மக்களின் பொது நலனுக்கான, சமுதாய அக்கறையுடன் கூடிய முயற்சிகளை இரும்பு கரம் கொண்டு அடக்கியது மட்டுமே!

## அதிபயங்கர தொடர்பு

லத்தீன் அமெரிக்கா முழுவதுமே, வேலைவாய்ப்பு சுருங்கி வருவதை சுலபமாக புரிந்து கொள்ளலாம். ஏனெனில் இந்த நாடுகள் அனைத்திற்கும் ஒரே மாதிரியான வியாதிதான் இருந்தது. அதோடு கடனைத் தள்ளிப் போடும் செயலும், அநநாடுகளின் சுமையைக் கூட்டிவிடும். நாம் ஏற்கனவே துருவாலின் குழந்தைகளுக்கு என்ன எதிர்காலம் இருக்கிறது என்பதைப் பார்த்தோம். கடன் அதை இன்னும் விரைவாக, இன்னும் வலியோடு முடிந்து வைத்துவிடும்.

குழந்தைகள் இறப்பு விகிதம் அதிகரித்து வருவதை ஐ. நா. புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. அது மூன்றாம் உலகெங்கும் அதிகரித்து வருகிறது என்பது என் கணிப்பு. இது உறுதி செய்யப்பட்டால், அது உண்மையிலேயே ஒரு பயங்கரமான போக்காக இருக்கும். அதன் விளைவுகள், குழந்தைகளை இழக்கும் பெற்றோரின் தனிப்பட்ட துக்கத்தை மீறிய ஒன்றாக இருக்கும். நிலைமை இப்படி இருந்தால், நாம் அதற்காக,

மேற்கத்திய கொள்கை வகுப்பாளர்கள், சர்வதேச அமைப்புகளின் செயலகங்கள், வங்கியாளர்கள் ஆகியோரைச் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. பல ஆண்டு காலமாக சிரமப்பட்டு அடைந்துள்ள முன்னேற்றத்தை, அவர்கள் பின்னால் தள்ளிவிட வேண்டுமென்றே செய்யும் முயற்சியாக இது இருக்கக் கூடுமோ?

கிடைக்கும் சான்றுகள் ஒரே திசையை நோக்கி கையைச் சுட்டிக்காட்டுகின்றன. பிரேசிலிய ஆய்வாளர் ஒருவர், சாபாலோ பகுதியில், 1983 வரை குறைந்து கொண்டு வந்த குழந்தை இறப்பு விகிதம், திடீரென்று கூடத் துவங்கியதாக தெரிவிக்கிறார். 1984 இல் அது அதிகரித்ததற்கு பரவலாகப் பரவிய சிற்றம்மை நோய் காரணமாகும். அது முன்பை விட பலகீனமாக இருந்த குழந்தைகளை உடனடியாக பாதித்து விட்டது. 1975க்கும் 1985க்கும் இடையே ரத்தசோகை நோயும் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளிடம் அதிகரித்துள்ளது. ரத்தசோகை நோய் வந்தால் அழையா விருந்தினராக காய்ச்சலும் மற்றும் பிற நோய்களும் உடனே வந்து விடும்.

சமூகவியலாளர்களான ராலப் செல்லும், ஸ்டீவன் குனிட்சும் கடனுக்கும், இறப்பிற்கும் இடையே உள்ள உறவு பற்றி மிக ஆழமான கணித முறையிலான ஆய்வு ஒன்றை மேற்கொண்டு, அதே முடிவுக்கு வந்துள்ளனர். ஒரு நாடு உலகச் சந்தையில் அதிகமாக பங்கேற்கும் போது, (வாங்கிய கடன்தான் அளவுகோல்), முதியோர் இறப்பு வயது அதிகரிப்பு மிக மெதுவாக உள்ளது என்கின்றனர் அவர்கள்.

மிக அதிக கடன்பட்ட லத்தீன் அமெரிக்க கண்டத்தில் இது மிகவும் வெளிப்படையாகவே

தெரிகிறது. அவர்கள் இதை தெளிவாக கணக்குப் போட்டு வைத்துள்ளனர். நாம் கட்டிய அதிகப்படியான ஒவ்வொரு 10 டாலர் (தலைக்கு) வட்டிக்கும், கடந்த 10 வருடங்களில் (1970—80) ஒருவரின் வாழ்நாளில் 0.39 பகுதி குறைந்து விட்டது என்பது அவர்கள் கணக்கு.

கடந்த வருடத்தில் அப்படி என்னதான் சாதித்து விட்டோம். நிதி பூசாரிகளும், வங்கியாளர்களும் உங்களை, உங்களது பெற்றோரை அல்லது உங்களது குழந்தைகளை ஏமாற்ற நீங்கள் அனுமதிக்கப் போகிறீர்களா? இதுதான் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு கடன் கொண்டு வந்த சீதனமாகும்!

## நீங்கள் என்ன சாப்பிடவில்லையோ அப்படித்தான் இருப்பீர்கள்!

ஷெல் மற்றும் குனிட்ஸ் மேற்கொண்டதைப் போன்ற பிரம்மாண்டமான ஆய்வுகள் மிகவும் அரிதானவை. அதுபோல இல்லாவிட்டாலும் சிறிய அளவில், ஒரு நாட்டிற்கு அல்லது ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தினருக்கு என்று பல ஆய்வுகள் இன்று நடத்தப்பட்டு வருகின்றன.

1972க்கும், 1983க்கும் இடையே பெருவில் ஊட்டச்சத்து குறித்து நடத்தப்பட்ட ஆய்வு, 6 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளின் ஊட்டச்சத்து குறைவு அதிகரித்துள்ளதாக தெரிவிக்கிறது. லமாவின் ஏழ்மைப் பகுதிகளில் உள்ள ஊட்டச்சத்து குறைவாக உள்ள குழந்தைகளின் சதவிகிதம் 1972 இல் 24 ஆக இருந்தது, 1978 இல் 28 ஆகி, 1983 இல் 36ஐ அடைந்து விட்டது. அதாவது அக்குழந்தைகள் எப்பொழுதும் பசியோடு இருக்கின்றன என்பது மட்டுமே அதற்கு அர்த்தமல்ல. அவை இதன் தாக்கத்தை தங்கள் வாழ்க்கை முழுவதும் எடுத்துச் செல்லப் போகிறார்கள். இதை யுனிசெப்

மற்றும் ஆக்ஸ்பார்ம் அமைப்புகளுக்காக டாக்டர் ஜோசலின் பாய்டன் மேற்கொண்ட ஆய்வு உறுதிப் படுத்துகிறது ஒரு பெருவிய ஆராய்ச்சியாளர், பெருவில் உள்ள இரு குழந்தைகள் குழுவை (ஒன்று மத்தியதர வர்க்க தனியார் பள்ளியில் இருந்தும், மற்றொன்று குடிசைப் பகுதிகளை ஒட்டிய அரசுப் பள்ளியில் இருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டன) ஒப்பிட்டு பின்வருபவைகளை கண்டுபிடித்துள்ளனர்.

சமூகப் பொருளாதார அந்தஸ்திற்கும், குழந்தை களின் அறிவுக் கூர்மைக்கும் (இதற்கு மரபியல் காரணிகள் விளக்கம் கூற இயலாது!) ஒரு நேரடியான உறவு இருக்கிறது. குறைந்த வருவாயுடைய பகுதியில் இருந்து வரும் குழந்தைகளுக்கு அறிவைப் பெருக்கிக் கொள்வதி லும், கவனம் செலுத்துவதிலும் பிரச்சனை இருக்கிறது.

பெருவில் உலாவும் உணவு பற்றிய கதைகள் நான் வேறு எங்கும் கேள்விப்படாத ஒன்று. முதலாவது ஓட்டல்களின் பின்புறக் கதவு வழியாக ஏழைகளுக்கு விற்கப்படும் 'ஏழு ருசி' உணவாகும். (14 இட்லிக்கு பெயர் இதில் இருந்து பெறபடவில்லை). அது வேறு ஒன்றும் இல்லை. மிச்சம் மீதி எல்லாம் கலந்த அவியல்! அவ்வளவுதான்! மற்றொன்று 'நிகோவிட்டா' (இதை காட்பரீஸ் தயாரிக்கவில்லை!) இது கோழிகளை கொழிக்க வைக்க கொடுக்கப்படும் மீன் உணவு மாவாகும். (இது மிக மோசமான சுகாதாரச் சூழ்நிலைகளில் உற்பத்தி செய்யப்படுகிறது). இதில் நல்ல செய்தி என்னவென்றால், பல குடிசைப் பகுதி பெரு மக்கள் நிகோவிட்டாவை தின்று உயிர் வாழ்கின்றனர் என்பது. கெட்ட செய்தி என்னவென்றால், நிதி அமைச்சர் குறிப்பிடுவது போல், அதைத் தொடர்ந்து சாப்பிடக் கூட அவர்களுக்கு வசதியில்லை.

நிலைமை இப்படி இருக்கும் போது, பெருவின் மத்திய வங்கியின் ஆளுனராக இருந்த மானுவல் மொரேரா,

என் பள்ளியில் படிக்கும் 115 குழந்தைகளில் 98 குழந்தைகள் சரியான மனவளர்ச்சி இல்லாதவர்கள். இது குழந்தைப்பிராய ஊட்டச்சத்து குறைவால் ஏற்படுகின்றது. அக்குழந்தைகளின் கோளாறை, அவை ஆரம்பப் பள்ளிக்கு அனுப்பப்படும் வரை சரியாக கண்டு பிடிப்பது சுலபமல்ல. அவர்களை என்னிடம் அனுப்பும் போது காலம் கடந்து விடுகிறது.

அதே நகரில் வசிக்கும் ஒரு மருத்துவர், பிறக்கும் குழந்தைகளில் 5 சதவிகிதத்தினர், கடுமையான பிறவிக் கோளாறுகளுடன் பிறக்கின்றனர் என்று தெரிவிக்கிறார். காரணம்? கர்ப்பிணிகளின் ஊட்டச்சத்துக் குறைவு. 1000க்கு 35 என்ற அளவில் இருக்கும் கைக்குழந்தைகளின் சாவிற்கு காரணம் பசி.

ஆனால், அதே சமயம், அர்ஜென்டினா, தன் வரலாற்றிலேயே இல்லாத அளவில் மேலும் மேலும் உணவை ஏற்றுமதி செய்துகொண்டிருக்கிறது. எதற்காக? தனது 54 பில்லியன் கடனை அடைப்பதற்காக! ஆனால் அது அதிக மான்யம் அளிக்கப்பட்டு உற்பத்தி செய்யும் அமெரிக்க, ஐரோப்பிய கோதுமை ஏற்றுமதியோடு போட்டியிட வேண்டும். வேளாண் பொருட்களின் விலை 1986 இல், 1984 இல் உள்ளதைப் போலவே இருந்திருக்கு மானால், அர்ஜென்டினா, இன்னும் 2 மில்லியன் டாலரை அதிகமாக சம்பாதித்திருக்கும் என்று புலம்பியிருந்தார் நிதி அமைச்சர்.

அல்போன்சின் அரசு 'மக்களின் தியாகத்தை ரத்தமாக்கி கடனை அடைக்க மாட்டோம்' என்று முழங்கிய தேர்தல் வாக்குறுதியை காப்பாற்றத் தவறி விட்டது. ஒரு சுத்தமான கடனாளி நாடாக மாறி, கடனைத் திருப்பி கொடுத்துக் கொண்டு இருக்கிறது. தொழிற் சங்கங்களின் கூட்டமைப்பு, பல பொது வேலை

நிறுத்தங்களை ஏற்கனவே செயல்படுத்தியுள்ளது. அதனுடைய சுவரொட்டியில் ''போதும் பொய்கள்: வேலையின்மை, பசி, பட்டினி, சர்வதேச நிதி நிறுவனம்!'' என்ற கோஷம் முழங்கப்பட்டிருந்தது. ஆனால் எதிர் அணியில் கூட்டுறவு இல்லை. அதனால் சாதாரண அர்ஜென்டினன் தனது தியாகங்களை ரத்தமாக்கி கடனை அடைத்துக் கொண்டிருக்கிறான்.

## பிரேசிலுக்கு வெட்டு

இடிந்து நொறுங்கிய நிலையில் ஒரு குடிசை, பிரேசிலில் உள்ள போர்ட்டோ அலிகிரோவின் அருகில் உள்ள காய்பி நதிக்கரையை ஒட்டிய பாலத்திற்கு அருகே. ஒரு சமூக சேவகியை 5 குழந்தைகள் வரவேற்றனர் (மூத்ததிற்கு 8 வயது). பெற்றோர்கள் வழக்கம் போல குப்பை மேட்டில் பொறுக்கப் போய் இருந்தனர். அவர்களின் நிலையைக் கண்ட அச்சமூக சேவகி, அவர்கள் குடும்பத்தில் சாப்பிட்டனரா என்று கேட்டார். ''ஆம் மிஸ்! நேற்று அம்மா, பழைய செய்தித்தாள்களில் இருந்து கேக் செய்து தந்தார்!'' என்று பதிலளித்தன. 'என்ன? எதிலிருந்து கேக்?' என்று அவர் கேட்டதிற்கு ''அதுதான் மிஸ், அம்மா பழைய பத்திரிகைக் காகிதங் களை எடுத்து, ஒரு பந்தாகச் சுருட்டி நீரில் நனைப்பார். அது நன்றாக நனைந்து, மிருதுவாகியவுடன் அதை நன்றாக உருட்டி பிசைந்து சிறு சிறு கேக்குகளாக ஆக்குவார். நாங்கள் அவற்றை சாப்பிட்டுவிட்டு, நீரும் அருந்துவோம். நன்றாக இருக்கும். வயிறும் நிறைந்து விடும்'' என்றன.

இக்கதை, பிரேசில் லுத்தரன் தேவாலயத்தின் 'செய்தி மடலில்' வெளிவந்தது. இது அதிகாரபூர்வமான எண்ணற்ற புள்ளிவிபரங்களை விட அதிகமாகப் பேசுகிறது. ஆனாலும் புள்ளிவிபரங்கள் என்ன சொல்

எடுத்துக் கொண்டால், வாங்கின கடனைப் போல ஓரிரு மடங்கை எப்போதோ திருப்பி அளித்து விட்டோம். நாம் முதலாவது, உலகிற்குக் கொடுக்க நமது மக்களின் ரத்தத்தையும் வியர்வையையும் உறிஞ்சுவதை உடனடியாக யாக நிறுத்த வேண்டும்.

ஊசலாடும் இடைவெளி

பிரேசிலியர்கள் கடுமையாக கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களது அதிகார பூர்வமான புள்ளி விபர நிறுவனங்கள், அதைத் துல்லியமாக அறிந் திருப்பதை ஆறுதலாக எடுத்துக் கொள்ளலாமா? மெக்சி கோவில் ஒவ்வொரு முறை அரசு மாறும் போதும், ஆய்வு அதிகாரிகள் மற்றும் ஆய்வு முறைகளில் மாற்றம் கொண்டு வரப்படுவது நியதி. பாதி ஆராய்ச்சியில் மக்கள் வீட்டுக்கு அனுப்பப்பட்டு விடுவர். ஒருவருட ஆய்வை, மற்றொரு வருடத்தோடு ஒப்பிட முடியாது. அதோடு எடுத்துக் கொள்ளும் தேர்ந்தெடுப்புகளும் சரியாக பிரதிநிதப்படுத்தப் படுவதில்லை. 1980களின் முற்பகுதி யில், மெக்சிகோ உணவு அமைப்புத்திட்டம், மக்களின் உணவுப் பழக்கம், மற்றும் சத்துணவு குறித்து அற்புதமான ஆய்வை மேற்கொண்டிருந்தது. ஆனால் அதன் முடிவு வெளியாகும் முன்பே அது இழுத்து மூடப் பட்டு விட்டது. ஒரு உலக வங்கி அதிகாரி கூறியது போல (1986 இல்) 1983க்கும் அதற்கு பிறகுமான உடல்நல குறியீட்டு விபரங்கள் எதுவும் கிடைக்கவில்லை. அது 1985 பூமி அதிர்ச்சியில் இழந்து போய்விட்டது.

இருக்கும் தகவலை வைத்து கூட்டிக் கழித்து பார்த்தாலும் நிலைமை அவ்வளவு திருப்திகரமாக இல்லை. தேசிய சத்துணவு நிறுவனத்தின் கணிப்புபடி, மெக்சிகோ மக்கட் தொகையில் 40 சதவிகிதத்தினர் ஊட்டச்சத்து குறைவால் பாதிக்கப்பட்டு உள்ளனர். மெக்சிகோவில் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வு, நகரில் உள்ள குடும்பத்தில் பாதிக்கு மேற்பட்டவைகள்

புரோட்டின் மற்றும் கலோரி பற்றாக்குறைவால் அவதிப் படுகின்றன. இது 1984 இல் நடத்தப்பட்டது. அச்சமயம் பாதிக்கப் பட்டிருந்த மக்கள், மானிய விலையில் வழங்கப் பட்ட ஒரு வித மெக்சிகோ கேக், ரொட்டி, பீன்ஸ், கொழுப்பு நீக்கப்பட்ட பால், ஆகியவற்றை மட்டுமே பெரும்பாலும் உண்டு வந்தனர். 1986 இல் சர்வதேச நிதிநிறுவன (வேறு யாராக இருக்கும்?) திட்டத்தின் நிபந்தனையின் ஒரு பகுதியாக, இந்த மானியம் விலக்கிக் கொள்ளப்பட்டது. 1986 செப்டம்பரில் 12 பில்லியன் டாலர் புதுக்கடன் மெக்சிகோவிற்கு கிடைத்தவுடன், அந்த மெக்சிகோ கேக்கின் விலை ஒரே நாளில் ஒரு கிலோ 45 பெசோக்களில் இருந்து 80 பெசோக்களாக உயர்ந்தது. பிற அத்தியாவசியப் பொருட்களின் விலை 6 மாதத்திற்குள் 100 சதவிகிதம் உயர்ந்தது. இதை வேறு யாரும் சொல்லவில்லை; மெக்சிகோ வங்கிதான் கூறியது.

இந்த ரீதியில் விலைவாசி உயர்ந்தால், மக்கள் பட்டினி கிடப்பது ஒரு புறம் இருக்கட்டும், அது பொருளாதாரமே சுருங்கி விடவும் வழி வகுக்கும். டிலாக்ஸ்காலா என்ற ஊர் அருகே, மரியாவும் ஜோஸ்பினா மென்டிடாவும் அவர்களது தாயாரும் ஒரு சிறிய மதிய உணவுக் கடையை நடத்த வந்தனர். ஆடம் ஸ்மித்தின் புத்தகத்தை மேலெழுந்த வாரியாக படித்திருந் தால் கூட புரிந்து கொண்டிருக்கக்கூடிய விஷயங்களை, சர்வதேச நிதிநிறுவனத்தின் கொள்கை வகுப்பாளர் களுக்கு, அந்த மென்டிடா சகோதரிகள் விளக்குவர், இப்படி: எல்லாவிலையும் உயரும்போது, நாங்களும் எங்களது விலையைக் கூட்ட வேண்டியுள்ளது; அப்பொழுதுதான் மக்கள் வருவதை நிறுத்தத் தொடங்கு கின்றனர். சந்தைக்கு பொருட்களை எடுத்துவரும் விவசாயிகள் ஏராளமாக இங்கு வருவதுண்டு. இப்பொழுது யாரும் இங்கு தலையைக் கூட காட்டுவ தில்லை என்கிறார் மரியா!

நிதிநிறுவனத்தின் பிரதிநிதிகள் கடன் தவணை எங்கே என்று கேட்டுக் கொண்டிருந்தனர். பிரெஞ்சு பத்திரிகையான லிமாண்டே அச்சமயம் ஒரு கார்ட்டூன் படத்தை வெளியிட்டு இருந்தது. அதில் இரு நிதிநிறுவன அதிகாரிகள் ஒரு மெக்சிகோ வீட்டுக் கதவை தட்டிக் கொண்டு இருப்பர். அதற்கு பின்னால் நிறைய இடிபாடுகள் இருக்கும். அதில் ஒருவர் மற்றொருவரை 'இம்முறை இவன் என்ன சால்ஜாப்பு சொல்லப் போகிறான்?' என்று கேட்பார். அதே சமயம் மெக்சிகோவில் வெளியான ஒரு கார்ட்டூனில் நிதிநிறுவன முத்திரையுடன் வட்டமிட்டுக் கொண்டிருக்கும் ஒரு பருந்து, இடிபாடுகளுக்கு இடையேயிருந்து மெல்ல தலைதூக்கிக் கொண்டு இருக்கும் மெக்சிகர்களிடம் 'இப்பொழுது நலமா, மெக்சிகோ?' 'நாம் முடிக்கப் படாமல் இருக்கும் காரியம் இன்னும் பாக்கியிருக்கிறது என்பதை நினைவில் வைத்துக் கொள்' என்று கூறும்.

பாபிலோனிய விவசாயிக்கு புயற் கடவுளின் மீது என்ன கட்டுப்பாடு இருந்ததோ அதே அளவுதான் மெக்சிகோவிற்கு நிலநடுக்கத்தின் மீதும், எண்ணை விலை மீதும் கட்டுப்பாடு இருந்தது. இருந்தும் திடீரென்று எண்ணை விலை வீழ்ச்சியடைந்து மெக்சிகோவின் (அல்லது வெனிசுலாவின்) ஏற்றுமதி வருவாய் சுத்தமாக அடிபட்டுப் போனால், அதைக் காரணம் காட்டி கடன் தவணையை கட்டாமல் இருக்கக் கூடாது. நிதிநிறுவன மும், அடுத்தவன் அழுகையில் ஆனந்தப்படும் பிற நிதி அமைப்புகளும் இதில் இருந்து மீள வேறு வழி வைத்துள்ளன. அவர்களின் மருந்து? ஏற்றுமதியை அதிகரிக்க நாணய மதிப்பை குறை! ரொம்பச் சுலபம்!! என்ன, சரிதானே?

## ஏற்றுமதி மோகமும் வர்க்கபேத விரிவாக்கமும்

சமுதாயச் சேவைகளை கடுமையாகக் குறைக்க நிதிநிறுவனம் கூறும் கருத்தை ஏற்க மறுக்கும்

ஆய்வாளர்கள்கூட, ஏற்றுமதி விஷயத்தில் நிதிநிறுவனத்தின் பரிந்துரைகளை அப்படியே ஏற்றுக்கொள்கின்றனர். உதாரணமாக 'பொருளாதார சரிவின் சமுதாய விலைகள்' என்பது குறித்து ஆராய்ந்த உலக வங்கி, லத்தீன் அமெரிக்காவின் நிலைமை இன்னும் மோசமாகும்; ஏனெனில் மூலதனத்தின் வறட்சியும், அதனால் நாளுக்கு நாள் சீரழிந்து வரும் பள்ளி, மருத்துவமனைகளின் நிலையும் அதை சாத்தியமாக்கும் என்று அடித்துக் கூறுகிறது. ஏழை மக்களின் அடிப்படைச் சேவைகளை பூர்த்தி செய்வது மிகவும் முக்கியம் என்று ஆய்வறிக்கை மேலும் கூறுகிறது. ஆனால் இருப்பதை அப்படியே நிர்வகிப்பதே சிரமமாக இருக்கும்போது, அதை மேம்படுத்துவது என்பதெல்லாம் வெறும் கனவுதான். இதிலிருந்து நாம் கற்றுக் கொள்ளும் பாடம் என்ன? ஏழைகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு உத்திரவாதமான முறை, பொருளாதார வளர்ச்சியை மீண்டும் உறுதி செய்வதுதான்.

தற்போதைய 'விதிமுறை'களில் 'ஏற்றுமதியைப் பெருக்கு' என்ற புதிய கட்டளை செதுக்கப்பட்டிருக்கும் போது, ஏழைகள் மேலும் கீழிறங்கிப் போகாமல் பார்த்துக் கொள்வதே சிரமமாக இருக்கும் பட்சத்தில், எப்படி அவர்களை மேம்படுத்துவது? ஏழைகள், தங்களின் சமுதாயத்தில் மற்றவர்களுக்கு உபயோகமாக ஏதாவது செய்து கொடுத்துக் கொண்டிருந்தால்தான் அவர்களால் மேம்பாடு அடைய முடியும். ஏற்றுமதி விருத்தி, வளர்ச்சிக்கான பாதை என்று விவாதிப்போர், ஏற்றுமதி என்ன ஈட்டிக் கொடுக்கிறது என்றுதான் பார்க்கிறார்களே தவிர, அதற்கு என்ன விலை கொடுக்கப் படுகிறது என்று பார்ப்பதில்லை.

ஏற்றுமதிப் பொருட்கள் வேளாண்மை பொருட்களாக இருக்கும் பட்சத்தில், முதலில் அதற்கு கொடுக்கப்

படும் விலைநிலம்தான். கடன்பட்டுள்ள நாடுகளின் கோடிக்கணக்கான, பசியோடு இருக்கிற மக்களுக்கு உணவைப் பயிராக்குற நிலம் முதலில் போய்விடுகிறது. ஏனெனில், அது பொருளாதார ரீதியாக கட்டுப்படியாகிற விஷயமாக இருக்காது. உதாரணமாக, மெக்சிகோ பிரம்மாண்டமான அளவில் மாட்டிறைச்சிக்கான கால் நடை வளர்ப்பில் இறங்கியது. அதை மெக்சிகர்களால் வாங்கித் தின்ன முடியாததாகையால், அது முழுவதும் ஏற்றுமதிக்காக தயாரிக்கப்பட்டது. 1985க்கும் 1986க்கும் இடையே அமெரிக்காவிற்கான ஏற்றுமதி 577000 லிருந்து 1.2 மில்லியனாக உயர்ந்தது. ஆனால் விலை 100 டாலர் குறைந்ததால், மெக்சிகோ இந்த அதிக ஏற்றுமதியால் பயன் பெறவில்லை. அவை அமெரிக்க சந்தைகளில் அதிகப் பணத்தை ஈட்டுத்தந்ததோ இல்லையோ, அவை மேலும் மேலும் அதிக இடத்தை ஆக்கிரமித்துக் கொள்ளத் துவங்கின—அவற்றிற்கு தீவனப்பயிர் வளர்ப்பதன் மூலம்.

அமெரிக்கா என்றவுடன், அது ஒரு வேளாண்மை ஏற்றுமதி நாடு என்பதே பலருக்கும் நினைவு வரும். ஆனால் அதே சமயம், உலகிலேயே அதிகமான உணவை இறக்குமதி செய்யும் நாடாகவும் இருந்து வருகிறது. 1986 இல் மட்டும் அது 20.8 பில்லியன் டாலர் உணவை இறக்குமதி செய்தது. மெக்சிகோ இன்று அமெரிக்கா விற்கு உணவு ஏற்றுமதி செய்யும் நாடுகளில் முக்கியமான ஒன்றாக விளங்குகிறது. 1986 இல் மட்டும் அது மாட்டிறைச்சி. பழங்கள், காய்கறிகள் ஆகியவற்றை 2 பில்லியன் டாலருக்கு ஏற்றுமதி செய்தது. அதே சமயம் 1985 இல் மட்டும் 1.5 பில்லியன் டாலர் மதிப்புடைய அடிப்படை தானியங்கள் மற்றும் எண்ணை வித்துக்களை அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்தது. இதில் யாருக்கு ஆதாயம் அதிகம்?

வெகு சுலபமானது; முதலாவது மெக்சிகோவிற்கு' பழங்கள் மற்றும் காய்கறிகள், நீர்வசதிமிக்க நாட்டின் வட பகுதிகளில் உள்ள பண்ணைகளில் இருந்து கிடைத்து வந்தது. அதற்குக் காரணம் அரசு இப்பகுதியில் தனது வேளாண்மைத்துறை முதலீட்டைக் கொட்டிக் குவித்தது. 1940லிருந்து 1970 வரை அரசின் முதலீட்டில் 60 சதவிகிதம் வரை இங்கு செய்யப்பட்டது. இங்கு சிறு விவசாய நிலங்கள் வெறும் 9 சதவிகிதம் மட்டுமே இருந்தது இதற்கு வசதியாக இருந்தது. இன்னும் இந்த வளமான பகுதியில் உள்ள பணக்கார விவசாயிகள், அரசின் நீர்ப்பாசன திட்டங்களில் இருந்து உற்பத்தி விலையில் மூன்றில் ஒருபங்கு வரை மின்சக்தியைப் பெறறு வருகின்றனர். அடுத்தடுத்து வந்த அரசுகள் வேறு பயிர் களில் முதலீடு செய்ய முடிவு செய்திருந்தால், இன்று மெக்சிகோவிடம் சோளம், பீன்ஸ் மற்றும் எண்ணை வித்துக்கள் இருந்திருக்கும்.

இந்த 'இயற்கையான வசதி'யில் உண்மையில் இயற்கை எதுவும் கிடையாது. இந்தக் கொள்கை எப்பொழுது சரியாக இயங்கும் என்றால், அதிலிருந்து நல்ல வருவாய் வரும்போது. ஆனால் மெக்சிகோவில் துரதிருஷ்டவசமாக, பெரிய பண்ணை முதலாளிகள் ஏற்றுமதியில் இருந்து நல்ல பயனைப் பெற்றுக்கொள்ளும் அதே நேரம், அரசிற்கு மிகக் குறைந்த வரிகளையே செலுத்துகின்றனர். அவர்கள் வெள்ளரிக்காய் ஏற்றிய கையோடு, மூலதன ஏற்றுமதியையும் செய்து விடுவதில் வல்லவர்கள். ஆகவே பணக்காரர்கள் மேல்நோக்கியும், ஏழைகள் கீழ்நோக்கியும் வேகமாகப் பயணம் செய்து கொண்டு இருக்கிறார்கள்.

இப்படி பெரிய பண்ணைகளை ஆதரிப்பதால் சிறிய விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். அதனால் கிராமப்

புறங்களில் இருந்து நகர்ப்புறங்கள் நோக்கிய இடம் பெயர்தல் வெகுவேகமாக நடைபெறுகிறது. மெக்சிகோ, மக்களின் அடிப்படைத் தேவைகளை உற்பத்தி செய்து கொண்டிருந்தால் கிராமப்புறங்கள் செழிப்பாக இருக்கும்; மக்களின் இடப்பெயர்ச்சி அதிகமாக இருக்காது. நகரங்களில் நெரிசல் கணிசமாகக் குறையும். கி.பி 2000 இல் தற்போதைய வளர்ச்சி விகிதப்படி, மெக்சிகோ நகரில் 30 மில்லியன் மக்கள் வசித்துக் கொண்டிருப்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதை மாற்றி அமைப்பது அப்படியொன்றும் முடியாத காரியமில்லை. பொருளாதார வளர்ச்சி அறிக்கை கொடுத்த தகவல்களின்படி அரசு, நீர்ப்பாசன வசதி பெற்றுள்ள விவசாயிகளுக்கு கொடுத்துக் கொண் டிருக்கும் சலுகைகளை, மானாவாரி விவசாயிகளுக்குத் திருப்பிவிட்டால் புதிதாக 5 மில்லியன் ஹெக்டேர் நிலங்களும் சாகுபடிக்கு வரும்; அதோடு 5 மில்லியன் புதிய வேலைவாய்ப்புகளும் ஏற்படும். ஆனால் இதற்கு நிதிநிறுவன பூசாரிகள் இடம் கொடுக்க மாட்டார்களே!

## பணக்காரர்களின் வெளியேற்றம்

மெக்சிகோ மற்றொரு விலைமதிக்க முடியாத பொருளின் ஏற்றுமதியிலும் முன்னணியில் இருக்கிறது. அதுதான் பணக்காரர்கள் மற்றும் படித்தவர்களின் ஏற்றுமதி. அவர்கள் சாரை, சாரையாக நாட்டை விட்டு வெளியேறி அமெரிக்காவில் குடிபுகுந்து கொண்டிருக் கின்றனர். அதிகாரபூர்வமான புள்ளி விபரங்கள் இதுகுறித்து இல்லையெனினும், 1982-க்கும் 1985-க்கும் இடையே வடக்கு நோக்கி ஓடிய பணக்காரர்கள் மற்றும் திறமைசாலிகள் எண்ணிக்கை குறைந்தது 1,00,000 இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

நாணய மதிப்புக் குறைப்பிற்குப் பின் வெளியேறியவர்கள் என்று ஒரு சமூகவியலாளரால் குறிப்பிடப்படும் பெரும் பணக்காரர்களின் சிறுகுழு ஒன்று அமெரிக்காவிற்குச் சென்றது. 'நாங்கள் கலிபோர்னியாவை அமெரிக்காவிடம் இருந்து மீண்டும் வாங்கிக்கொண்டு இருக்கிறோம்' என்று பெருமையடித்துக் கொண்டார் ஒரு பணக்காரர். இக்குடும்பங்கள் ஒவ்வொன்றும் 4 முதல் 5 மில்லியன் டாலர் பணத்துடன் அமெரிக்கா வந்து இறங்கினர். நாளை என்பதே கிடையாது என்பது போல அவர்கள் வியாபாரங்களையும், ஆடம்பர மாளிகைகளையும் வாங்கித் தள்ளினர். கலிபோர்னியாவில் உள்ள லா ஜோலாவில் பல மெக்சிகர்கள் ஏராளமான வீடுகளை வாங்கிப் போட்டு விட்டதால், இனவெறி கொண்ட அமெரிக்கர்கள் அதை 'டோகோ டவர்ஸ்' என்று கிண்டலடிக்கின்றனர்.

இப்படி, பணக்காரர்கள் பணத்தை மூட்டைகட்டிக் கொண்டு நாட்டைவிட்டு ஓடி விடுவதால், ஏழைகளின் பளுச்சுமை இன்னும் கூடுகிறது. ஆனால் அவர்கள் மீது தைரியமாக நம்மால் கல்லை எடுத்து அடிக்க முடியுமா? அவர்கள் மெக்சிகோவில் நான்கு பூதங்கள் கொடுங்கோல் ஆட்சி செய்வதாகக் கூறுகின்றனர். அவை : ஊழல், நெருக்கடி, குற்றம் மற்றும் குயுக்தியான எண்ணங்கள் ஆகும். பணக்காரர்கள் கடத்தப்படுவதும், கொலை செய்யப்படுவதும் சர்வசாதாரணமான செயலாகி விட்டது. வாய்ப்பு இருக்கும் மெக்சிகர்கள், தங்களது குழந்தைகளை தங்களது சொந்த நாட்டில் வளர்க்க விரும்பவில்லை.

அடுத்தடுத்து வந்த நாணய மதிப்புக் குறைப்புகளால் தங்களது செல்வம் பனி போல உருகுவதை காணச் சகிக்காமல் அவர்கள் வெளியேறினர். டெக்சாசிற்கு போய்ச்சேர்ந்த ஒரு வர்த்தகர், குப்பை எடுப்பதற்குக் கூட

லஞ்சம் கொடுக்க வேண்டிய நிலை வந்தவுடன்தான் தான் இந்த முடிவை எடுத்ததாகத் தெரிவித்தார். 'மெக்சிகோ எனது தாய்வீடு. ஆனால் அங்கு நம்பிக்கை எதுவும் மிச்சமில்லை' என்று கூறுகிறார் தப்பி ஓடிவந்த பணக்காரர் ஒருவர். கடன், நாணய மதிப்புக் குறைப்பு; மனித; பிறபொருட்களின் மூலதன வெளியேற்றம் ஆகியவை ஒன்றை ஒன்று சாப்பிட்டுக்கொண்டு கொழுத்துப் போய் இருக்கின்றன. பணக்கார மெக்சிகர்களின் 'வடதுருவப்' பயணம் தொடர்ந்து கொண்டு இருக்கிறது.

### பிரேசிலின் பண்ணைக் கதை

பிரேசில் சிறிது தள்ளி இருப்பதால், மனிதர்களை அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்வதைக் குறைத்து, அதற்குப் பதிலாக உணவுப் பொருட்களை அதிகமாக ஏற்றுமதி செய்தது அந்நாடு. 1983 ஜனவரியில் நிதிநிறுவனம், தனது புனர்நிர்மாண சீரமைப்பு திட்டத்துடன் கூடிய கடனைக் கொடுத்த பிறகு பிரேசிலின் உணவு உற்பத்தியில் ஏற்பட்ட பயங்கரமான பிரச்சனைகள் குறித்து, பிரேசிலின் வேளாண்மையில் சிறப்பு ஆய்வு செய்துள்ள பொருளாதார வல்லுனர் வின்சென்ட்லெசர்க் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

அதற்கு முன்பு பிரேசில், மக்கள் தேவைக்கு அதிகமான உணவை உற்பத்தி செய்து வந்தது. அது நிதிநிறுவனத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது. அதற்கு நிதிநிறுவனத்தின் மொழியில் 'தேவை மேலாண்மை' என்று பெயர். அதாவது பணத்தின் பெயரில் வெளிப்படுத்தப்படுபவற்றிற்குதான் 'தேவை' என்பது பொருந்தும். யதார்த்த அத்தியாவசியங்களுக்கும், அதற்கும் சம்பந்தமில்லை. நிதிநிறுவனம் தனது நோக்கத்தை அடைய, பிரேசிலின் வேளாண்மை ஏற்றுமதியையே முழுவதுமாகச் சார்ந்திருந்தது.

பிரேசில், ஏற்றுமதிப் பயிர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தற்கு நிதிநிறுவனத்தையே முழுவதுமாகக் குற்றம் சுமத்த முடியாது. அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள், பெரும் பண்ணை முதலாளிகளின் நிர்ப்பந்தத்தால், தொடர்ந்து ஏற்றுமதிப் பயிர்களுக்கு முக்கியத்துவத்தை அளித்து வந்தது. அதில் இறங்கியிருந்த விவசாயிகளுக்கு நல்ல கடனும் கிடைத்து வந்தது. சோயாபீன்ஸ், ஆரஞ்சு பழரசம், கோழி இறைச்சி, காபி போன்ற வேளாண்—ஏற்றுமதி வருவாயில், பிரேசில் அமெரிக்காவிற்கு அடுத்த நிலையில் இருந்தது. 1970களில் சோயாபீன்ஸ் பயிரிடப்பட்ட நிலங்களின் பரப்பு 9 மடங்கு அதிகரித்தது. அதோடு எண்ணை இறக்குமதியைக் கட்டுப்படுத்த பிரேசில், கரும்பில் இருந்து எடுக்கும், எரிபொருளாகப் பயன்படுத்தக்கூடிய சாராயத்தை உற்பத்தி செய்ய உலகிலேயே பெரிய தொழிற்சாலையைக் கட்டியது. இந்த ‘கரும்பு பைத்தியம்’ ஆயிரக்கணக்கான சிறிய விவசாயிகள், நிலத்திலிருந்து தூக்கி எறியப்பட வழிவகுத்தது.

வேண்டுமென்றே தீட்டப்பட்ட இக்கொள்கைகள் உணவு உற்பத்தி மற்றும் நுகர்வைக் கடுமையாகப் பாதித்தன. 1978, 79 இல் வந்த சாதகமற்ற தட்பவெப்ப நிலை, இருக்கும் சூழலை இன்னும் மோசமாக்கியது. சர்வதேச நிதிநிறுவனம் மூக்கை நுழைத்தவுடன், மக்களின் அடிப்படை உணவான ஒருவித சோள உற்பத்தியில் 13 சதவிகித சரிவும், பீன்ஸ் உற்பத்தியில் 11 சதவிகித சரிவும் ஏற்பட்டன. இதற்கிடையே மக்கள்தொகை பெருக்கம் வருடத்திற்கு 2.5 சதவிகிதமாக இருந்தது. உற்பத்தி அதிகரித்த ஒரே பொருள் கோதுமைதான். ஆனால் அது பொதுவாகவே மிகக் குறைவாகவே உற்பத்தி செய்யப்பட்டது.

இப்படிப்பட்ட சூழலில், நிதிநிறுவனம் கோதுமைக்கு வழங்கப்பட்ட நுகர்வு மானியத்தை வெட்டவும், ஊரகக்

கடன்களைச் சுருக்கவும், வேளாண்மை ஏற்றுமதியை உந்தித் தள்ளவும் தீர்மானித்தது.

மானியம் பிரேசில் அரசிற்கு கடும் செலவை வைப்பதோடு, பண வீக்கத்தையும் ஊக்குவிக்கிறது என்பது நிதிநிறுவனத்தின் வாதம். இறக்குமதி செய்யப் பட்டு, மானிய விலையில் விற்கப்படும் கோதுமை போன்ற பொருட்கள் ஏற்றுமதியின் நன்மைகளைப் பிடுங்கிக் கொள்கின்றன. ஆனால் பெரும்பாலான மக்கள் கோதுமையைச் சாப்பிட்டு வந்த போது (இது வருடத் திற்கு 10 சதவிகிதம் அதிகரித்து வந்தது!), அதன் இறக்குமதிக்கு அளிக்கப்பட்டு வந்த மானியத்தை வெட்டு வது, ஏற்கனவே மோசமான நிலையில் இருந்த தேசிய உணவுப் பிரச்சனையை மேலும் சீரழித்தது.

1980களின் முற்பகுதியில் சுமார் 500000 டன் கோதுமையை அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்து வந்தது. 1985-86 இல் இது 48,000 டன்னாக குறைந்தது. மக்கள் இதற்குப் பதிலாக வேறு உணவை யாவது உட்கொள்ள முடியுமா என்றால், அதற்கும் பிரச்சனைதான்; ஏனெனில் வேளாண்மைக் கடனும் கடுமையாக வெட்டப்பட்டது. உபயம்: புனர் நிர்மாண சீரமைப்புத் திட்டம்! அதனால் விவசாயிகள் நல்ல விதை, உரங்கள் ஆகியவற்றில் கை வைத்தனர். அதனால் மகசூல் பாதிக்கப்பட்டது.

பிரேசிலின் விவசாயிகளுக்கும், நுகர்வோருக்கும் உள்ள உண்மையான ஒரே நம்பிக்கை நிலச்சீர்திருத்தம் தான். 1986 இறுதியில், வாக்குறுதி செய்யப்பட்டிருந்த நிலச்சீர்திருத்தம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. காரணம், பெரும் பண்ணை முதலாளிகளின் அழுத்தம். அவர்கள் நிலச்சீர்திருத்தத்தை சர்வதேச கம்யூனிச சதி என்று அழைத்தனர். 1986 இல் அவர்கள் ரௌடிகளை

வாடகைக்குப் பிடித்து 500 விவசாயிகள் மற்றும் அவர்களது ஆதரவாளர்களை (வழக்குரைஞர்கள், பாதிரிகள் மற்றும் தொழிற்சங்கவாதிகள் போன்றோர்) கொலை செய்தனர். பிரேசிலில் 2 சதவிகித பண்ணைகள், அதன் மொத்த பண்ணை நிலங்களில் 58 சதவிகிதத்தை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளன. ஆனால் 14 சதவிகித நிலத்தை 83 சதவிகித விவசாயிகள் பகிர்ந்து கொள்கின்றனர். 400 மகாபண்ணை முதலாளிகள், கிரேட் பிரிட்டனின் பரப்பளவில் 85 சதவிகிதத்திற்கு நிகரான பண்ணை நிலங்களைத் தங்களுக்குள் பகிர்ந்து கொள்கின்றனர்.

## பொலிவியா: எந்நேரமும் வெடிக்கும்!

‘எல்லாமே கன்னாபின்னாவென்று விற்பதால், நான் என் குழந்தைகளுக்கு காலை உணவு கொடுப்பதில்லை. மதியத்திற்கு சிறிது கஞ்சி மட்டும்தான். சர்க்கரை விலை ஏறியதில் இருந்து அதை வாங்குவதில்லை. குழந்தைகளுக்காக என்ன வேலை வேண்டுமானாலும் செய்யத் தயாராகிவிட்டேன். பெரியவர்கள் எப்படியாவது சமாளித்துக் கொள்ளலாம். சிலசமயம் ‘என் குழந்தைகளை யாருக்காவது கொடுத்து விடலாம் என்ற நினைப்பு வருவதுண்டு. ஆனால் என் பெற்றோர்கள் எனக்கு என்ன பண்ணுவார்கள் என்ற எண்ணம் வந்து பயமுறுத்தும்’

—லா பாஸில் உள்ள ஒரு பொலிவியத் தாய்

பிற லத்தீன் அமெரிக்க நாடுகளோடு ஒப்பிடும்போது பொலிவியாவின் கடன் பெரிய ஒன்றல்ல. வெறும் 5 பில்லியன் டாலர்கள் மட்டுமே. ஆனால் பொலிவியாவின் மொத்த மக்கள்தொகை எவ்வளவு தெரியுமா? வெறும் 6 மில்லியன்தான். இந்த துரதிருஷ்டமான மக்கள் லத்தீன் அமெரிக்க கண்டத்திலேயே மிக மோசமான நிலையில்

உள்ளனர். மிக அதிகமான குழந்தை இறப்பு விகிதம், குறைவான வயது வரம்பு, மிகக் குறைந்த கல்வி விகிதம், மிகக் குறைவான தேசிய மொத்த உற்பத்தி உள்ள நாடு. மொத்த மக்கள்தொகையில் பாதிக்கு மேற்பட்டவர்கள் உள்ளூர் இந்தியர்கள். அவர்கள் 11,000 முதல் 13,000 அடி உயரத்தில் வசிக்கின்றனர்.

விவசாயிகளைப் பொறுத்தவரை வாழ்க்கை நரகம்தான். அவர்களுடைய குழந்தைகளில் 10ல் 4பேர் அவர்களது 5வது பிறந்த நாளை எட்ட மாட்டார்கள். கிராம மக்களில் பாதி பேருக்கு எழுதப்படிக்கத் தெரியாது (ஐந்து பெண்களில் நால்வர்!). பெரும்பாலோர் தங்களது இளம் வயதில், அதாவது 50 வயதிற்கு முன்பு மருத்துவரைப் பார்க்காமலேயே இறந்து விடுவர்; ஏனெனில் 20,000 கிராம மக்களுக்கு ஒரு டாக்டர்தான் உள்ளனர். சுகாதார வசதிகள், நிலையான வீடுகள், சுத்தமான குடிநீர் போன்றவற்றை அவர்கள் காது கொடுத்துக் கேட்டதுகூட கிடையாது.

உணவுப் பாதுகாப்பைப் பொறுத்தவரை, யாருக்கு உணவு கிடைக்கவில்லை என்று கூறுவதைவிட, மாற்றிக் கூறுவது சுலபம். 1986 இல் உடல்நல அமைச்சகம் வெளியிட்ட அறிக்கை கிராமப் பெண்களில் 50 சதவிகிதத்தினர் ஊட்டச்சத்து குறைவாக உட்கொள்கின்றனர் என்று குறிப்பிடுகிறது. கர்ப்பிணிகளில் 70 சதவிகிதத்தினர் ஊட்டச்சத்து குறைவோடு இருப்பதோடு, ரத்தசோகை உடையவர்களாகவும் இருக்கின்றனர். பொலிவியாவின் மருத்துவக் கமிஷன், பொலிவியக் குழந்தைகளில் மொத்தம் 47 சதவிகிதம் ஊட்டச்சத்து குறைவோடு உள்ளதாக கூறுகிறது. ‘எங்கள் நாட்டில் 10 இல் 8 பேர் வறுமையில் வாழ்கின்றனர். அந்த எட்டில் 4 பேர் பரம ஏழைகளாக இருக்கின்றனர்’ என்று குறிப்பிடுகிறது மக்கள் கல்விக்கான ஒரு பொது நிறுவனம்.

பொலிவிய பொருளாதாரம் கடுமையான குழப்பத்தில் இருந்ததால் அது கடன் தவணைகளைக் கட்டுவது பலமுறை நிறுத்தி வைத்தது. இருந்த போதிலும் 1981க்கும் 1986க்கும் இடையே, பொலிவியா தனது மொத்த ஏற்றுமதி வருவாயில் 42 சதவிகிதம் கடனுக்கான வட்டி கட்ட மட்டுமே செலவழித்தது. 1985 இல் இது 60 சதவிகிதமாக உயர்ந்தது. 1986 இல் நிதிநிறுவனம் 107 மில்லியன் புதுக்கடனைக் கொடுத்தது. உலக வங்கி மூன்று வருட இடைவெளிக்குப் பிறகு மீண்டும் கடன் உதவி செய்ய ஆரம்பித்தது. உலக வங்கி 1983ல் கடன் உதவியை நிறுத்தியதற்குக் காரணம் என்ன தெரியுமா? பொலிவியாவில் ஒரே ஒருமுறை (!) தேர்தல் மூலம் பதவிக்கு வந்த அதிபர் ஹெரன் சைல்ஸ் சுவாசோவின் அரசு, நிதிநிறுவனத்தின் சிக்கன நடவடிக்கைத் திட்டம் ஒன்றிற்கான ஒப்பந்தத்தை அடையத் தவறி விட்டதுதான்!

1825 இல் சுதந்திரம் அடைந்ததில் இருந்து அங்கு இதுவரை 180 ராணுவ ஆட்சிக் கவிழ்ப்புகள் நடந்துள்ளன. இது அந்நாடு எப்பொழுதும் நிலையற்று இருப்பதையே காட்டுகிறது. 1960களில் இருந்து 1982 வரை பல, வித விதமான ராணுவ ஜெனரல்கள் நாட்டை ஆண்டு வந்தனர். 1983 இல் நாட்டில் சுரண்ட எதுவுமே இல்லை என்ற நிலை வந்ததும், ஆட்சியை மக்களிடம் கொடுத்துவிட்டு கௌரவமாக (!) ஒதுங்கிக் கொண்டனர். வாங்கிய கடன்களில் 80 சதவிகிதம் இந்த ஜெனரல்களின் கைங்கர்யம். ஆனால் இப்போது அதை அடைக்க மக்கள் தியாகங்கள் செய்யத் தயாராகுமாறு கோரப்படுகின்றனர்.

ஜெனரல்கள், வாங்கிய கடனை தலைநகரில் இருந்து விமான நிலையம் வரையிலான (எல் அலடோ) சாலை அமைப்பது போன்றவற்றிற்கு வாரி இறைத்தனர். இது உலகிலேயே அதிகச் செலவு செய்து அமைக்கப்பட்ட

சாலையாகும். முறையான மண்சோதனைகள் எதுவும் மேற்கொள்ளப்படாமல் இச்சாலை கட்டப்பட்டதால், இன்று பெரும்பகுதி சரிந்து கொண்டு இருக்கிறது. பொலிவியாவின் பெட்ரோலியத் தோண்டல்களுக்குப் பொருந்தாத மாபெரும் பெட்ரோலிய சுத்திகரிப்பு ஆலை ஒன்று 200 மில்லியன் டாலர் செலவில் அமைக்கப் பட்டது. அது அதனுடைய இயங்கு திறமையில் 30 சதவிகிதத்துக்கு மேல் ஒரு காலமும் இயங்கியதே இல்லை. அது கட்டப்படும் போது, அப்போது ஆட்சியில் இருந்த ஜெனரலின் மருமகன்தான் அதற்கு மேலாளராக இருந்தார். இதே போல எண்ணை வித்துக்கள் சுத்திகரிப்பு ஆலையிலும் ஏராளமான பணம் வீணாக்கப் பட்டது. சட்டத்திற்குப் புறம்பான இறக்குமதி உட்பட நடைமுறை நுகர்விற்காகவும் கடன் செலவிடப்பட்டது. உடல்நலம், கல்வி மற்றும் விவசாயிகளுக்காக கடன் பணம் செலவிடப்படவில்லை என்பதைத் தனியாகக் குறிப்பிடத் தேவையில்லை.

பொலிவியாவில் கொக்கொயின் என்னும் போதைப் பொருள் அதிகமாக நடமாடுவதாக, அமெரிக்கா கூச்சல் போட்டது—காரணமாகத்தான். போதை மருந்துப் பொருள் கடத்தல்காரர்களை ஒழிக்கப் போவதாகக் கூறி படைகளைக் கூட அது அனுப்பியது. வாழ்க்கை தினமும் ஒரு போராட்டமாக இருக்கும் பட்சத்தில், தனிப்பட்ட மனிதர்கள் குற்றங்கள் புரிந்தோ, விபச்சாரம் செய்தோதான் காலந்தள்ள முடியும் என்றால், அதைச் செய்யத் தயங்கமாட்டார்கள் என்பதை அமெரிக்கா ஒரு துளிக்கூட புரிந்து கொள்ள முயல்வதாகத் தெரியவில்லை. அதுவும் சட்டத்திற்குப் புறம்பான செயல்களைச்செய்வது லாபகரமாக இருக்கும் பட்சத்தில் மொத்த நாடே அதில் குதிப்பதில் வியப்பெதுவும் கிடையாது.

தகரம், நிலவாயு மற்றும் வேறு சில உலோகங்களின் சட்டபூர்வமான ஏற்றுமதியை சார்ந்திருந்த பொலிவியா,

அப்பொருட்களின் விலை சரிவால் கடுமையாக பாதிக்கப்பட்டது. 1985 இல் 80 சதவிகிதம் சரிவு ஏற்பட்ட தகரத்தின் விலை பின்னர் உயரவேயில்லை. பொலிவியாவின் பணவீக்கம் அந்த ஒரு வருடம் மட்டும் எவ்வளவு உயர்ந்தது தெரியுமா? நம்பினால் நம்புங்கள் 25,000 சதவிகிதம். ஆம்! இருபத்தைந்தாயிரம் சதவிகிதம்தான்! இப்பொழுது கூறுங்கள், பொலிவியர்கள் போதை மருந்துக் கடத்தலில் ஈடுபட்டதில் ஏதாவது தவறு உள்ளதா என்று? சட்டத்திற்கு புறம்பான கொக்கோயின் போதைப் பொருள் ஏற்றுமதி வருடத்திற்கு 4 மில்லியன் டாலர்கள் என்று மதிப்பிடப் பட்டுள்ளது. அதாவது சட்டபூர்வமான ஏற்றுமதியைப் போல 7 மடங்கு! கடத்தல், போதை மருந்து பொருள் வியாபாரம், சூதாட்டம், சட்ட ஏய்ப்பு மற்றும் மூலதன ஏற்றுமதி ஆகியவற்றை கணக்கில் எடுத்துக் கொண்டால் நாட்டின் மொத்த பொருளாதாரத்தில் மூன்றில் ஒரு பங்கு சட்டத்தை மீறியது என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

போதை மருந்துக் கடத்தலில் பெரும் பயன் அடைவது ஒரு டஜன் குடும்பங்கள் மட்டுமே! இதில் 'கொக்கோயின் ஜெனரல்களும்' அடக்கம். அவர்களுக்கு அதில் கிடைக்கும் பெரும் பணத்தைக் கொண்டு போலீஸ், நிர்வாகம், சுங்கம் மற்றும் அரசியல்வாதிகளை விலைக்கு வாங்குவது சுலபம். பல பொலிவிய விவசாயிகள் பசியைத் தணிக்க கொக்கோயினை மென்று கொண்டு இருக்கின்றனர். ஆயிரக்கணக்கானோர், இந்த புதிய 'பணப்பயிரை' வளர்த்து, வேறு எதிலும் கிடைக்காத லாபத்தைப் பெற்று வருகின்றனர்.

எப்பொழுதும் வெறும் ஒரு சட்டத்தை மட்டும் இயற்றிவிட்டு ஒரு சமூகப் பிரச்சனையை அமெரிக்கா தீர்த்ததாக வரலாறு கிடையாது. கொக்கோயினும் அதற்கு விதிவிலக்கு அல்ல. அதை ஒரு இடத்தில்

நிர்மூலமாக்கினால் மறு இடத்தில் தலைதூக்கும். அமெரிக்க கொக்கொயின் சந்தை 1984-இல் 85'டன்னாக இருந்தது. 1985 இல் 125 டன்னாகவும், 1986 இல் 250 டன்னாகவும் உயர்ந்தது. இது பொலிவியாவின் குற்றமா? உற்பத்தி மற்றும் விநியோகம் குறித்த பொருளாதாரம் பற்றி அமெரிக்கா பேசுவது சரிதான்; ஆனால் நாளுக்கு நாள் கடுமையாக அதிகரித்து வரும் தேவையைக் குறித்து யார் பேசுவது? தேவை அப்படி விசுவருபமெடுக்காவிடில், 1970 களில் 600டன் கொக்கொயின் இலைகளை உற்பத்தி செய்து வந்த பொலிவியா 1986இல் 152000 டன் என்ற அளவை அடைந்திருக்குமா?

பொலிவியாவில் 66,000 ஹெக்டேர்களில் கொக்கொ பயிரிடப்படுகிறது. அது ஒரு விவசாயிக்கு, ஒரு ஹெக்டேருக்கு, வருடத்திற்கு மூன்று அறுவடை மூலம் 10,000 டாலரை பெற்றுத்தருகிறது. இதை ஒரு கொக்கொ பயிரிடப்படாத விவசாயியின் வருமானத்தோடு ஒப்பிட முடியவே முடியாது. ஏனெனில் அவனுக்கு ஒரு வருடத்திற்கு கிடைப்பது வெறும் 160 டாலர்தான். ஒரு தொழிற்சாலை தொழிலாளிக்கு 649 டாலர்; ஒரு சுரங்கத் தொழிலாளிக்கு 827 டாலர் என்ற வருமானத்தையும் இத்துடன் ஒப்பிட்டுக் கொள்ளலாம்! அமெக்கா தனது போதை மருந்து ஒழிப்பு திட்டத்தின் கீழ் கொக்கொ பயிரிடுவதை விட்டு விட முன்வரும் விவசாயிக்கு ஒரு ஹெக்டேருக்கு 360 டாலர் ஊக்கத் தொகை கொடுக்க முன் வந்துள்ளது. இதைக்கேட்டால் உங்களுக்கே சிரிப்பாக இல்லை? இதையே அமெரிக்க விவசாயி ஒப்புக் கொண்டிருந்தால், ஒன்று அவனை பைத்தியம் என்பார்கள் அல்லது மனிதாபிமானி என்பார்கள்! அமெரிக்காவின் திட்டம் கேலிக்கூத்தாகவும், மோசமான திட்டமிடுதலின் விளைவான ஒன்றாகவும் இருந்தால், அதற்கு பொலிவியாவைக் கோபித்துக் கொண்டால்...?

பொலிவியாவில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வு, எப்படி கீழ்நிலையில் உள்ள விவசாயிகள் இந்த போதைமருந்து கசத்திற்குள் சிக்கிக் கொண்டார்கள் என்பதை தெளிவாக விவரிக்கிறது.

1985 இல் ஆட்சி மாறியதும், நிதிநிறுவனத்துடன் ஒரு முழுமையான ஒப்பந்தம் ஏற்பட்டு விடவில்லையென்றாலும், பொதுச் செலவைக் குறைக்க பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. தகர ஏற்றுமதிக்கு பேரடி விழுந்ததும், பொலிவிய சுரங்க நிறுவனம் பல சுரங்கங்களை இழுத்து மூடியது. அரசு ரெயில்வே, பெட்ரோலிய நிறுவனம் ஆகியவை மூடப்பட்டன அல்லது தனியாருக்கு விற்கப்பட்டன. 1986 ஆகஸ்டில் தலைநகரில் 5000 சுரங்கத் தொழிலாளர்களும் அவர்களது குடும்பத்தினரும் சென்ற ஊர்வலத்தை அரசு ராணுவ உதவியுடன் இரும்புக்கரம் கொண்டு அடக்கியது. நாட்டில் நெருக்கடி நிலை அமலாக்கப்பட்டது.

1985-86 இல் 30,000 அரசு ஊழியர்கள் அனுப்பப் பட்டனர். மொத்த தொழிலாளர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் வேலை இல்லாமல் இருந்தனர். இது அதிகாரபூர்வமான தகவல்! உண்மையான ஊதியம்—வேலையில் தொடர்ந்து இருந்த அதிர்ஷ்டசாலிகளுக்கு—வெறும் 8, 9 டாலர்கள்தான். 1986 இல் தலைநகரில் உள்ள செவிலியருக்கு வழங்கப்பட்ட ஊதியம், அவர்கள் வீட்டில் இருந்து அலுவலகம் வருவதற்கான பேருந்து செலவிற்கு மட்டும் போதுமானதாக இருந்தது.

ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் வாழ்க்கை நடத்தப் போதுமான ஊதியம் கேட்டு ஒரு மாபெரும் வேலை நிறுத்தம் செய்தனர். அதில் கலந்து கொண்ட ஒரு ஆசிரியர் நிலைமையை இவ்வாறு விளக்குகிறார்:

சர்வதேச நிதிநிறுவனத்தின் நிர்ப்பந்தத்தினால் அரசு சம்பளத்தை முடக்கியது. அதன்படி ஒரு ஆசிரியருக்கு

10 முதல் 40 டாலர் வரை சம்பளம் கிடைத்தது. 10 டாலரில் நீங்கள் 40 பஸ் டிக்கட்டுகள், 100 ரொட்டித் துண்டுகள், 6 கிலோ உருளைக்கிழங்கு ஆகியவற்றை மட்டுமே வாங்க முடியும். ஒரு குடும்பத்திற்கு அப்போது 160 டாலர் மாதத்திற்கு குறைந்தபட்சம் தேவைப்பட்டுக் கொண்டிருந்தது. அது கிடைக்காது என்பது தெரிந்ததால், நாங்கள் அரசிடம் 60 டாலர் கேட்டுப் போராடினோம். அரசு பேச்சுவார்த்தைக்குக்கூட தயாராக இல்லை. திங்கள் முதல் வேலைக்கு வராதவர்கள் வீட்டுக்கு அனுப்பப்படுவார்கள் என்று அறிவித்தது. அதனால் ஆசிரியர்கள் கூடவே வேறு ஒரு தொழிலையும் செய்ய வேண்டி இருந்தது. சிலர் டாக்சி ஓட்டினர்; சிலர் கறுப்புச் சந்தையில் இறங்கினர்.

இதில் நீண்டகாலப் பிரச்சனை கற்றுக் கொடுப்பதன் தரம். அந்தச் சம்பளம் நிச்சயமாக யாரையும் ஊக்கப் படுத்துவதாக இல்லை. பல மாணவர்கள் படிப்பைப் பாதியில் விட்டுவிட்டு கொக்கோ இலை பறிக்கப் போய் விட்டனர். பள்ளிக்கு வந்த ஒரு சில குழந்தைகள், அவர்களது பெற்றோர்களால் சாப்பாடு வாங்கிக் கொடுக்க முடியாதவர்கள். அவர்கள் அங்கு வந்து வெறும் வயிற்றுடன் நிம்மதியாகத் தூங்கினர்.

1980க்கும் 1984க்கும் இடையே அனைத்து பொலிவியர்களின் சம்பளம் 75 சதவிகிதம் வரை சுருங்கியது. அடிப்படைத் தேவைகளை ஈட்ட அவர்கள் நீண்ட நாள் உழைக்க வேண்டியிருந்தது. எல்லாப் பொருட்களின் விலைவாசியும் விண்ணை எட்டியது. பின் அவர்கள் எப்படி சமாளித்தார்கள். பரிந்துரைக்கப் பட்ட கலோரி அளவில் 39 முதல் 50 சதவிகிதமும், புரதச் சத்து அளவில் 52 முதல் 61 சதவிகிதமும் மட்டுமே சாப்பிட்டு அவர்கள் உயிர் வாழ்ந்தனர். பட்டினிச் சாவு வராமல் அவர்கள் சமாளித்தது, அச் சூழலில் பயங்கர மான சாதனையாகும்!

இப்படி பட்டினியால் சாகாமல் இருக்க வேண்டு மானால் குடும்பம் அதிகமாக உழைக்க வேண்டி இருந்தது. கடைசியில் பொறுப்பு குடும்பத் தலைவி மேல் விழுந்தது. அவை இரண்டு காரியங்கள் செய்தன. பழம், பால், குளிர்பானங்கள் ஆகியவை ஒரேயடியாகக்கைவிடப் பட்டன. எவ்வளவு குறைவான விலையில் உணவுப் பொருட்களை வாங்க முடியுமோ, அவ்வளவிற்கு வாங்கினர். இப்படி வண்டியை ஓட்டிக் கொண்டு இருந்தனர்.

உலக வங்கி, நிதிநிறுவனம் ஆகியவற்றின் நிபந்தனை களை நிறைவேற்ற பொலிவிய அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் நிலைமையை மேலும் பயங்கரமாக்கும். இது குறிப்பாக சிறு விவசாயிகளையும் ஏழைகளையும் சம்மட்டி அடி அடிக்கப் போகிறது. பொதுவாக மக்கள் நினைப்பதற்கு மாறாக பொலிவியா, தனது உள்நாட்டு நிலைமை இப்படி இருந்தாலும் கடன் தவணைகளை ஒழுங்காக கட்டி வருகிறது.

## சான்டோ டொமின்கோவில் ரத்தவெள்ளம்

லத்தீன் அமெரிக்க ரத்தக் களரியில் கடைசியில் காட்சி யளிப்பது டொமினிகன் குடியரசு. இது சந்தேகத்திற்கு இடமான பின்னணியைக் கொண்ட ஒரு சிறிய நாடு. ஆனால் இங்குதான் நிதிநிறுவனக் கலவரத்தினால் அதிகமான மக்கள் கொல்லப்பட்ட சம்பவம் நடந்து உள்ளது.

நாடு பிற விஷயங்களில் ஓரளவு நன்றாகவே இருக்கிறது. ஆனால் துரதிருஷ்டவசமாக அதில் ஒன்று கூட அதன் மக்களுக்குப் பயன்படும் நிலையில் இல்லை. டொமினிகன் குடியரசு ஹிஸ்பானியோலா தீவின் கிழக்குப் பாதியையும், ஹாய்தியின் மேற்குப் பாதியையும் உள்ளடக்கிய ஒரு நாடு. 1492 இல் கொலம்பஸ் இங்கு

வந்திறங்கி, லத்தீன் அமெரிக்காவின் ஐரோப்பிய காலனி ஆதிக்கத்திற்கு அடிக்கல் நாட்டினார். பூர்வ குடிமக்களான கரிப் இந்தியர்கள் மொத்தமாகப் படுகொலை செய்யப் பட்டனர். கரும்புத் தோட்டங்களில் வேலை பார்க்க கருப்பு ஆப்பிரிக்கர்கள் இறக்குமதி செய்யப்பட்டனர். அதற்குப் பிறகு இன்றுவரை கிராமப்புறங்களில் மேம்பாடு குறிப்பிட்டுச் சொல்லும்படி எதுவுமே நடைபெறவில்லை. இன்று 0.07 சதவிகித பணக்காரர்கள் மொத்த பயிர் நிலங்களில் 45 சதவிகிதத்தைக் கையில் வைத்துள்ளனர். கிராம மக்களில் 300000 பேருக்கு நிலமே கிடையாது. (மொத்த மக்கள்தொகை 64 லட்சம்தான்!)

வருவாயும் நிலவுடமை லட்சணத்தில்தான். 400 குடும்பங்களின் வருட வருமானம் தலைக்கு 325000 டாலர்கள்; மேலும் 2000 குடும்பங்கள் 125000 டாலர் களை சம்பாதித்தன. 50,000 குடும்பங்களை உள்ளடக்கிய மத்தியதர வர்க்கத்தின் வருமானம் 5,000 முதல் 15000 டாலர்கள் வரை. கீழ்மட்டத்தில் உள்ள சுமார் 3.5 மில்லியன் மக்கள் 400 முதல் 600 டாலர் வரையிலான வருவாயில் வாழ்க்கை நடத்துகின்றனர். மொத்த மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதி—2 மில்லியன்— தலைநகரான சான்டோ டொமின்கோவில் வசிக்கின் றனர். அதிகாரபூர்வமான வேலையற்றோர் எண்ணிக்கை 30 சதவிகிதம். மொத்தக் கடன் 3.6 பில்லியன் டாலர்கள். மொத்த ஏற்றுமதியில் 40 சதவிகிதம் வட்டி கட்டவே சரியாய் போய்விடுகிறது.

இதுதான் சுருக்கமாக அந்நாட்டின் சமூகப் பொருளாதார பின்னணி. இது 1983இல் நிதிநிறுவனத்தின் கிடுக்கிப் பிடியில் சிக்கியது. வழக்கம் போல 'கசப்பு மாத்திரைகள்' தொடர்ந்தன; வியாதி வந்தால் சாப்பிட்டுத்தானே ஆகவேண்டும்! நாணய மதிப்புக் குறைப்பு, அரசுச் செலவுகளில் சிக்கனம் போன்றவை உடனே அமலாகின: 1984 பரிசாக 400 மில்லியன் கடன்

முடிப்பு வழங்கப்பட்டது. அடிப்படைப் பொருட்களின் விலை 200 சதவிகிதம் உயர்ந்தது. ரொட்டியின் விலை உயர்வு உன்னதமான கலைநயத்துடன் ஈஸ்டர் வாரத்தில் அறிவிக்கப்பட்டது.

ஏப்ரல் 23 இல் வெடித்த போராட்டம் தன்னிச்சையானது. ஆனால் அதற்கு நூற்றுக்கணக்கான மக்கள் இயக்கங்களின் ஆசி இருந்தது என்பது உண்மைதான். ஆயிரக்கணக்கில் மக்கள் தெருவிற்கு வந்தனர். பொது அமைதியைக் காக்க அரசு தேவையான நடவடிக்கைகளை எடுக்கத் தயங்காது என்று அதிபர் ஜார்ஜ் பிளாங்கோ மிரட்டினார். 24 இல் பல தொழிற்சங்கங்களும் களத்தில் குதித்தன. அவர்களுக்கும் பயங்கரமான அடக்குமுறை பரிசாகக் கிடைத்தது.

மூன்று நாள் போராட்டத்திற்குப் பிறகு மக்கள். கொடுங்கரம் கொண்டு அடக்கப்பட்டனர். ஒரு மக்கள் அமைப்பின் கணிப்புப்படி 186 பேர் இறந்துள்ளனர்; நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர். 5000க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். இறந்தவர்களில் பெரும்பாலோர் 20 வயதிற்கு உட்பட்ட இளைஞர்களே. அதில் 18 பேர் பெண்கள். பெண்களில் 13 வயது சிறுமியும், 70 வயது மூதாட்டியும் அடக்கம். ஏப்ரல் 25 அன்று பேசிய அதிபர் ''ராணுவமும், போலீசும் போராட்டங்களை எப்படி அடக்குவது என்பதில் ஒரு முன்னுதாரணத்தை நடத்திக் காட்டியுள்ளனர். அவர்களின் உயர்ந்த திறமை, மனித உணர்வுகள் மீது கொண்டிருந்த மதிப்பு, உயிர்மீது அவர்கள் காட்டிய மரியாதை ஆகியவை அதில் வெளிப்பட்டன...அவர்கள் தங்களுடைய வெளிப்பாட்டை செம்மையான சீர்தூக்கல் அடிப்படையிலான கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தனர்; இது அவர்களுடைய திறமையான பயிற்சியைத்தான் காட்டுகிறது'' என்று மொழிந்துள்ளார்.

எனக்கு வார்த்தைகளே வரவில்லை

# 6

# கடனும் சுற்றுச் சூழலும் : சூழல்கொலைக்கு நிதியுதவி

கடன்பட்டுள்ள நாடுகள், வெறும் பணத்தை மட்டும் கடன்வாங்கவில்லை. அவை தங்களது வருங்காலம் முழுவதையும் அடமானம் வைத்துள்ளன. இதற்கு இயற்கை பக்க—ஈடாக வைக்கப்படுகிறது. மூன்றாம் உலக கடன் நெருக்கடிக்கு சுற்றுச்சூழல் பலியாகி வருவதை எவரும் சரியாகக் கவனிப்பதில்லை. ஆனால், இதற்கு நாம் அனைவரும் ஒருநாள் பெருவிலை கொடுக்கவேண்டியிருக்கும்,

நமது பொருளாதாரங்கள் மிகவும் கிட்டப்பார்வை கொண்டவையாக இருக்கின்றன; லாபங்கள் காலாண்டு, அரையாண்டிற்கு கணக்கிடப்படுகின்றன. வரவு-செலவு திட்டங்கள் வருடத்திற்கு ஒருமுறை நிர்ணயிக்கப் படுகின்றன. வங்கிகளைப் பொறுத்தவரை மூன்று மாதங்கள் என்பதுகூட மிக நீண்ட காலகட்டம்தான். இக்கிரகத்தின்மீது பாதிப்பை உண்டு பண்ணக்கூடிய உரிமத்தை ஒவ்வொரு நாடும் கொண்டிருக்கின்றது. ஆனால் இதைத் தடுக்க உலகளாவிய தடுப்புமுறை எதுவும் கைவசம் இல்லை. சோசலிப் பாதையிலோ அல்லது முதலாளித்துவப் பாதையிலோ, எதில் சென்றாலும், நாடுகள் எதற்குமே நீண்டகால தாக்கம் என்ற ஒன்று

கிடையாது என்ற ரீதியிலேயே நடந்துகொள்கின்றன. வருங்காலத்துடன் கைகுலுக்கிக்கொள்ளும் எண்ணம், துளிக்கூட அவர்களுக்கு உதிப்பதில்லை. பல புதிய பொருளாதாரவாதிகள், வளர்ச்சி என்பதற்கு ஒரு எல்லையுண்டு என்பதை கொள்கை ரீதியில்கூட ஒப்புக் கொள்ள மறுக்கின்றனர்; அதோடு அவர்களது கணிப்பில் மாசுபாடு, சுற்றுச்சூழல் பேரழிவு ஆகியவை அறவே இடம் பெறுவதில்லை.

சர்வதேச நிதிநிறுவனமும், உலகவங்கியும் இத்தகைய பொருளாதாரவாதிகளால் பொங்கி வழிவதால், அவற்றின் கடன்களும், மறுசீரமைப்பு திட்டங்களும், சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்து கவனம் செலுத்தாமல் இருப்பதில் ஆச்சரியப்பட ஏதுமில்லை. அதற்கு கொடுக்கப்பட்டிருக்கும் விலை என்ன என்பதை நாம் முழுமையாகக் கணிக்குமுன்பு, மிகவும் காலம் கடந்து விடும்! ஆனால் தற்போது சென்றுகொண்டிருக்கும் பாதை தவறானது மட்டுமல்ல, பொருளாதார ரீதியில்கூட அபத்தமானது என்பதைச் சுட்டிக்காட்ட, இப்பொழுதே அனேக சான்றுகள் உள்ளன. மூன்றாம் உலகில், இதைச் சுத்தப்படுத்துவதற்காக நாம் அளிக்கப்போகும் விலை மிகப்பயங்கரமாக இருக்கும். அது நமது கடன்பளுவைக் கடுமையாக அதிகரிக்கும். அப்படியும் பல சமயங்களில் ஏற்படுத்தப்பட்ட பாதிப்பை மீண்டும் சீர்செய்ய இயலாது என்ற நிலை நிலவும்.

## கடனும் அழிவும்

கடனுக்கும், சுற்றுச்சூழலுக்கும் இரு தொடர்புகள் உள்ளன. முதலாவது சூழலியல் ரீதியாக அழிவு ஏற்படுத்துகிற திட்டங்களுக்கு நிதியுதவி செய்யக் கடன் வாங்குவது. இரண்டாவது அக்கடனை அடைப் பதற்காக, இயற்கை வளங்களைச் சூறையாடுவது. இவை

இரண்டுமே ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவை. கடன்பொறிக்குள் மூன்றாம் உலக நாடுகளை சிக்கிக்கொள்ள வைத்த மாபெரும் திட்டங்கள், அடிப்படையிலேயே சுற்றுச்சூழல் பேரழிவு மிக்கவையாக இருந்தன. வழக்கமான வளர்ச்சி மாதிரியின் பிரிக்கமுடியாத அம்சமாக இந்த மகாதிட்டங்கள் விளங்கின. இன்றைய சூறையாடல்களுக்கு நாம் நாளை விலை கொடுக்கவேண்டியிருக்கும் என்பதைக் குறித்து அவை அக்கறை செலுத்துவதேயில்லை. மாபெரும் அணைகள் மற்றும் நீர் மின்சக்தி திட்டங்களை இதற்கு உதாரணமாகக் காட்டலாம்.

பாசன வசதிக்கோ, சக்தி திட்டங்களுக்கோ நாம் எதிரி அல்ல. வெற்றிகரமான சமுதாயங்கள் வேளாண்மையை மேம்படுத்துவதற்கும், சக்தியை உருவாக்குவதற்கும் பொருத்தமான வழிகளைக் ண்டுக பிடிக்கவேண்டும்; இல்லையெனில் அவை விரைவில் அழிந்துபோய்விடும். துரதிர்ஷ்டவசமாக, பெரும் அணைகள் இந்த இரண்டையுமே செய்வதில்லை, அதோடு அவை ஏகப்பட்ட துணைப்பிரச்சனைகளையும் தோற்றுவிக்கின்றன. அதே சமயம் தொடர்ச்சியான பல சிறிய அணைகள் லாபகரமாகவும், உபயோககரமாகவும் இருப்பதை எவரும் கண்டுகொள்வதில்லை. உதாரணமாக, 1976 இல் துவக்கப்பட்ட பிரேசிலிலுள்ள டுக்குரி அணை, 8 பில்லியன் டாலரை முழுங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் இந்த மதிப்பீடுகூட உண்மையானதல்ல; ஏனெனில் இது இரும்பு, சிமெண்ட், செங்கல், கணக்குகளை மட்டுமே கொண்டுள்ளது. உண்மையான செலவுகள், 'செலவு—பயன்' ஆய்வுகள் என்று கூறப்படும் ஆய்வுகளின் உதவியோடு திட்டமிட்ட முறையில் மறைக்கப்படுகின்றன. அவற்றில், வண்டல் கீழ் நீரோட்டத்தில் அடித்துச் செல்லப்படுதல்,

வேளாண்மை நிலங்கள் மற்றும் காடுகள் வெள்ளத்தில் மூழ்குதல், வனவிலங்குகளுக்கு அழிவு ஏற்படுதல், நிலம் உவர்ப்பாதல் ஆகியவை அடங்கும். இவை ஒருசில பக்க விளைவுகளே. ஆனால் இவை மக்களின் மீதும், அவர்களது வாழ்வாதாரங்கள் மீதும் கடும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

நீர் வடிவமைப்புகள் பாதிக்கப்படும்போது, மக்கள் நேரடியாக மலேரியா, நீர்க்கண் நோய் போன்ற வியாதிகளால் தாக்கப்படுகின்றனர். அதோடு, அவர்களது வசிப்பிடங்களிலிருந்து அவர்கள் வலுக்கட்டாயமாகத் தூக்கியெறியப்படுகின்றனர். உலக வங்கியின் உள் சுற்று ஆவணம் ஒன்றில், 1979—1983க்கும் இடையே, நீர்மின் திட்டங்கள், நான்கு கண்டங்களில், 4 முதல் $4^1/_2$ லட்சம் மக்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றியிருக்கிறது என்று தெரிவிக்கிறது. இதில் பலர் வேறு இடங்களில் குடியமர்த்தப்படுவதுமில்லை; அவர்களுக்கு இழப்பீடு எதுவும் வழங்கப்படுவதுமில்லை என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

பிரேசிலின் மின்சக்தி திட்டங்களுக்கு, உலக வங்கி பெரும் கடனை அளித்துள்ளது. 1974 வாக்கில், இத்துறைக்கு உலகவங்கி 26 கடன்களை வழங்கியிருந்தது. 1985-86 இல் மட்டும் இத்துறைக்கு வழங்கப்பட்ட கடன் 1.3 பில்லியன் டாலர்களாகும். உலக வங்கிக் கடனுடன் கட்டப்பட்டு, 1984 இல் ஒரு பகுதி முடிக்கப்பட்ட டுக்குரி அணைத்திட்டம் 540000 ஏக்கர் காட்டு நிலத்தை நீருக்குள் மூழ்கடித்துள்ளது. காட்டை அப்புறப் படுத்த வேண்டிய அரசு நிறுவனம், ஒரு தனியார் நிறுவனத்திற்கு உட்குத்தகைக்கு விட்டது. அந்நிறுவனம், 'ஏஜெண்ட் ஆரஞ்சு' என்று செல்லமாக அழைக்கப்படும், டயாக்சினை, காடு முழுவதும் தூவியது. ஏஜெண்ட் ஆரஞ்சின் அழிக்கும் ஆற்றல் வியட்நாம் போரின்போது நன்றாக வெளிப்பட்டது எவருக்கும் மறந்துவிடவில்லை.

இம்மருந்தால் 40 பேர் இறந்துள்ளதாகத் தெரிய வருகிறது. பலியானவர்களின் குடும்பத்திற்கு இழப்பீடு கிடைக்காது என்பது ஒருபுறம் இருக்கட்டும். கதை இதோடு முடியவில்லை. தூவப்பட்ட ஏஜெண்ட் ஆரஞ்சின், பல டிரம்கள் முழுமையாக காட்டில் விழுந்து விட்டன. அவை இப்பொழுது அணையின் நீருக்கடியில் உள்ளன. அவை என்று உடையும் என்று தெரியாது. மாநில தலைநகரான பிலெத்தில் வசிக்கும் 1.2 மில்லியன் மக்கள் இவ்வணையின் நீரைத்தான் முழுவதும் நம்பி இருக்கின்றனர்.

உலக வங்கி ஊழியர் ஒருவர், டுக்குரி அணையின் சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்து மேற்கொண்ட ஆய்வில் ஏஜென்ட் ஆரஞ்சு குறித்து எதுவுமே குறிப்பிடப்பட வில்லை. ஆனால் அதில் :0000 மக்கள் வரை, நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளதால் வெளியேற்றப்பட வேண்டும் என்பது குறிப்பிடபட்டுள்ளது.

அணை எதுவும் கட்டப்படாமல்கூட, மக்கள் தூக்கி எறியப்படலாம். சுற்றுச்சூழல் பேரழிவுகள் முதலில் பூர்வீக குடிகளைத்தான் பாதிக்கிறது. இதில் உலகில் பெரும் கடனாளி நாடுகளான பிரேசிலும், இந்தோனேசியாவும் முன்னணியில் இருக்கின்றன. இந்தோனேசியாவின் இந்த இடப்பெயர்ச்சி திட்டம் 'டிரான்ஸ்கிரேசி' என்றழைக்கப்படுகிறது.

இத்திட்டத்தில் முதலில் 70 மில்லியன் மக்களை இடப்பெயர்ச்சி செய்யத் திட்டமிடப்பட்டது. இது 20 ஆண்டுகாலமாக படிப்படியாக நடத்தப்படவிருந்தது. அதிர்ஷ்டவசமாக, இந்தோனேசியாவிடம் பணம் இல்லாமல் இருந்ததால், அவ்வளவு மக்கள் அப்புறப் படுத்தப்படவில்லை. அப்படி இருந்தும் மொத்தம் 20 மில்லியன் மக்கள் இடப்பெயர்ச்சி செய்யப்படுவர். அதோடு, அவர்கள் மறுகுடியமர்த்தப்படும் தீவுகள்,

நிரந்தர வேளாண்மைக்கு ஏற்றதாக இல்லை. அங்குள்ள மலைவாசிகளுக்கும் சுற்றுச்சூழலுக்கும் இது ஏற்படுத்தப்போகும் பிரச்சனைகளை சொல்லிமாளாது. இத்திட்டத்தை எதிர்த்தவர்கள் — பெரும்பாலும் மலைவாசியினர்—இந்தோனேசிய ராணுவத்தால் நசுக்கப்பட்டனர்.

இத்திட்டத்திற்கு 75 பில்லியன் டாலர்கள் செலவாகும் என்று கணக்கிடப்பட்டிருந்தது. அரசு செலவைக் குறைக்க, பல தீவுகளில் தோட்டங்களை ஏற்படுத்தி, மக்கள் தாங்களாகவே இடம்பெயர்வார்கள் என்று எதிர்பார்த்தது. அப்படியிருந்தும், 1984-89 இல் இது 3.5 மில்லியன் டாலராக இருந்தது. அதாவது இது மொத்த தேசிய செலவினத்தில் 6 சதவிகிதம் ஆகும்.

1985 இல் உலக வங்கி இதுவரை கொடுத்திராத அளவில் பிரம்மாண்டமான 160 மில்லியன் டாலர் கடனைக் கொடுத்தது. இதில் ஆசிய வளர்ச்சி வங்கி, அமெரிக்கா, மேற்கு ஜெர்மனி, நெதர்லாந்து ஆகியவையும் குதித்தன. இத்திட்டத்திற்கு ஆதரவு அளிப்பதால், ஜாவா தீவின் மக்கள்தொகை குறையும், மண் அரிப்பு குறையும், புதிதாக 200,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும், உபயோகப்படுத்தப்படாத நிலங்கள் உபயோகப்படுத்தப்படும் என்று உலக வங்கி கூறுகிறது. இதற்கு ஆதரவு தருபவர்கள், இத்திட்டம், நிலமற்ற ஏழைக் குடும்பத்தினர், ஒரு சிறுதுண்டு நிலமாவது பெற இது ஒரு அரிய வாய்ப்பு என்று முழங்குகின்றனர். அதோடு பூர்வீக மக்களும் இதனால் பயனடைவர் என்றும் கூறுகின்றனர். ஆனால் 'எக்காலஜிஸ்ட்' பத்திரிகைப்படி இவை முற்றிலும் பொய்யாகும். அங்கு இயற்கை சூறையாடப்படுவதோடு, மக்களின் மனித உரிமையும் பாதிப்பிற்கு உள்ளாகிறது. கொள்கையளவில், இடப்பெயர்ச்சி செய்யப்படுபவர்களுக்கு நிலம், உணவு

உதவி, வேளாண்மை இடுபொருட்கள் ஆகியவை கிடைக்கும் என்றாலும் நடைமுறை யதார்த்தம் வேறுமாதிரி உள்ளது.

நல்ல இடம் அதிகம் இல்லாததால், வெப்பமண்டல மழைக்காடுகளை அழிக்க திட்டமிடப்பட்டது. அவ்வேலை தனியார் ஒப்பந்தக்காரர்களிடம் விடப்பட்டது. பல இடங்களில் அவர்கள் லாபகரமான மரங்களை மட்டும் வெட்டிவிட்டு அடிமரங்களை அப்படியே விட்டுவிட்டனர். அப்புறப்படுத்தப்பட்டோர் வந்துசேர்ந்தபோது, நிலத்தைத் திருத்தும் பொறுப்பும் அவர்கள் தலையில் விழுந்தது.

காட்டை அழித்துத் திருத்த உபயோகப்படுத்தப்பட்ட கன இயந்திரங்கள் மண்ணைப் பாதித்தன. வாக்குறுதி செய்யப்பட்ட வீடுகள் கட்டித்தரப்படவேயில்லை. சாலைகள் போன்ற பிறவசதிகள் எட்டிக்கூடப் பார்க்கவில்லை. உள்ளூர் பத்திரிகைகள் மற்றும் பிற தகவல்களின்படி, அந்நிலங்கள் நெல் விளைச்சலுக்கு ஏற்றதாக இல்லை. தப்பித்தவறி விளைந்தவற்றை எலிகளும், கரடிகளும் தின்றுவிடும். இவர்களுக்கோ வேறு பயிர் பயிரிடத் தெரியாது. அதோடு மக்கள் புலி, யானை போன்ற வனவிலங்குகளை அடிக்கடி எதிர்கொள்ளவும் வேண்டியிருந்தது. 1985 இல் ஓரிடத்தில் குடியமர்த்தப்பட்ட 1000 பேரில் 12 பேர் மட்டுமே அங்கு இருந்தனர். மீதிப்பேர் மீண்டும் ஜாவாவிற்கே ஓடி வந்துவிட்டனர். அதே வருடம் மேற்கு ஜாவாவிற்கு விஜயம் செய்த பாராளுமன்றக் குழு, இவ்வாறு திரும்பி வந்தவர்கள் காவலில் வைக்கப்பட்டிருந்ததைக் கண்டுபிடித்தது. காரணம் என்ன தெரியுமா? அவர்கள் ஒரு எதிர்மறையான தாக்கத்தை விளைவித்து, பின்னர் போகும் மக்களின் உற்சாகத்தைத் தடுத்துவிடக்கூடாது என்பதுதான்!

முப்பத்தைந்து வருடங்களாக வெப்ப மண்டல மழைக் காடுகளை ஆராய்ந்துவரும் நிகோலாஸ் குப்பீ என்பவர் இத்திட்டம் தோற்றுவித்துள்ள சூழலியற் பேரழிவுபற்றி இவ்வாறு தெரிவிக்கிறார்

ஜாவாவில் மொத்த வேளாண்மை நிலங்களில் 35 சதவிகிதம், வெறும் 1 சதவிகிதம் விவசாயிகள் வைத்துள்ளனர். மீதி பெரும்பாலானோர் அரை ஏக்கருக்கும் குறைவாகவும், கிராமப்புறங்களில் வசிப்பவர்களில் பாதிப்பேர் எவ்வித நிலமும் இல்லாமலும் இருக்கின்றனர். அதனால் லட்சக்கணக்கான ஜாவா மக்களை வேறு இடங்களில் குடியமர்த்த திட்டம் தீட்டப்பட்டது... குறிப்பாக காளிமந்தனுக்கு. அந்த காளிமந்தன் காடுகள் மிக அரிதான இனங்களைக் கொண்டுள்ள, பொருளாதார ரீதியாக மதிப்புமிக்கவையாக விளங்கின. அக்காட்டை அழித்து, சாலைகள் அமைக்க திட்டமிடப்பட்டது.

வருடத்திற்கு 20,00,000 ஏக்கர் காடுகள் வெட்டிச் சாய்க்கப்பட்டன. அதன் பின்னர் அங்கு பயிரிட வந்தவர்கள் மேலும் 5,00,000 ஏக்கரை அழித்தனர். இதே வேகத்தில் போனால் இன்னும் 3 வருடங்களில் காடு இருந்த சுவடுகூட அங்கு இருக்காது. அவ்விடத்தை பார்த்தால் மனம் பேதலித்துப் போகும். எங்கு நோக்கினும், வெட்டப்பட்ட மரங்கள், எரிந்து போன அடிமரங்கள், டிராக்டர் தடத்தில் அமிழ்ந்திருக்கும் வேர்கள்... ஹிரோஷிமா புகைப்படங்களை அவை நினைவுறுத்தின... இந்தோனேஷியா தனது சொந்த மக்கள் மீதே ஒரு அணுகுண்டைப் போட்டதுபோல அவ்விடம் காட்சியளித்தது.

இவ்வழிவின் ஊடாக, உள்ளூர் பூர்வீகக்குடிகளின் தேவைகள் அடித்துச் செல்லப்பட்டன. அரசின் அதிகார பூர்வமான அறிவிப்பு அவர்கள் தனித்திருக்கும்

புறவுலகவாசிகள் என்று வர்ணிக்கிறது. இந்த இடப் பெயர்ச்சி திட்டத்தில் அவர்கள் குறுக்கே வரக்கூடாது என்பதற்காக ஒரு சட்டமே இயற்றியது. அதோடு, இம்மக்களை ஒன்று திரட்டி, பணப் பயிர் தோட்டங்களில் மலிவுக் கூலிகளாகப் பயன்படுத்த விரும்பியது. மலைவாசியினர் குறித்து சமூகவியல்துறை சில குறிக்கோள்களை நிர்ணயித்தது. அவை:

ஆன்மவாதச் சார்பை ஒழித்து, ஒரு கடவுளை மட்டும் கொண்டிருக்கிற மத அமைப்பை உருவாக்குதல்.

அரசு மற்றும் அரசாங்கம் குறித்த அவர்களின் விழிப்புணர்வை விரிவடையச் செய்தல்

அறிவுபூர்வமான சிந்தனைக்கான திறனை வளர்த்தல்,

வேளாண்மை மற்றும் வேளாண்மை சாராத துறைகளின் உற்பத்தியை அதிகரிப்பதற்கான திறனை ஊக்குவித்தல். அழகியல் கருத்தாக்கம் மற்றும் மதிப்புகளை பேணி வளர்த்தல்—இது இந்தோனேஷிய சமுதாயத்தின் மதிப்புகளோடு ஒத்துப்போகிற கலை, கலாச்சார பொருட்களை உற்பத்தி செய்ய அவர்களுக்கு உதவும்.

பொறுப்புள்ள எந்தவொரு மானிடவியலாளரும், இந்நடவடிக்கைகள், மலைவாசியினர் மீதான கலாச்சார இனக்கொலை என்பதை அடித்துக் கூறுவர்.

இத்திட்டம் குறைந்தபட்சம், மக்கட்தொகைப் பெருக்கத்தையாவது கட்டுப்படுத்தியதா? இல்லை. இதை கடன் கொடுத்த நாடுகள், 1985 மார்ச்சில் நடத்திய ஒரு ரகசியக் கூட்டத்தில் ஒப்புக்கொண்டுள்ளன. அதாவது கடந்த 150 ஆண்டுகளாக, ஜாவாவில் இருந்து மக்களை வெளியேற்றியதால் எவ்வித பயனும் ஏற்பட்டு விடவில்லை.

இடம் பெயர்வோர், இனச் சிறுபான்மையினர் ஆகியோரையும், சுற்றுச்சூழலையும் எப்படிக் கையாள்வது என்பது குறித்து, உலக வங்கி எண்ணற்ற விதிமுறைகளையும், விளக்கங்களையும் கொண்டிருந்தாலும், இந்தோனேஷியா விஷயத்தில் அதை ஒட்டுமொத்தமாக பறக்கவிட்டுவிட்டது. சில அதிகாரிகள் இது குறித்து கவலை எழுப்பியதால், அது பலமுறை மறுபரிசீலனை செய்யப்பட்டது. ஆனால் இறுதியாக அது ஒப்புக் கொள்ளப்பட்டதற்குக் காரணம், இந்தோனேஷிய அரசின் வற்புறுத்தலும், உலக வங்கி ஏற்கனவே கொட்டியிருந்த பெரும் நிதியுமாகும்.

சுற்றுச்சூழல் சூறையாடல், பரவலாக்கப்பட்ட வறுமை, மற்றம் இனக்கொலைகள் ஆகியவற்றில் பெரும் அன்னியக் கடனுக்கு குறிப்பிடத்தக்க பங்கு உள்ளதை இனியும் மறுக்க இயலாது. நான், உலக வங்கி ஆதரவுடன் உருவான சூழலியற் சீர்கேடுகளை பட்டியலிடத் துவங்கினால், இந்த அத்தியாயம் மிகவும் நீண்டுவிடும். உதாரணமாக பிரேசிலில் 'ரோன்டோனியா கற்பழிப்பு' என்றழைக்கப்படக்கூடிய 'பேலோனோ ரெஸ்டே திட்டத்'தினால், கிரேட் பிரிட்டன் அளவு நிலப்பகுதியில் காடுகள் அழிக்கப்பட்டுள்ளன.

உலகிலேயே பெரிய வளர்ச்சித் திட்டமான கிராண்ட் கராஜாஸ் இரும்புத்தாது திட்டம் (டுக்குரி அணைத் திட்டம் இதன் கீழ்தான் வருகிறது) 62 பில்லியன் டாலரை முழுங்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இதற்கு ஐரோப்பிய கூட்டமைப்பின் பங்களிப்பு 600 மில்லியன் டாலர்கள். இத்திட்டம் பிரேசிலின் படுபயங்கர கடன் பிரச்சனையை தீர்க்கும் என்பது அவ்வரசின் நினைப்பு.

1984 இல் இந்தோனேஷியாவின் மொத்தக் கடன் 23 பில்லியன் டாலர்கள்; பிரேசிலுடையது 66 பில்லியன்

டாலர்கள். இவ்விரு நாடுகளும் சேர்ந்து 93 பில்லியன் டாலர் பொதுப் பணத்தைக் கடனாகப் பெற்றுள்ளனர். கடன் கொடுத்த நாடுகளிலுள்ள பொதுமக்களும், உலக வங்கியின் பங்குதாரர்களும், இப்பணம் சூழலியல் பேரழிவிற்கு வழிவகுக்கிறது என்பதைத் தெரிந்தால் எவ்வாறு அதை எதிர்கொள்வார்கள்?

அமெரிக்காவிலுள்ள சூழலியலாளர்கள், இதில் தீவிரமாக இறங்கி போராடி 1985, 1986 காங்கிரஸில் பல சட்டங்கள் இயற்ற வழிவகுத்துள்ளனர். உலக வங்கி உட்பட அனைத்து வளர்ச்சி வங்கிகளும், சூழலியற் பாதையில் நடக்க வேண்டும் என்று அச்சட்டங்கள் வலியுறுத்துகின்றன. இவ்வங்கிகளின் பங்கு மூலதனத்தில் பெரும்பகுதி அமெரிக்காவிடம் உள்ளதால், அங்கு கொண்டுவரப்படும் சட்ட விதிமுறைகள், மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன. இச்சட்ட விதிமுறைகளில் புதுமையானதும், முக்கியமானதுமான ஒன்று என்னவென்றால், இவ்வங்கிகள், திட்டமிடுதலின் அனைத்து கட்டங்களிலும், அரசு சாரா சுற்றுச்சூழல் இயக்கங்கள் மற்றும் பூர்வீகக் குடிமக்களின் அமைப்புகள் ஆகியவற்றின் பங்கேற்பை ஏற்றுக் கொள்ளவேண்டும், என்பதாகும்.

இவ்வளர்ச்சி வங்கிகள் தங்களது ரகசியத் தன்மைக்கு மிகவும் பெயர்போன ஒன்றாக விளங்கியதால், அரசு சாரா அமைப்புகளின் பங்கேற்பு என்பதை நடைமுறைப் படுத்துவது மிகவும் பிரச்சனைக்குரிய ஒன்றாக இருக்கும். எதைக் கேட்டாலும் ரகசியம் என்று காரணம் காட்டி அதை வெளியே சொல்லாதிருப்பது உலக வங்கியின் வழக்கம். உதாரணமாக பிரபல சுற்றுச்சூழலியலாளர் புரூஸ் ரிச் உலக வங்கி ஏன் பிரேசிலில் கண்மூடித்தனமான காடுகள் அழிப்பு, பூர்வீகக் குடிமக்களின் நில ஆக்கிரமிப்பு, வேளாண்மைக்குப் பொருந்தாத இயற்கை நிலங்களின்

சூறையாடல் ஆகியவற்றிற்கு நிதியுதவி செய்து ஆதரவளிக்கிறது என்று கேட்டார். அதற்கு உலகவங்கி, அத்திட்டம் குறித்து இன்னும் பிரேசில் அரசுடன் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருப்பதால், அதைக் குறித்து விவாதிக்கும் சுதந்திரம் தமக்கில்லை என்று கூறிவிட்டது.

அதிர்ஷ்டவசமாக, பணம் இவர்களைப் பேசவைக்கிறது. அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் காஸ்டென், சில சீர்திருத்தங்களை ஏற்றுக்கொள்ள வளர்ச்சி வங்கிகள் மறுத்துவிட்டதால், இவற்றிற்கு வழங்கப்படும் நிதியுதவி குறைக்கப்பட்டதாகத் தெரிவிக்கிறார். காங்கிரஸிற்கு, இவ்வங்கிகளின் வாய்ப்பேச்சு போதுமானதாக இல்லை; கொள்கைகளிலும், நடைமுறைகளிலும், உண்மையான, பெரிய மாறுதல்கள் தேவை.

இப்பொழுது இவ்வளர்ச்சி வங்கிகள் ஒன்று தங்களது சன்னலைத் திறக்க வேண்டும்; அல்லது நிதியுதவிக்கான கதவுகள் மூடப்பட்டுவிடும். அமெரிக்க காங்கிரஸ், தனது இந்த கட்டுப்பாடுகளால் மட்டும் அவ்வங்கிகளைப் பணிய வைக்க முடியாது என்பதை உணர்ந்துள்ளது. அமெரிக்காவை பின்பற்றி, கடன் கொடுத்த, கடன் வாங்கிய பிற நாடுகளும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பதை சாதாரண நடைமுறைத் திட்டத்தோடு ஒன்றிணைந்த ஒன்றாக ஆக்க முயல வேண்டும். 'பசுமை' ஆர்வலர்களுக்கு, இந்த அமெரிக்க சட்டவிதி முறைகள் ஒரு மாதிரியாக அமையும்.

## இயற்கை கொடுத்ததை திருப்பிக் கொடுக்கும்— வட்டியோடு

கண்மூடித்தனமான காடுகள் அழிப்பு, உலகின் மொத்த-தட்பவெப்ப நிலையில் மோசமான தாக்கத்தை விளைவிக்கும் என்பது உறுதி. அது எவ்வளவாக இருக்கும் என்பது

குறித்து தட்பவெப்பவியலாளர்களுக்கிடையே வேண்டுமானால் கருத்து வேறுபாடு இருக்கலாம். ஆனால் அதற்கு நாம் செலுத்த வேண்டிய பொருளாதார அபராதம் கடுமையாக இருக்கும் என்பதை நாம் ஏற்கனவே உணரத் துவங்கிவிட்டோம். பூர்வீக மக்களின் வசிப்பிடங்களான காடுகள் எரிபொருள் சுரங்கமாக, எண்ணற்ற தாவர, விலங்கினங்களுக்கு அடைக்கலம் தந்து ஆதரிக்கிற ஒன்றாக விளங்குவதோடு மட்டுமல்லாமல், பொருளாதார ரீதியாக ஒரு சரியான பாத்திரத்தை வகிக்கும் ஒன்றாகவும் இருக்கிறது. ஏனெனில் ஏராளமான முதலீட்டை விழுங்குகிற அதே திட்டங்களை இவை பாதுகாக்கின்றன. இதில் அணைகளும் அடக்கம்.

உலகவங்கியின் நிபுணர்குழு இவ்வாறு விவரிக்கிறது:

காடுகள் வெட்டியழிக்கப்படும்போது, நீர்நிலைகள் மண்அரிப்பு காரணமாகத் தூர்ந்து போய்விடுகின்றன. இது மின்சக்தி உற்பத்திக் குறைவிற்கு வழிவகுக்கிறது. ஆகவே நீர்மின்சக்தி திட்ட முதலீடுகளின் பொருளாதார ஆயுள் குறுகிவிடுகிறது. உதாரணமாக, பிலிப்பைன்சில் உள்ள அம்புக்லா அணையின் ஆயுள், காடுகளின் அழிப்பு காரணமாக 60 லிருந்து 32 ஆகக் குறைந்துவிட்டது.

கொலம்பியாவில்கூட ஒருமாபெரும் அணை, தனது இயல்பான திறனில் ஆறில் ஒருபங்கு திறனிலேயே இயங்குகிறது. காரணம்? காடுகள் அழிப்பு. இதனால் தலைநகரில் அடிக்கடி மின்வெட்டு.

காடுகள் பூமியை நிலைப்படுத்தி, மண் அரிப்பைத் தடுக்கின்றன. காடுகள் காணாமல் போய்விடும்போது, அங்கு இருக்கும் மண்ணும் மறைந்துவிடுகிறது. ஆனால் அவை வேறு எங்கும் போகாமல், ஆறுகள், கால்வாய்கள், துறைமுகங்கள் ஆகியவற்றை தஞ்சமடைந்து விடுகின்றன. காடுகள் அழிப்பு, பனாமாக்கால்வாய் தொடர்ச்சியாகச் செயல்படுவதைப் பாதிக்கச் செய்கிறது. அர்ஜென்டினா,

போனஸ் அயர்ஸ் வரை கப்பல்கள் வர வழிவகுக்க, ஆற்று மண்ணை வாரி எடுக்க வருடத்திற்கு 10 மில்லியன் டாலரை செலவிட்டு வருகிறது. தாய்லாந்தில், காடுகள் அழிப்பு காரணமாக, பல முக்கிய நீர்வழிகள், இன்று போக்குவரத்திற்கு லாயக்கற்றவையாகி விட்டன.

இயற்கையாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிற புயல், வெள்ளம், வறட்சி போன்றவை, காடுகள் அழிப்பு காரணமாக மாபெரும் பேரழிவுகளாகி விடுகின்றன. வேளாண்மையிலும் காடுகளுக்கு முக்கியப் பங்கு உண்டு. அவை நீரை ஒரேயடியாக விட்டுவிடாமல் சிறுகச்சிறுக விடுவதால், வறட்சி அவ்வளவு தீவிரமாக இருப்பதில்லை.

கிட்டதட்ட அனைவரும், வெப்பமண்டலக் காடுகள் பயிருக்கு ஏற்றதல்ல என்பதை உணர்ந்துள்ளனர். கிட்டத்தட்ட அனைவரும். ஆனால், அரசின் வாய் ஜாலத்தில் ஏமாந்துவரும் எண்ணற்ற ஏழை விவசாயிகள் இதற்கு விதிவிலக்கானவர்கள். இது ஒரு கடுமையான குற்றம். ஆனால், பிரேசில் இன்றும் இந்த ஈனத் தொழிலில் ஈடுபட்டு வருகிறது. நிலமற்ற ஏழை விவசாயிகளை காடுகள் வெட்டப்பட்ட பகுதிகளுக்கு அங்கு ஏதாவது பயிர் செய்து பிழைத்துக்கொள்ள அனுப்பி விடுகின்றது. ஏன் பிரேசில் போன்ற ஒரு நாடு, இப்படிப்பட்ட பைத்தியக்காரத்தனத்தைத் தொடர்ந்து செய்துவரவேண்டும்? இதற்கு காரணம் கடன் நெருக்கடி தான். பிரேசில் வருடந்தோறும் 12 முதல் 14 பில்லியன் டாலர் வரை வாங்கிய கடனுக்கு வட்டிகட்டி வருகிறது. அதனால் அது சோயாபீன்ஸ் போன்ற பணப்பயிரை வளர்த்து கடனை அடைக்கவேண்டிய கட்டாயத்தில் உள்ளது. ஆனால் அமெரிக்காவில் சோயா அதிகமாக உற்பத்தி செய்யப்படுவதால், வரும் வருவாயைத் தொடர்ந்து பெற, பிரேசில் இன்னும் அதிகமாக உற்பத்தி செய்யவேண்டிய நிலையில் உள்ளது.

பிரேசிலின் பிரபல சூழலியல் நிபுணரும், பொறியியலாளரும், வேளாண்பொருளாதார நிபுணருமான ஜோஸ்லட்ஜென்பர்கர், 1984 செப்டம்பரில், அமெரிக்க காங்கிரஸ் முன் வாக்குமூலம் அளித்தார். மிக வளமான தென்பிரேசிலில் சோயாபீன்ஸ், ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் பயிரிடப்படுவதால், நிலங்களை பணக்காரர்களுக்கு விற்றுவிட்டு வெறுங்கையுடன் வெளியேறும் ஏழை விவசாயிகள், அமேசான் ரான்டோனியா பகுதிகளில் குவிந்து கொண்டிருந்தனர் என்று அவர் தெரிவித்தார். அரசு அவர்களை ரான்டோனியா பகுதிக்கு கவர்ந்திழுக்க, தொலைக்காட்சியில் பல விளம்பரங்களை வெளியிட்டது.

இந்த ரான்டோனியாவிற்கு மக்களை அனுப்பும் திட்டத்தை அரசு துவக்கியதற்குக் காரணம், அது உண்மையான நிலச்சீர்திருத்தங்களை அமல் செய்து, தோட்ட முதலாளிகளைப் பகைத்துக்கொள்ள விரும்பாததுதான். அதாவது தெற்கு மற்றும் வடகிழக்கில் இருக்கும் பரம ஏழைகளை அப்புறப்படுத்திவிட்டால், அவர்களால் தொல்லை ஏதும் வராது என்பதாகும். அதனால் அவர்கள் உலக வங்கிக் கடன் உதவியுடன், ரான்டோனியாவில் தூக்கி எறியப்பட்டனர். லட்ஜென்பர்கர் மற்றும் வேறு சில நிபுணர்கள் இங்கு பிரச்சனை நிலப் பற்றாக்குறை அல்ல. நிலஉடமை ஓரிடத்தில் குவிக்கப்பட்டிருப்பது தான்.

இப்பொழுது மக்களை ரான்டோனியாவில் கொண்டு தள்ளியதால், காடுகள் அழிப்பு பிரச்சனை இன்னும் வலுவாகும். தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலங்களில் முதல் வருடம் அறுவடை மிக மோசமாக இருந்தவுடன், அவர்கள் வேறு இடங்களுக்குச் சென்று காடுகளை அழிக்கத் தலைப்படுவர் அது மொட்டையடிக்கப்பட்ட பிறகு, வேறு ஓரிடம் என்று தொடரும்

இப்பயணம். இதனால் அக்காடுகளில் வசித்து வந்த அமெரிந்தியர்கள் என்ற பூர்வீகக்குடிகள், கலாச்சார ரீதியாக அழிக்கப்பட்டுள்ளனர். லட்ஜென்பர்கர் இவ்வாறு கூறுகிறார் :

காடுகளின் சூழலியல் பற்றி, அதை உபயோகிப்பது குறித்த அவர்களது திறமை, ஆகியவற்றை நாம் குறித்துக் கொள்ளும் முன்பே அது கொள்ளைபோய்விட்டது. ஒரு தாவர இனத்தின் அழிவு போல, இக்கலாச்சாரங்களின் அழிவும், மீண்டும் சரி செய்ய இயலாத ஒன்றுதான். இப்பூர்வீக குடிகளின் கலாச்சாரம், ஆயிரக்கணக்கான வருடங்கள், சூழல் அமைப்போடு இயைந்து வாழ்ந்ததன் விளைவாக உருவான ஒன்றாகும்.

அமெரிக்க காங்கிரஸ் முன்பு, லட்ஜென்பர்கர், (1) பிரேசிலின் வடகிழக்கில் உள்ள பெருந்தோட்ட முதலாளிகள் சௌகரியமாக பெரும்பண்ணைகளை தக்கவைத்துக் கொள்ளவும், ஏற்றுமதிக்காக ஓரினப் பணப்பயிர்களை வளர்க்கவும் உதவி செய்ய (2) வெப்ப மண்டலக் காடுகளை மொட்டையடித்து அதில் பொருத்தமற்ற வேளாண்மை முறைகளை அமல்செய்ய (3) காடுகளை உருப்படியாக உபயோகிக்கத் தெரிந்த ஒரே மக்கள் அங்கிருந்து துரத்த வகை செய்யும் ஒரு மாபெரும் திட்டத்திற்கு உலகவங்கி மூன்றிலொரு பங்கு நிதி வழங்குவது சரிதானா என்ற கேள்வியை வைத்தார். இருவருடங்களுக்குப் பிறகு சுற்றுச்சூழல் கொள்கையுடன் கூடிய வளர்ச்சிக்கான சட்டவிதிமுறைகள் உருவாக்கப் பட்டன.

ஆனால் கடன் சுற்றுச்சூழல் மீது விதிக்கும் நிர்பந்தம் பிரேசிலோடு மட்டும் நிற்பதில்லை என்பது துயரமானது. நிகோலாஸ் குப்பி, உலகிலுள்ள முக்கிய வெப்பமண்டலக்

காடுகளை நாடுகள் வாரியாக பிரித்து தொகுத்து உள்ளார். அதில் சுவையான விஷயம் என்னவென்றால், அதில் முன்னணியில் இருக்கும் 5 நாடுகளான பிரேசில், இந்தோனேஷியா, சயர், பெரு மற்றும் கொலம்பியா ஆகியவை, பெருங் கடன்பட்டிருக்கும் நாடுகளாகவும் விளங்குவதுதான். இந்நாடுகளில், உலகில் இன்னும் மீதமிருக்கும் வெப்பமண்டலக் காடுகளில் 60 சதவிகிதம் உள்ளது. அதை அழிக்க உள்ள நிர்பந்தம் மிகவும் அதிகம். ஆனால் அது அழிக்கப்பட்டு விட்டால், அதை மீண்டும் உருவாக்க, அனைத்து விதை மற்றும் கன்றுகள் கிடைக்கும் பட்சத்தில்—அது சந்தேகம்தான் — 400 வருடங்கள் ஆகும். நாங்கள் மரம் நடும் திட்டம் வைத்து உள்ளோம் என்று சில நாடுகள் விவாதிக்கலாம். இது மிகவும் மேலோட்டமான ஒரு தீர்வு. வியாபார ரீதியாக உபயோகமுள்ள மரங்கள், காடுகள் மொட்டையடிக்கப் பட்ட நிலப் பகுதிகளில் வளரும் என்பது உண்மைதான். ஆனால் ஒரே ஒரு முறைதான் அது வளரும். அவை மேல் மண்ணை நாசமாக்கிவிடும். ஒரு வெப்ப மண்டலக் காடு, மூடப்படாத சிலந்தி வலை. அதில் இருக்கும் பாகங்கள் அனைத்தும் இன்றியமையாதவை. அதற்கு பாதிப்பு ஏற்பட்டால், அது பாலைவனமாகிவிடும். நிகோலாஸ் குப்பி, கடனுக்கும், காடு அழிப்பிற்கும் உள்ள தொடர்பை இவ்வாறு விவரிக்கிறார்:

உலக வங்கி போன்றவற்றிலிருந்து பெறப்படும் கடன்கள் ஏழை நாடுகளில், உண்மையில் காடுகள் அழிப்பை ஊக்குவிக்கும் என்ற பயம் அதிகரித்து வருகிறது; இதில் இரண்டு நன்மைகள். முதலில் வெட்டப் பட்ட காடுகளை விற்றுவிடலாம். பின்னர் அதில் மரம் நட, சுற்றுச்சூழல் பாதிப்பை சரிசெய்ய மேலும் கடன் வாங்கிக் கொள்ளலாம். அக்கடனை அடைக்க மேலும் காடுகள் வெட்டப்பட வேண்டும். கடன் கொடுத்த வங்கி களுக்கு கொள்ளை வட்டி, கடன் கொடுத்த நாடுகளுக்கு

அரசியல், பொருளாதார அதிகாரங்கள், ஏற்றுமதி வாய்ப்புகள் கிடைக்கின்றன. ஆக எல்லோருக்கும், ஏதோ ஒரு விதத்தில் லாபம்; சுற்றுச்சூழலைத் தவிர. அது மிகமிக வேகமான விதத்தில் அழித்து நொறுக்கப் படுகிறது.

ஆமாம், உலகின் பிற பகுதியில் இருக்கும் நாம் ஏன் இதைப் பற்றி கவலைப்பட வேண்டும்? எங்கேயோ காடுகள் வெட்டப்பட்டால் நமக்கு என்ன? அப்படியல்ல நிலைமை. இப்புவி எங்கும் உள்ள உயிரமைப்பும் ஒரு மூடப்படாத சிலந்தி வலை போன்றது; ஓரிடத்தில் தோன்றும் தட்பவெப்ப நிலை மாற்றம் எல்லோரையும், எல்லா இடத்தையும் பாதிக்கும். உலக வங்கி, மற்றும் நிதி நிறுவனத்திற்கு பிடித்த மாதிரி, அதை பொருளாதார கண்ணோட்டத்தில் பார்க்கலாமா? வெப்ப மண்டலக் காடுகளில் உண்ணக் கூடிய 80,000 வகை இனத் தாவரங்கள் உள்ளன; இதில் ஒன்றைக்கூட மனிதன் பயிர் செய்வதில்லை. இன்று உலகின் உணவுத் தேவையில் 90 சதவிகிதத்தை வெறும் 16 தாவரங்கள் மட்டுமே அளிக்கின்றன. இந்த 80,000 தாவரங்களில் ஏதாவது ஒன்று, நமக்கு மிகவும் தேவைப்படும் ஒரு மாற்று உணவை அளிக்கக்கூடும். மேலும் காடுகள் மருத்துவ குணமிக்க ஏராளமான மூலிகைகளையும், ஆடை நெய்ய, அழகு சாதனப் பொருட்களை உருவாக்க, இன்னும் ஏனைய தொழில் உபயோகங்களுக்குரிய பல தாவரங் களையும் அளிக்கிறது. ஆனால் அங்கு இருக்கும் வர்த்தக ரீதியாக உபயோகப்படும் 20 சதவிகிதம் மரங்களுக்காக காடுகள் அழிக்கப்படுகின்றன. பெரும்பாலான சமயங் களில், முக்கிய மரங்கள் வெட்டப்பட்ட பிறகு மீதமிருக் கும் 90—98 சதவிகிதம் மரங்கள் அப்படியே உபயோகிக்காமல் விட்டுவிடப்படுகின்றன.

இதே போக்கு தொடர்ந்தால், கி. பி. 2000 வாக்கில் உலகில் மொத்தமுள்ளதாக கணிக்கப்பட்டுள்ள 3.5 முதல்

10 மில்லியன் வரையுள்ள தாவர, விலங்கினங்களில் 15 முதல் 20 சதவிகிதம் வரை ஒரேயடியாக அழிந்துவிடும். இதை வேறு யாரும் கூறவில்லை. இரு உலக வங்கி நிபுணர்கள் கூறுகிறார்கள். மீண்டும் புதுப்பித்துக் கொள்ளக்கூடிய சக்தி ஆதாரங்கள், தொழிற் பொருட்கள், மருந்துகள், வேளாண்மைக்கான மரபியல் உள்ளீடுகள், உயிரியல் ஆய்விற்கான இடுபொருட்கள் ஆகியவை, இதனால் அழிந்துவிடும். நாம் உயிர் வாழத் தேவையான மரபியல் வேறுபாடு, வெப்பமண்டலக் காடுகளில்தான் இடம்பெற்றுள்ளது. இதேவேகத்தில் போனால், வெப்பமண்டலக் காடுகளில் என்னவிதமான மரபுக்கூறு வளங்கள் இருந்தன என்பதைக்கூட நம்மால் அறிய முடியாமல் போய்விடும்.

இதுதவிர வேறு சில கடன்—சுற்றுச்சூழல் தொடர்புகளும் இருக்கின்றன. சர்வதேச நிதிநிறுவனம் அரசுச் செலவுகளை குறைக்க நிர்பந்திக்கும் போது, முதலில் வைக்கப்படுவது சுற்றுச்சூழல் செலவுகள்தான். காடுகள் மட்டுமல்லாமல், இருக்கும் அனைத்து இயற்கை வளங்களும், வட்டியை கட்டுவதற்காக காசாக்கப்படுகின்றன. சில உதாரணங்களைப் பார்ப்போமா?

பிரேசிலில்கூட ஒரு சுற்றுச்சூழல் பாதுகாப்புக் கழகம் இருக்கிறது. அதன் நிதிச்செலவு சுருக்கப்பட்டதால், அதில் இருக்கும் ஊழியர்களுக்கு சம்பளம் கொடுப்பதுகூட பிரச்சனையாக உள்ள நிலைமையில் அது இன்று உள்ளது. பிரேசிலின் தேசியப் பூங்காக்களில் உள்ள தீயணைப்பு வீரர்களால் அங்கு பெருகி வரும் தீயைக் கட்டுப்படுத்த முடியவில்லை. கோஸ்டாரீகா, தனது விலை மதிக்க முடியாத நிலத்தடி நீரை வற்றவைத்து, அமெரிக்கர்களுக்கு காய்கறியை ஏற்றுமதி செய்கிறது. இது ஒரு சில வருடங்களுக்குள் தீர்ந்துவிடும். பொலிவியா, அழியும் தருவாயிலிருக்கும் வனவிலங்குகளை ஏற்றுமதி செய்வதில்

மும்முரமாக உள்ளது. மெக்சிகோ சமீபத்தில் 15 அரசு துணைச் செயலாளர்களை வீட்டிற்கு அனுப்பியது; அதில் நால்வர் சுற்றுச்சூழல் தொடர்பானவர்கள். பெரும் கடனை எதிர்கொள்ளும் அரசாங்கங்களுக்கு சுற்றுச்சூழல் பிரச்சனை மிகவும் அற்பமாகத் தெரிகிறது என்று கூறுகிறார் கிறிஸ்டீன் போக்டனோவிச் பின்டெர்ட். அவர் கூறினால் சரியாக இருக்கும்; ஏனெனில் அவர் சர்வதேச நிதிநிறுவனத்தில் வேலை பார்த்து வந்தவர்.

## பின்குறிப்பு

அமெரிக்காவில் இருக்கும் சுற்றுச்சூழல் இயக்க நண்பர்கள், உலக வங்கி உட்பட, வளர்ச்சி வங்கிகள் மாற்றப்படுவதற்கும், அவர்களது கடன்கள் சூழல் ரீதியாக செம்மையான வளர்ச்சியை தூக்கி நிறுத்தும் அளவிற்கு மாறுவதற்கும், முன் எப்போதைக் காட்டிலும் இப்பொழுது அதிக சந்தர்ப்பம் இருப்பதாக உணர்கின்றனர். பார்பர் கானபிலின் புதிய தலைமையின் கீழ், உலக வங்கி, இதுவரை கேலிக்கிடமாக இருந்த சிறிய சுற்றுச்சூழல் துறையை விரிவாக்கி, சுற்றுச்சூழல், பூர்வீக மக்கள் நலன் பற்றி அக்கறை செலுத்தத் துவங்கியுள்ளது. இதை மேலும் வலுவாக்க, வடக்கில் உள்ள சுற்றுச்சூழல் இயக்கங்கள் அதிக நிர்பந்தத்தை தங்களது அரசு மீதும், வளர்ச்சி வங்கிகள் மீதும் ஏற்படுத்த வேண்டியது மிகவும் முக்கியமானது. இதில் தெற்கின் ஆதரவு மிகவும் இன்றியமையாதது என்பதை வலியுறுத்தத் தேவையில்லை. வரலாற்றில் முதல்முதலாக, மனித உரிமை இயக்க ஆர்வலர்கள், சூழலியலாளர்கள், பூர்வீக மக்களுக்கான இயக்க உறுப்பினர்கள் ஆகியோர் ஒன்றிணைந்து, வளர்ச்சி வங்கிகள் இனியும் சட்டை செய்ய முடியாத விதத்தில் போராட்டத்தில் குதித்து

உள்ளனர். இன்று இல்லையேல் என்றும் இல்லை என்ற ரீதியிலான போராட்டம் இது.

சமீபத்தில் மிகவும் சுவையான, முன்னுதாரணம் ஒன்று நிகழ்ந்துள்ளது. கன்சர்வேசன் இண்டர்நேஷனல் என்ற தனிப்பட்ட சுற்றுச்சூழல் அமைப்பு ஒன்று, பொலிவியாவின் 6,50,000 டாலர் கடனை சந்தையில், 1,00,000 டாலர் தள்ளுபடி விலையில் வாங்கியுள்ளது. அதற்கு பதிலாக, பொலிவிய அரசு 1.5 மில்லியன் ஹெக்டேர் வெப்பமண்டல மழைக் காட்டை வனவிலங்குகள், தாவரங்கள், மற்றும் பூர்வீக குடிகள் வசிக்கும் இடமாக, இயற்கை சரணாலயமாக மாற்ற ஒப்புக் கொண்டுள்ளது. வீடென் பவுண்டேஷன் நிறுவனம் அந்த 1, 00 000 டாலரை அளித்துள்ளது. மேலும் சில உதவிகள் அளிக்கத் தயாராக உள்ளது. இது ஒரு அற்புதமான கருத்து எனினும், இதை ஒரேயடியாக தனியார் துறையிடம் விட்டுவிடக்கூடாது.

[illegible]



SAB

சவுத் ஏசியன் புக்ஸ்